தமிழரசு
நவம்பர் 2003







# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2034
ஐப்பசி – கார்த்திகை
நவம்பர் 2003
மலர் : 35 இதழ் : 5
விலை ரூ.10


*முதல் பக்க அட்டை :*

சுற்றுலா வளர்ச்சிக்கான சர்வதேச அமைப்பின் "ஸ்கால்" மாநாட்டின் தொடக்க விழா

*இரண்டாம் பக்க அட்டை :*

சென்னையில் உள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.10.2003 அன்று மாலை அணிவித்தார்.

இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் நினைவிடத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 30.10.2003 அன்று மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்.

*நான்காம் பக்க அட்டை :*

நாகப்பட்டினம் மாவட்ட அரசு விழா

## இந்த இதழில்...


- நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 2
- விருதுநகர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 13
- தஞ்சாவூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 24
- "படிக்கும்போதே பணம் ஈட்டுதல்" என்னும் புதிய திட்டம் ..... 34
- 2003–2004ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள் ..... 35
- சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் தமிழகம் ..... 37
- "தமிழகத்தில் உருவாகியுள்ள புதிய தொழில் வாய்ப்புகள்" கருத்தரங்கினை தொடங்கி வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை ..... 45
- விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக அரசு என்றைக்கும் இருக்கும் ..... 52
- ஸ்ரீபெரும்புதூரில் ஒருங்கிணைந்த கண்ணாடித் தொழிற்சாலை ..... 57
- மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் இயற்கை இடர்ப்பாடு குறித்து ஐ.நா.வுடன் அரசு ஒப்பந்தம் ..... 58
- நாட்டிலேயே கிராமப்புற வளர்ச்சியில் தமிழகம் முதலிடம் ..... 59
- சிவகங்கை மாவட்டத்தில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் ..... 60
- மலைக்கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள் ..... 61
- விழுப்புரம் மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயல்பாடு ..... 65
- புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் தமிழக அரசின் சீர்மிகு திட்டங்கள் ..... 67
- திருவாரூர் மாவட்டம் – கடல்நீர் சார்ந்த பண்ணை அமைப்பு முறை செயல்பாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் ..... 71
- உயிரின் மதிப்பு (சிறுகதை) ..... 73
- தூத்துக்குடி மாவட்டத்தில் டேனிடா திட்டச் செயல்பாடுகள் ..... 79



*ஆசிரியரும் வெளியிடுபவரும் :*

**வ. கனகராஜ்,** இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை–தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணா சாலை, சென்னை–600 002.
தொலைபேசி : 25368926/25364906 தொலையச்சு : 25368926
மின் அஞ்சல் : tamilarasu2@yahoo.com




# நீண்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்ட நாகை மாவட்டத்திற்கு பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்கள்

– மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

**நீ**லக்கடல் அலை பாட்டிசைக்க நீண்ட வரலாற்றைத் தன்னகத்தே கொண்டு காலத்தை வென்று நிற்கும் 'கடல் நாகை' நகரம் இது!

என் அன்புக்குரிய நாகை மாவட்ட மக்களாகிய உங்களைக் காண்பதில் எனக்கு மகிழ்ச்சி! உங்கள் முன் பேசுவதில் பெருமகிழ்ச்சி! நிறைவேற்றப்பட்ட திட்டங்களைத் தொடங்கி வைத்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்குவதிலே மாபெரும் மகிழ்ச்சி!

எனது மகிழ்ச்சிக்கு இன்னொரு காரணமும் உண்டு!

நான் முதன்முறையாக முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பு ஏற்றதும், ஒரு சில மாதங்களிலேயே உருவாக்கிய மாவட்டம் இந்த நாகை மாவட்டம்.

இன்றைக்கு சரியாக 12 ஆண்டுகளுக்கு முன்பு இதே அக்டோபர் மாதத்தில் 18–ஆம் நாளில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இந்த மாவட்டத்தைத் தொடங்கி வைத்தேன்.

1991–இல் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் இருந்து நாகப்பட்டினத்தைப் பிரித்துத் தனி மாவட்டமாக ஆக்கும் வாய்ப்பைக் காலம் எனக்குத் தந்தது. இன்று அந்த நாகப்பட்டினம் மாவட்டத்தின் தலைநகர் ஆகிய நாகை நகரிலே உங்களைச் சந்திக்கிறேன்.

உங்கள் அம்மா எங்கு வந்தாலும், சும்மா வருகின்ற அம்மா அல்ல!

கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள பணிகளை, உதவிகளை கொண்டு வருகின்ற அம்மா! அதேபோன்று தான் இன்றும் நாகப்பட்டினத்திற்கும் பல கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களைக் கொண்டு வந்துள்ளேன்.

இன்று நேற்றல்ல; பழங்காலத்தில் இருந்தே இந்தியாவின் கிழக்குக் கடற்கரைப் பகுதியின் சிறந்த துறைமுகமாக விளங்கி வருவது நாகப்பட்டினம். சோழ வளநாட்டின் இரு பெரும் துறைமுகங்கள் பூம்புகாரும், நாகையும் என்றாலும் சோழர் காலத்தில் புகாரை விடச் சிறப்பாக விளங்கியது நாகப்பட்டினம் தான்.

ரோம் நாட்டு நிலவியல் வல்லுநர் தாலமியால் 'நிகமா' என்று அழைக்கப்பட்டதும், மார்க்கோ போலோவால் 'படன்' என்று அழைக்கப்பட்டதும் இந்த நாகப்பட்டினம் தான்.

கடுவை ஆற்றின் முகத்துவாரத்தில் அமைந்து கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் இருந்து கி.பி. 9–ஆம்

நூற்றாண்டு வரை மாமல்லபுரத்துக்கு அடுத்து பெரிய துறைமுகமாக விளங்கியது நாகப்பட்டினம் தான்.

கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் இருந்து சோழர்களின் மிக முக்கியத் துறைமுகமாக உருவாகி பெருமளவில் ஏற்றுமதி இறக்குமதி வாணிபம் நடைபெற்று வந்ததும், சோழர் ஆட்சிக்கு மிகுந்த வருமானத்தைப் பெற்றுத் தந்ததும் நாகப்பட்டினம் தான். கி.பி. 10–ஆம் நூற்றாண்டில் ஒரு பன்னாட்டு வணிகத் துறைமுகமாக தென்னாட்டு வணிக – பொருளாதார வரலாற்றில் சிறப்பானதொரு இடத்தைப் பெற்றது நாகப்பட்டினம் தான்.

சீனம், இலங்கை, அரேபியா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் கூடி தென்னாட்டு வணிகப் பொருட்களை ஏற்றுமதி செய்ததும், பிற்காலத்தில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் வாணிபம் செய்ததும் இதே நாகப்பட்டினத்தில் தான்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய கட்டமான உப்புச் சத்தியாகிரகம் தென்னிந்தியாவில் மூதறிஞர் ராஜாஜி அவர்களின் தலைமையில் நாகை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் தான் நடைபெற்றது என்பது வணிக வரலாற்றில் மட்டும் அல்லாமல் விடுதலைப் போராட்ட வரலாற்றிலும் இந்த மாவட்டம் பெற்ற சிறப்பை எடுத்துக் கூறுவதாய் விளங்குகிறது.

நாகப்பட்டினம் காயாரோகண சுவாமி உடனுறை நீலாயதாட்சியம்மன் திருக்கோயில், சிக்கல் சிங்காரவேலன் திருக்கோயில், வைத்தீசுவரன் கோயில், வைத்தியநாத சுவாமி திருக்கோயில், திருக்கடையூர் அமிர்தகடேஸ்வரசுவாமி திருக்கோயில் முதலான திருக்கோயில்களால் தெய்வீக மணம் கமழும் மாவட்டமாக நாகை மாவட்டம் திகழ்ந்து கொண்டிருக்கிறது.

அதுமட்டும் அல்லாமல் நாகூர் ஆண்டவர் அவர்களின் அடக்கத் தலமான நாகூர் தர்காவும், உலகப் புகழ்பெற்ற வேளாங்கண்ணி ஆரோக்கியமாதா திருக்கோயிலும் இந்த மாவட்டத்தில் தான் அமைந்து இருக்கின்றன. சாதி, மத, இன எல்லைகளைக் கடந்து எல்லாத் தரப்பினரையும் ஈர்க்கின்ற அருள் நிலையங்களாக இவை விளங்கிக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு மூன்று மதங்களுக்கும் முக்கிய மாவட்டமாக விளங்குவது நாகை மாவட்டம் தான் என்பதை எண்ணிப் பார்க்கிற போது நாம் பெருமிதம் அடைகிறோம்.

இந்தியாவிலேயே முதன் முதலாக அச்சேறிய மொழி தமிழ் மொழி தான். 1715 ஆம் ஆண்டு புதிய ஏற்பாடு தேவ நூலை, தமிழில் மொழி பெயர்த்து அச்சேற்றிய பெருமை சீகன்பால்க் (Ziegenbalg) என்னும் ஜெர்மானிய அறிஞரையே சாரும். அவ்வாறு, முதன் முதலாக தமிழ் அச்சகம் அமைந்த இடம் இந்த நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த தரங்கம்பாடி தான்.

இத்தகைய சிறப்புமிக்க நாகப்பட்டினம் நகரில் நடைபெறும் நாகப்பட்டினம் மாவட்டத்தின் அரசு விழாவிலே கலந்துகொண்டு என் அன்புக்குரிய மக்களாகிய உங்களைக் காணவும் உங்களுடன் சில கருத்துகளைப் பரிமாறவும் மொத்தம் 261 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி நலத்திட்ட உதவிகளை வழங்கவும் இன்று வாய்ப்பு கிடைத்தது குறித்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

சீரும் சிறப்பும் மிக்க இந்த நாகப்பட்டினம் மாவட்டத்தில் அனைத்து மக்களும் பயன் அடையும் வண்ணம் 96 கோடியே 21 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 6,714 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். அவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறை மூலமாக 16 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட சுகாதார வளாகங்கள், தொகுப்பு வீடுகள், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், உலர் களங்கள், குளம் தூர் வாரும் பணிகள் போன்ற பல்வேறு பணிகளையும், 11 கோடி ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட 63 கிலோ மீட்டர் நீளமுள்ள 37 சாலைப் பணிகளையும், நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 22 கோடியே 76 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட 15 பாலங்கள் மற்றும் 49 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளையும் இன்று திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த 2001–ஆம் ஆண்டு பருவ மழையின் போது நாகூர்–காரைக்கால் இடையிலான வெட்டாற்றுப் பாலம் இடிந்து பிரதான இணைப்புச் சாலை துண்டிக்கப்பட்டது. இச்சாலையின் முக்கியத்துவத்தை அறிந்து மக்களின் உடனடித் தேவைக்காகத் தற்காலிக மிதவைப் பாலம் அமைத்து, பின்னர் 5 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் வெட்டாற்றுப் பாலம் போர்க்கால அடிப்படையில் மீண்டும் கட்டி முடிக்கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறைந்த மின் அழுத்தக் குறைபாட்டினைக் களைந்திட தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக 3 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பில் திருவெண்காட்டில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தைத் திறந்து வைத்ததில் உள்ளம் மகிழ்கின்றேன்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மூலமாக 1 கோடியே 97 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட மாணவ – மாணவியர் விடுதிகள்,

பள்ளிக் கட்டடங்கள், இணைப்புச் சாலைகள், மயானப் பாதைகள் போன்ற பணிகளை இன்று திறந்து வைத்ததில் அக மிக மகிழ்கின்றேன்.

உலகம் தோன்றி கோடிக்கணக்கான ஆண்டுகளில் கொஞ்சம் கொஞ்சமாக விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளை மனிதன் கண்டுபிடித்திருக்கிறான். ஆனால் அவன் கண்டுபிடித்திருக்கிற ஆயிரக் கணக்கான கண்டுபிடிப்புகளில், 20–ஆம் நூற்றாண்டுக் கண்டுபிடிப்புகள் தான் மிக முக்கியத்துவம் வாய்ந்தவை. உலகம் தொடங்கிய காலத்திலிருந்து 19–ஆம் நூற்றாண்டு வரை உள்ள அத்தனை விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளையும் விட அற்புதமான கண்டுபிடிப்புகள் 20–ஆம் நூற்றாண்டு என்னும் ஒரு நூற்றாண்டிலேயே கண்டுபிடிக்கப் பட்டுள்ளன.



தொலைபேசி, சினிமா, தொலைக்காட்சி, கணினி என்று பல்வேறு பயனுள்ள கண்டுபிடிப்புகள் 20–ஆம் நூற்றாண்டுக் கண்டுபிடிப்புகள்.

சரி, இந்த இருபதாம் நூற்றாண்டின் கண்டுபிடிப்புகளில் எது மாபெரும் கண்டுபிடிப்பு?

தொலைபேசியா, திரைப்படமா, தொலைக்காட்சியா, கணினியா? எது மாபெரும் கண்டுபிடிப்பு?

ஹார்வர்டு பல்கலைக் கழகப் பேராசிரியர் வில்லியம் ஜேம்ஸ் (William James of Harward University) சொல்கிறார்:

"The greatest discovery of my generation is that human beings can alter their lives by altering their attitudes of mind."

"எனது தலைமுறையின் கண்டுபிடிப்புகளில் மிக மிகச் சிறந்த கண்டுபிடிப்பு என்று ஒன்றை மட்டுமே சொல்லுவேன். அது என்ன தெரியுமா? மனிதர்கள் தங்கள் மனோபாவத்தை மாற்றிக் கொள்வதன் மூலம் தங்கள் வாழ்க்கையையே மாற்றிக் கொள்ளலாம் என்பது தான் அந்தக் கண்டுபிடிப்பு."

ஒரு பிச்சைக்காரன் ரயில் நிலையத்தின் முன் நின்று கொண்டிருந்தான். அவனை வழக்கமாக அங்கே பார்க்கிற ஒருவர் பரிதாபப்பட்டு, அவனுக்கு உதவ நினைத்தார். இவன் வாழ்க்கையில் அதிக பட்சம் ஒரு ரூபாய் அல்லது 2 ரூபாய் தான் பிச்சையாகப் பெற்றிருப்பான். நாம் 100 ரூபாய் கொடுப்போம். இவன் ஏதாவது தொழில் செய்து பிச்சை எடுப்பதில் இருந்து விடுபட உதவியாய் இருக்கும்' என்று நினைத்து அந்தப் பிச்சைக்காரனுக்கு 100 ரூபாய் கொடுத்தார். கொடுத்துவிட்டுக் கேட்டார் 'ஒரு சின்ன சந்தேகம். இந்த 100 ரூபாயை வைத்து நீ என்ன செய்யப் போகிறாய்?'

கொஞ்சம்கூடத் தயக்கமில்லாமல் அந்தப் பிச்சைக்காரன் சொன்னானாம் :

'என் பிச்சைப் பாத்திரம் பழசாய்ப் போச்சு. புதிய பிச்சைப் பாத்திரம் வாங்குவேன்' – என்று சொன்னானாம். இதுதான் அவனுடைய பதில்!

100 ரூபாய் பிச்சை கொடுத்தவர், 'இவனுக்கு இலட்ச ரூபாய் கொடுத்தாலும் இந்தப் பிச்சைத் தொழிலை மாற்றிக் கொள்ளப் போவது இல்லை. இவனுக்குத் தொழில் பக்தி அதிகம்!' என்று நினைத்துக் கொண்டு போனாராம்.

மனிதர்களின் மனோபாவத்தில் மாற்றம் இல்லை என்றால், எந்த மாறுதலும் ஏற்படப் போவதில்லை.

சில தலைவர்கள் கூட அப்படித்தான். ஏழையாய் இருக்கையில் தகரப் பாத்திரத்தில் பிச்சை எடுப்பார்கள். பணக்காரர்கள் ஆன பின்னர், தங்கப் பாத்திரத்தில் பிச்சை எடுப்பார்கள்!

அதுவும் கூட அடக்கமான பிச்சையாய் இருக்காது. அதிகாரப் பிச்சையாகத் தான் இருக்கும்.

இந்த அடாவடி அரசியல்வாதிகளிடம் எச்சரிக்கையாய் இருங்கள் என்று உங்கள் அனைவரையும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் பல்வேறு அரசு திட்டப் பணிகளின் பயன்களை அனைத்து மக்களும் பெருமளவில் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சீர்மிகு விழாவில் 157 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்புடைய 2,178 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதைப் பெருமகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றில் முக்கியமான ஒரு சில பணிகளை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

தற்போது அனைத்து மாவட்டங்களிலும் முழு சுகாதாரத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் 11 கோடியே 63 இலட்சம் ரூபாய் செலவில், செயல்படுத்தப்படவிருக்கும் இந்தத் திட்டத்தினை தொடங்கி வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

மின்சார வாரியத்தின் மூலமாக வேட்டைக் காரனிருப்பு கிராமத்தில் 1 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிறுவப்படவிருக்கும் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்திற்கு அடிக்கல் நாட்டியதில் நான் அக மிக மகிழ்கின்றேன்.

பொதுப்பணித் துறையின் மூலமாக 9 கோடியே 9 இலட்சம் ரூபாய் மதிப்பிலான வகுப்பறை ஆய்வகக் கட்டடங்கள், குடிநீர், கழிவறை வசதிகள் போன்ற பணிகளுக்கும், மாணவியர் விடுதிக் கட்டடம், தரங்கம்பாடி டேனிஷ் கோட்டை புனரமைப்புப் பணி ஆகியவற்றிற்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

தமிழக மக்களுக்கு எப்பாடுபட்டேனும் பாதுகாக்கப் பட்ட குடிநீர் வழங்குவதற்கு எனது அரசு எப்போதும் முன்னுரிமை வழங்கி வருகிறது. அவ்வாறு குடிநீர் வழங்குவதற்காகப் பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது.

11 கோடியே 81 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டு இன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்தால் 84,290 மக்கள் பயன் அடைவார்கள் என்பதையும், 7 கோடியே 86 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள ஊரக குடிநீர்த் திட்டங்கள் மற்றும் பள்ளிகளுக்கான குடிநீர்த் திட்டங்களால் 1 இலட்சத்து 38 ஆயிரத்து 469 பேர் பயன் அடைவார்கள் என்பதையும் இந்த வேளையில் மிகவும் மன நிறைவோடு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

நாகப்பட்டினம் நகராட்சி, கீழ்வேளூர் மற்றும் வேளாங்கண்ணி பேரூராட்சிகள், நாகப்பட்டினம், கீழ்வேளூர், கீழையூர், தலைஞாயிறு மற்றும் திருமருகல் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உட்பட்ட கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு 98 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 4 இலட்சத்து 88 ஆயிரத்து 261 பேர் பயனடையும் வண்ணம் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 2,608 ஊரகக் குடியிருப்புகளில் 1,171 குடியிருப்புகளில் முழுமையான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் அளிக்கப்பட்டு வருகிறது. மீதியுள்ள பகுதி அளவு குடிநீர் வசதி பெற்ற 1,437 ஊரகக் குடியிருப்புகளில் 547 குடியிருப்புகளுக்கு முழுமையாக குடிநீர் வழங்கும் திட்டப் பணி பல்வேறு திட்டங்களின் கீழ் நடைபெற்று வருகிறது. எஞ்சியுள்ள 890 கடலோரக் குடியிருப்புகளுக்கு குடிநீர் கிடைக்க தற்போது அடிக்கல் நாட்டப்பட்டுள்ள திட்டம் உதவும். இதன் மூலம், நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள, அனைத்து ஊரகக் குடியிருப்புகளுக்கும், முழுமையான அளவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாகப்பட்டினம் துறைமுகத்தின் வழியாக, மலேசியா மற்றும் சிங்கப்பூர் நாடுகளுக்குப் பயணிகள் போக்குவரத்தும், உணவு தானியங்கள், உரங்கள் ஆகியவற்றின் இறக்குமதியும், வெங்காயம் மற்றும் பொதுச் சரக்குகளின் ஏற்றுமதியும் நடைபெற்று வந்தது.

அக்டோபர் 1984–இல் பயணிகள் கப்பலான எம்.வி. சிதம்பரம் தீ விபத்திற்கு உள்ளானதை அடுத்து பயணிகள் போக்குவரத்து நின்று போய் விட்டது. மேலும், இறக்குமதி – ஏற்றுமதி படிப்படியாகக் குறைந்து துறைமுகத்தின் செயல்பாடே முடங்கிப் போய்விட்டது.

துறைமுகத்திலுள்ள முகத்துவாரக் கால்வாயில் மணல் படிந்து அதன் ஆழம் குறைந்துள்ளதால் மீன்பிடி விசைப்படகு மற்றும் சரக்குப் படகுகளின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இந்தத் துறைமுகத்தின் வளர்ச்சி மிகவும் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு முன்னுரிமை அடிப் படையில், துறைமுக அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ள நான் ஆணையிட்டேன். இதன்படி தமிழ்நாடு கடல்சார் வாரியத்தின் மூலம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் துறைமுகத்தை மேம்படுத்தும் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.



நாகப்பட்டினத்தில் உள்ள மீனவர்கள் எல்லாப் பருவ காலங்களிலும் கடலுக்குள் மீன்பிடி விசைப் படகுகளுடனும், சிறு திறன் கொண்ட டிராலர்களுடனும் மீன் பிடிக்கச் செல்ல இத்துறைமுக வசதியை உபயோகப்படுத்திக் கொள்ள இயலும்.

நாகப்பட்டினம் துறைமுக அபிவிருத்திப் பணிகளின் பயனாக சர்க்கரை, சிமெண்ட், உணவு தானியங்கள், கருப்பஞ்சாற்றுக் கசண்டு போன்ற சரக்குகள், அதிக அளவு ஏற்றுமதி செய்யப்படும் வாய்ப்பும் உள்ளது. இந்த வளர்ச்சிப் பணிகளால் நாகப்பட்டினம் துறைமுகத்தில் ஆண்டுக்கு மொத்தம் சுமார் 5 இலட்சம் மெட்ரிக் டன் சரக்குகளைக் கையாள இயலும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மரம் வெட்டும் நிறுவனம் ஒன்று, காட்டு மரங்களை வெட்டும் உரிமம் பெற்று ஒரு காட்டிலே தொழிலாளர்களை வைத்து மரம் வெட்டிக் கொண்டிருந்தது. ஒரு நாள் அங்கு வேலை பார்க்கும் ஒரு தொழிலாளி அந்த நிறுவனத்தின் முதலாளியைப் பார்க்கப் போனான்.

'என்ன வேண்டும்?' என்று கேட்டார் முதலாளி.

'எனக்கு நியாயம் வேண்டும்' என்றான் தொழிலாளி.

'ஏன் உனக்கு அநீதி இழைக்கப்படுகிறதா?' என்று முதலாளி கேட்டார்.

'ஆமாம். 5 ஆண்டுகளாக நான் இங்கே மரம் வெட்டிக் கொண்டிருக்கிறேன். ஆனால், நான் வாங்கும் சம்பளத்தை விட 2 மடங்கு சம்பளத்தை 6 மாதத்துக்கு முன்பு வந்த ஒரு தொழிலாளிக்குக் கொடுத்திருக்கிறீர்கள்; இது என்ன நியாயம்?' என்று கேட்டான் தொழிலாளி.

'அவன் ஒரு நாளில் நிறைய மரம் வெட்டுகிறான். உன்னால் அப்படி வெட்ட முடியவில்லை. நாங்கள் வேலைத் திறத்தையே பார்க்கிறோம், வேலை செய்த ஆண்டுகளை அல்ல. நீயும் நிறைய மரம் வெட்டு, நிறைய சம்பளம் தருகிறோம்.' என்றார் முதலாளி.

'எப்படி நிறைய மரம் வெட்டுவது ? என்ன முயன்றாலும் முடியவில்லையே,' என்றான் தொழிலாளி.

'நீ புதிதாக வந்த தொழிலாளியைப் பார். எப்படி அதிக மரம் வெட்டுவது என்று அவனையே கேள்' என்றார் முதலாளி.

முதலாளியின் ஆலோசனையை ஏற்று அந்தப் பழைய தொழிலாளி, புதிய தொழிலாளியைச் சந்தித்தான்.

'என்னால் அதிக மரங்களை வெட்ட முடியவில்லை. உன்னால் எப்படி முடிகிறது? அந்த ரகசியத்தை எனக்குச் சொல்வாயா?' என்று பழைய தொழிலாளி கேட்டான்.

'இதில் ரகசியம் ஒன்றும் இல்லை! ஒவ்வொரு மரத்தை வெட்டிய பிறகும் நான் 2 நிமிடம் வேலையை நிறுத்துவேன். அப்போது மரம் வெட்டும் கோடரியை நான் கூர்மைப்படுத்திக் கொள்கிறேன். அதற்குப் பின் அடுத்த மரத்தை வெட்டப் போகிறேன்' என்று பதில் சொன்னான் புதிய தொழிலாளி.

பழைய தொழிலாளியும் அப்படியே செய்தான். நிறைய மரங்களை வெட்டினான்; நிறைய சம்பளம் பெற்றான்.

எந்தத் தொழிலை நீங்கள் செய்கிறீர்களோ அதற்காக உங்களைத் தகுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய முறைகள் தேவை! புதிய வழிகள் தேவை! புதிய உத்திகள் தேவை! புதிய அணுகுமுறைகள் தேவை!

பத்தாம் பசலித்தனமான பாதைகளிலேயே சென்று கொண்டிருந்தால் நீங்கள் பின்தங்கி விடுவீர்கள்!

இந்த உலகம் விரைந்து முன்னேறிக் கொண்டிருக்கிறது; ஒவ்வொரு நாளும் தன்னைப் புதுமைப்படுத்திக் கொண்டிருக்கிறது!

அந்த மரம் வெட்டும் தொழிலாளியைப் போல உங்கள் கருவிகளை மட்டும் அல்ல, உங்களையும் நீங்கள் கூர்மைப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகம் ஒவ்வொரு துறையிலும் இந்தியாவிலேயே முதன்மை நிலை பெற வேண்டும். இந்தியாவில் ஒவ்வொரு துறையிலும் தமிழகம் தான் தலை சிறந்து விளங்க வேண்டும் என்பது தான் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது எண்ணம்! திட்டம்! செயல்பாடு!

அந்த இலக்கை நோக்கியே எனது தலைமையிலான அரசு புத்தம் புதிய திட்டங்களை புதுமையான உத்திகளோடு நிறைவேற்றி வருகிறது.

இந்த முன்னேற்றப் பயணத்தில் நீங்கள் அனைவரும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதே எனது விருப்பம்! இதுவே எனது வேண்டுகோள்!

உழவே முதன்மை தொழில் "உழவர் உலகத்தார்க்கு அச்சாணி" என்பதையும், உழவுத் தொழிலே முதன்மைத் தொழில் என்பதையும் உணர்ந்து உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது தலைமையில் அமைந்த அரசு வேளாண்மைத் துறைக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது.

அதன் அடிப்படையில் நாகை மாவட்டத்தில் நெல் உற்பத்தியினை அதிகரிக்கச் செயல்படுத்தப்படும் ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தித் திட்டத்திற்கு 21 இலட்சம் ரூபாய் மானியமாக ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

பயறுவகைப் பயிர்கள் உற்பத்தியினை மேம்படுத்த தேசிய பயறுவகை அபிவிருத்தித் திட்டம் 4 இலட்சம் ரூபாய் மானியத்தில் இங்கு செயல்படுத்தப் படுகிறது.

மழைநீரைச் சேகரித்து நவீனத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி பயறுவகைப் பயிர்களின் உற்பத்தியை அதிகரித்திட 'பயறு கிராமம்' அதாவது Pulses Village என்ற புதிய திட்டம் இந்த ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்திற்காக இந்த மாவட்டத்திற்கு 6 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

நாகை மாவட்டத்தில் பல்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்களுக்கு 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பருவ மழை பொய்க்கும் காலங்களிலும் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் ஓரளவுக்கேனும் கிடைப்பதற்காக என்னுடைய வழிகாட்டுதலின் பேரில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பு வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ் 930 பண்ணைக் குட்டைகள் 2 கோடியே 79 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன என்பதையும் மனநிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை அமைப்பதில் நாகப்பட்டினம் மாவட்டம் 100 சதவிகித இலக்கை அடைந்துள்ளது என்று மாவட்ட ஆட்சித் தலைவர் பேசுகின்ற போது தெரிவித்தார். நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், இந்த மாவட்ட மக்களாகிய உங்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்திற்கு உரிய நீரைக் கர்நாடகம் திறந்து விடாததாலும், பருவ மழை பொய்த்து விட்டதாலும், காவிரி டெல்டா விவசாயிகள் குறுவைப் பயிர் செய்ய போதுமான தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, பெரும்பாலான விவசாயிகள் குறுவைப் பயிர் செய்ய இயலாத நிலையில் அவர்களுக்கு ஓரளவாவது வருமானம் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த வருடம் மாற்றுப் பயிர் செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்த நான் உத்தரவிட்டேன். அதன்படி பயறுவகைப் பயிர்கள் – நிலக்கடலை, சூரியகாந்தி, எள் ஆகிய எண்ணெய் வித்துப் பயிர்கள் – சிறு தானியப் பயிர்கள், காய்கறிகள் ஆகியவை சாகுபடி செய்யப்பட்டுள்ளன.

மேட்டூர் அணையிலிருந்து காவிரியில் தண்ணீரைத் திறந்து விட, நான் 7.10.2003 அன்று ஆணையிட்டேன். அந்தத் தண்ணீரை முறையாகப் பயன்படுத்தி வேளாண் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு, விவசாயப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடலோர மணல் மேடிட்ட உவர் நிலங்களை மேம்படுத்த எனது அரசு திட்டமிட்டுள்ளது.

மைய அரசின் உதவியுடன் இந்தக் கடலோர மணல் மேடிட்ட உவர்நில மேம்பாட்டுத் திட்டம் நாகப்பட்டினம் – கீழ்வேளூர் பகுதிகளில் 8 கிராமங்களில் செயல்படுத்தப்பட உள்ளது.

**2005–ஆம் ஆண்டிற்குள் 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படும் இந்தத் திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.**

நாகப்பட்டினம் மாவட்டம் 188 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையையும் 50 கடலோர மீனவ கிராமங்களையும் கொண்டது. மீனவமக்கள் தொகை 81,300 ஆகும். இம்மாவட்டத்தில் சுமார் 2,400 விசைப் படகுகளும், 7,600 பாரம்பரிய மீன்பிடி கலன்களும் உள்ளன.




நாகப்பட்டினம் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கியத் தொழிலாக விளங்குவது மீன்பிடி தொழில். நிலத்தின் விளைச்சலை விவசாயிகள் நம்பி இருப்பதைப் போல நீரின் விளைச்சலாகிய மீனை மீனவர்கள் நம்பி இருக்கிறார்கள். எனவே மீனவர் நலம் காக்கும் திட்டங்கள் பலவற்றை உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது தலைமையிலான தமிழக அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

நாகப்பட்டினத்தில் வடக்குப் பொய்கை நல்லூர் – அக்கரைப்பேட்டை பகுதியில் பாலத்தின் கீழ் சிறிய படகுகள் சென்று வரும் வசதியுடன் கூடிய இணைப்புப் பாலம் ஒன்று கட்டுவதற்கு 10 கோடியே 80 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பில் இன்று அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மீனவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திடவும் மீன்பிடி தொழிலை மேம்படுத்திடவும் தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில் தற்போது இயங்கி வரும் மீன் இறக்கு மையத்தின் அதிகப்படியான தேவைகளை நிறைவு செய்யவும், நாகப்பட்டினத்தில் 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய மீன் இறக்கும் மையத்திற்கு அடிக்கல் நாட்டியதில், நான் மகிழ்ச்சி அடைகிறேன்.**

ஏழை மீனவர்களுக்கு இலவச வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் நாகை மாவட்டத்தில் 1 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 330 வீடுகள் கட்டித் தரத் திட்டமிட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின் கீழ், நாகை மாவட்டத்தில், 86,728 பயனாளிகள் 9 கோடியே 24 இலட்சம் ரூபாயை நிவாரணமாகப் பெற்றுள்ளார்கள். எந்தத் திட்டத்திலும் மகளிருக்கு உரிய பங்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ள எனது அரசு முதன் முறையாக, தமிழக மீனவ மகளிருக்கும் இந்த நிவாரணத் திட்டத்தை, நடப்பு ஆண்டு முதல் விரிவுபடுத்தியுள்ளது. இதன்படி நாகை மாவட்டத்தில் 3,531 மீனவப் பெண்கள் 42 இலட்சம் ரூபாய் நிவாரணம் பெறுவார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**படகுகளுக்கு வெளிப் பொருத்தும் மற்றும் உள் பொருத்தும் இயந்திரம் வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் கடந்த இரு ஆண்டுகளில் மொத்தம் 253 இயந்திரங்களுக்கு 25 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.**

ஒருங்கிணைந்த கடல் மீன் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம் மாவட்டத்தில் இதுவரை 3 கோடியே 79 இலட்சம் ரூபாய் மதிப்பில் 510 மீன் பிடி உபகரணங்கள் 1,211 மீனவர்கள் பயனடையும் வகையில் வழங்கப்பட்டுள்ளன என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் மீன் வளத்தை அதிகரிக்கவும் அதன் மூலம் மீன் வளர்ப்போர் மற்றும் ஏழை எளிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்தவும் மீன்வள மேம்பாட்டு இயக்கத்தை 18.7.2002 அன்று, இராமநாதபுரத்தில் நான் தொடங்கி வைத்தேன். இத்திட்டத்தின் கீழ், நாகப்பட்டினம் மாவட்டத்தில் தேத்தாக்குடி பகுதியில் 2 இலட்சம் இறால் குஞ்சுகள் இருப்பு செய்ய நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டுள்ளேன். அதிக அளவில் இறால் மீன் கிடைக்க இந்தத் திட்டம் வழிவகை செய்யும் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்திலுள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் விரைந்து சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும் ஈடுபாடும் எப்பொழுதும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள 17,397 பயனாளிகளுக்கு 7 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை இந்த இனிய விழாவில் வழங்குவதில் நான் மனநிறைவு அடைகிறேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, கூட்டுறவு, மகளிர் திட்டம், மாவட்டத் தொழில் மையம், தாட்கோ ஆகிய அரசுத் துறைகளின் மூலமாக 4 கோடியே 83 இலட்சம் ரூபாய் மதிப்பில் புதிய தொழில் தொடங்க கடன் உதவி, சுழல் நிதி, பொருளாதாரக் கடன் உதவி, தனி நபர் கடன் உதவி முதலான பல்வேறு கடன் உதவிகளை இன்று நான் வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம் 8,137 பயனாளிகள் பயன் அடைவார்கள் என்பதில் மிகுந்த மனநிறைவு அடைகிறேன்.

பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, ஆதிதிராவிடர் நலத்துறை, சமூக நலத்துறை, வருவாய்த்துறை போன்ற பல்வேறு அரசுத் துறைகளின் மூலமாக 7,387 பயனாளிகள் பயன் அடையும் வகையில் இலவச தையல் இயந்திரங்கள், சலவைப் பெட்டிகள், வீட்டுமனைப் பட்டா, சுயஉதவிக் குழுக்களுக்குக் கடன் வசதி, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தில் நிதி உதவி போன்ற பல்வேறு நலத் திட்ட உதவிகளை 2 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பில் இன்று நான் வழங்குவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில் உடல் ஊனமுற்ற 772 பேர்களுக்கு 11 இலட்சம் ரூபாய் மதிப்பிலான பல்வேறு உபகரணங்கள் மற்றும் உதவித்தொகைகளை ஊனமுற்றோர் நலத்துறை மூலமாக வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள் இவற்றை அடிப்படையாக வைத்து தொழில்களைச் சிறப்பாகச் செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும் நலமும் வளமும் பெற வேண்டும் என்று உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு ஊரில் ஒரு முனிவர் இருந்தார். ஒரு நாள் அவரைப் பார்ப்பதற்காக ஒருவன் வந்தான். "நான் ஒரு பாவி என் பாவத்திற்கு மன்னிப்பு கிடைக்குமா?" என்று அவன் முனிவரிடம் கேட்டான்.

அவன் மீது இரக்கம் கொண்ட முனிவர் "நீ என்ன பாவம் செய்தாய் என்று சொல், பிறகு மன்னிப்பைப் பற்றிப் பேசலாம். பாவத்திற்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று நான் சொல்கிறேன்" என்று சொன்னார்.

"நான் பிறரைப் பற்றி அவதூறு பேசினேன். பல காலமாக இப்படி அவதூறு பேசிக் கொண்டிருக்கிறேன். எனக்கு மன்னிப்புக் கிடைக்குமா ?" என்று கேட்டான்.

"உன் வீட்டில் தலையணை இருக்கிறதா?" என்று முனிவர் கேட்டார்.

பாவ மன்னிப்பைத் தேடி வந்தவன் குழம்பிப் போனான். "பாவ மன்னிப்பு கேட்டால் உன் வீட்டில் தலையணை இருக்கிறதா என்று கேட்கிறாரே முனிவர்" என்று அவன் குழப்பம் அடைந்தான்.

"வீட்டிலிருந்து தலையணையை எடுத்து வந்து சாலையின் நடுவில் நின்று கொண்டு தலையணையின் உள்ளே இருக்கும் பஞ்சை எல்லாம் நாலா பக்கங்களிலும் பறக்க விடு அதற்குப் பின்பு வா" என்று முனிவர் கூறினார்.

அவர் கூறியபடியே வீட்டிற்குச் சென்று தலையணை ஒன்றை எடுத்து வந்து அதைக் கிழித்து உள்ளே இருந்த பஞ்சை எல்லாம் எடுத்து சாலையின் நடுவிலே நின்று கொண்டு நாலா புறத்திலும் அதைப் பறக்க விட்டான். பின்பு, முனிவரிடம் சென்றான்.

"சுவாமி நீங்கள் சொன்னபடியே நான் செய்து விட்டேன். என் பாவத்திற்கு பரிகாரம் செய்து விட்டேன். இப்போது மன்னிப்பு அருளுங்கள்" என்று கேட்டான்.

"பஞ்சைப் பறக்க விட்டால் பாவம் தீரும் என்று, நான் எப்போது சொன்னேன்? பறக்க விட்ட பஞ்சை எல்லாம் மீண்டும் எடுத்து வா – அப்போது தான் உன் பாவம் தீரும்" என்று முனிவர் சொன்னார்.




பதறிப் போன அந்த மனிதன் “நாலா பக்கங்களிலும் பறந்து போன பஞ்சை நான் எப்படி சேகரிப்பது? அது எங்கே போயிற்று என்று, நான் எப்படிக் கண்டு பிடிப்பேன்? பறக்க விடப்பட்ட பஞ்சை ஒன்று சேர்த்து வருவது என்பது, எவராலும் இயலாது, இது நடக்கிற காரியமா சுவாமி” என்றான்.

“பறக்க விடப்பட்ட பஞ்சை எப்படி மறுபடியும் சேகரிக்க முடியாதோ அப்படித்தான் நீ பரப்பி இருக்கிறாயே அவதூறுகள் அவற்றையும் உன்னால் திரும்பப் பெற இயலாது. அதனால் உனக்கு பாவ மன்னிப்பும் என்றைக்கும் கிடையாது. நீ போகலாம்!” என்று சொல்லி முனிவர் அவனை அனுப்பி விட்டார்.

அந்தப் பாவியைப் போல என்னைப் பற்றியும் என் அரசைப் பற்றியும் அன்றைக்கும் குறை கூறியவர்கள் இருந்தார்கள். இன்றைக்கும் அவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவ்வாறு குறை கூறுவதையும் அவதூறாகப் பேசுவதையும் தவிர உருப்படியான காரியம் எதையும் அவர்கள் ஆட்சியில் இருந்த போதும் செய்ததில்லை; எதிர்க்கட்சியாக இருக்கும் போதும் செய்ததில்லை.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். இவர்களைப் பொறுத்த வரையில், ஒரே ஒரு பிரச்சினை தான் உள்ளது. உலகம் தொடங்கிய நாளிலிருந்தே தங்களுக்கு யார் தலைவர் என்பதைக் கண்டுபிடிக்கப் போராடிக் கொண்டிருப்பவர்கள் அவர்கள்!

அவர்களில் ஒருவர் தான் நம்முடைய மரியாதைக்குரிய மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் அன்புச் சகோதரர் மணிசங்கர் அய்யர் அவர்கள். மனிதருக்கு ஒரே ஒரு அணுகுமுறை இருக்க வேண்டும். ஒரே ஒரு சொல் இருக்க வேண்டும். நாம் எங்கே இருந்தாலும், ஒரே சொல்லைப் பேச வேண்டும். ஒரே அணுகுமுறையை மேற்கொள்ள வேண்டும் தனியாக இருக்கின்ற போது அல்லது பத்திரிகையாளர்களை சந்திக்கின்ற போது, ஒரு பேச்சு பேசுவதும், மேடையில் ஒருவரைச் சந்திக்கின்ற போது, ஒரு பேச்சு பேசுவதும், அப்படி இருக்கக் கூடாது. வாய் இருக்கிறது. நா இருக்கிறது என்பதற்காக எதை வேண்டுமானாலும் பேசி விடக்கூடாது. கை இருக்கிறது, பேனா இருக்கிறது என்பதற்காக எதையும் எழுதிவிடலாம் என்று நினைக்கக்கூடாது. இதை நான் சொல்கிறேனே என்று அன்புச் சகோதரர் மணி சங்கர் அய்யர் வருத்தப்படக் கூடாது.

இப்போது நான் சொல்லப் போகின்ற செய்தி, ஊர் உலகத்திற்கெல்லாம் தெரிந்த செய்தி தான். இரண்டாண்டுகளுக்கு முன்பு குருவாயூர் கோயிலுக்கு நான் ஒரு யானையை தானமாகக் கொடுத்தேன். அப்போது மணிசங்கர் அய்யர் அவர்கள் ஒரு கட்டுரை எழுதினார். நான் யானை கொடுத்ததைக் கிண்டல் அடித்து ஜெயலலிதா குருவாயூர் கோயிலுக்கு ஒரு யானையைத் தானமாகக் கொடுத்திருக்கிறார். நான் ஜெயலலிதாவை கோயிலுக்கு தானமாகக் கொடுக்க விரும்புகிறேன் என்று எழுதினார்.

அன்றைய தினம் அப்படி எழுதிய நாடாளுமன்ற உறுப்பினர் இன்றைக்கு தன்னுடைய தொகுதிக்காக என்னவெல்லாமோ செய்ய வேண்டும் என்று இங்கே கோரிக்கைகள் வைக்கிறார். தவறில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நம் கூட்டணியில் இருந்த ஒரு

வேட்பாளர் என்ற முறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் மக்களுக்காக கோரிக்கைகள் வைக்கிறார்.

ஆனால் அன்றைக்கு சொன்னாரே, பத்திரிகைகளில் எழுதினாரே அதை இன்று இந்த மைக் முன்னால் நின்று பேச அவர் தயாரா என்று கேட்கிறேன். இந்தக் கூட்டத்தில் பேச தயாரா? ஜெயலலிதாவை தானமாக குருவாயூர் கோயிலுக்கு நான் கொடுக்க விரும்புகிறேன் என்று இந்த மைக்கில் நின்று , இந்தக் கூட்டத்தின் முன்பு பேசத் தயாரா? என்னைப் பொறுத்தவரை எங்கேயும் ஒரே பேச்சு தான். அவருடைய தலைவரைப் பற்றியும் நான் சில கருத்துக்களை சொல்லியிருக்கிறேன். நான் முன்னால் ஒரு கருத்து பின்னால் ஒரு கருத்து பேசுபவள் அல்ல. இன்றைக்கு அந்தத் தலைவரை கொண்டு வந்து நிறுத்துங்கள், என் முன்னால் நிறுத்துங்கள் அதே கருத்தை சொல்லச் சொல்லுங்கள். ஆணித்தரமாக சொல்லுவேன். பயப்படாமல் சொல்லுவேன். ஆகவே, வார்த்தைகளை அள்ளிக் கொட்டிவிடக் கூடாது. திரும்ப அள்ள முடியாது.

அவதூறு பேசிய இன்னும் பேசிக் கொண்டிருக்கும் ஆசாமிகள், சாதாரணமானவர்கள் அல்ல. மற்றவர்களையும் தூண்டி விட்டு வேடிக்கை பார்ப்பதே அவர்களின் வழக்கம்.

இவர்கள் ஆட்சியில் இருந்த போது காவிரி நதி நீரில் நமக்கு இருந்த உரிமைகளை எல்லாம் காவு கொடுத்தார்கள். இப்போதோ காவிரி விவசாயிகளுக்குத் துரோகம் செய்வதையே தங்கள் தொழிலாகக் கொண்டு இருக்கிறார்கள்.

அவர்களுக்கு ஒரு தலைவர் இருக்கிறார். அவருக்குப் பெருந்தன்மை அதிகம்! தனக்கு இரண்டு கண்களும் போனாலும் பரவாயில்லை தனக்குப் பிடிக்காதவர்களுக்கு ஒரு கண்ணாவது போக வேண்டும் என்பதே அவருடைய வாழ்க்கையின் இலட்சியம்.

நான் என்ன செய்தாலும் அதை எதிர்ப்பதைத் தவிர வேறு வேலை அவருக்கு இல்லை. கதை சொல்லித் திரிகிறார் ஜெயலலிதா என்று கூறுகிறார் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி அவர்கள். இங்கே பேசிய சபாநாயகர் அவர்களும், அருமை சகோதரி வளர்மதி அவர்களும் கூட, அதைப் பற்றி குறிப்பிட்டு பேசினார்கள். நான் கதை சொல்வதையே தவறு என்று விமர்சிக்கிறார் முன்னாள் முதலமைச்சர். கதை சொல்வதில் என்ன தவறு?

பேரறிஞர் அண்ணா கூட கதை சொல்லித் தான் தன்னுடைய கருத்துக்களை மக்களுக்குப் புரிய வைத்தார். கதை சொல்வதில் தவறில்லை. ஆனால் முன்னாள் முதலமைச்சர் சொல்கிறாரே, ஆபாசமான, அருவருப்பான கதைகள்; அப்படிப்பட்ட கதைகளை நான் சொல்லமாட்டேன். இன்று வரை நான் சொன்னதில்லை, என்றைக்கும் சொல்லமாட்டேன். நான் சொல்லுகின்ற கதைகள் எல்லாம் அர்த்தமுள்ள கதைகள். மக்களுக்கு அறிவைப் புகட்டுகின்ற கதைகள். தத்துவ ரீதியான கதைகள். நான் சொல்லுகின்ற கதைகளைக் கேட்டால் அதனால் மக்களுக்கு பயன் உண்டு. ஆகவே யார் என்ன விமர்சனம் செய்தாலும், இந்த கதைகள் சொல்வதை நான் நிறுத்தப் போவதில்லை என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

காவிரிப் பிரச்சினைக்கு இந்தத் தலைவரோ, இவருடைய கட்சியின் சார்பில் மத்தியில் இருக்கும் மந்திரிகளோ இது வரை என்ன செய்தார்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன்.

தாங்கள் கூட்டணியில் நீடிக்க வேண்டும் என்பதற்காக தங்களது பதவிகள் பறி போய் விடக் கூடாது என்பதற்காக காவிரி பிரச்சினையைப் பற்றிக் கவலைப்படாதவர்கள் இவர்கள்! காவிரி டெல்டா விவசாயிகளின் துயர் துடைக்க ஒரு துரும்பையும் எடுத்துப் போடாதவர்கள் இவர்கள். இவ்வாறு அரசியல் ஆதாயத்துக்காக இவர்கள் எல்லாம் வாய்மூடி மௌனிகளாய் இருந்த போது காவிரி நதி நீரில் தமிழகத்தின் உரிமையைப் பெறுவதற்காக என்னென்ன நடவடிக்கைகளை எல்லாம் எடுக்க முடியுமோ அத்தனை நடவடிக்கைகளையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் தான் எடுத்தேன் என்பதை நாகப்பட்டினம் மாவட்ட மக்களாகிய நீங்கள் அறிவீர்கள்; இந்த நாடே அறியும்!

இங்கே பேசிய நாடாளுமன்ற உறுப்பினர் மணிசங்கர் அய்யர் அவர்கள் காவிரி நதி நீர்ப் பிரச்சினைப் பற்றிக் கூட பேசினார். அந்த காவிரி நதி நீரைப் பெறுவதற்காக, நம்முடைய உரிமையைப் பெறுவதற்காக என்னென்ன செய்ய வேண்டும் என்று சொன்னார். எளிதாக செய்யக் கூடிய ஒன்று இருக்கிறது. அவர் சார்ந்திருக்கின்ற கட்சியின் ஆட்சி தான் கர்நாடகத்தில் நடைபெறுகிறது. அந்த ஆட்சிக்கு உத்தரவிடக்கூடியவர் தான் அவருடைய கட்சியின் தலைவர். அவரிடம் ஒரு வார்த்தை சொல்லி, கர்நாடக முதல்வரிடம், ஒரு வார்த்தை சொல்லச் சொல்லி, தமிழகத்திற்கு உரிய பங்கு திறந்து விடுங்கள் என்று சொன்னால், நன்றாக இருக்கும். அதை செய்வதை விட்டு விட்டு, இங்கே யோசனை சொல்லிக் கொண்டிருந்தால் இதனால் யாருக்கு என்ன நன்மை?

வறட்சியைப் பற்றி பேசினார். மத்திய அரசிடம் கேட்டு, வறட்சிக்கான நிதியைப் பெறலாம் என்று, புதிய யோசனை சொன்னார். வறட்சிக் காலங்களில் மக்கள் பாதிக்கப்பட்டார்கள் என்பதை பலமுறை எடுத்துரைத்து, கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழக விவசாயிகள் எப்படிப்பட்ட துயரங்களை சந்திக்க நேர்ந்தது என்பதை எல்லாம் பட்டியலிட்டு, இரண்டு விரிவான மனுக்களை – மகஜர்களை மத்திய அரசுக்கு கொடுத்து, மத்திய அரசிடமிருந்து வறட்சி நிவாரண நிதியைக் கேட்டு, எந்த



அளவு மத்திய அரசிடமிருந்து பெற முடியுமோ அவ்வளவும் பெற்றிருக்கிறோம்.

இன்னொரு யோசனையையும் சொன்னார். வருகிற டிசம்பர் மாதத்தில் இந்தப் பயிர்கள் எல்லாம் சரியாக விளைச்சல் இல்லாமல், ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டு விட்டால், அப்போது என்ன செய்வது என்று கேட்டார். அதைப் பற்றி இப்போதே நாம் ஏன் சிந்திக்க வேண்டும். நன்றாக மழை பெய்யும். நிறையத் தண்ணீர் வரும். நன்றாக விளையும் என்ற நம்பிக்கையோடு, உறுதியோடு இருப்போம். மீண்டும் வறட்சி வந்தால், விளைச்சல் சரியாக இல்லை என்றால், அப்படி ஒரு சூழ்நிலை வருகின்ற போது, அப்போது அதைப் பற்றி சிந்திப்போம். அதற்காகத்தான் நாங்கள் இருக்கிறோம். நிச்சயமாக விவசாயப் பெருங்குடி மக்களைத் தவிக்க விட்டு விட மாட்டோம் என்பதை இந்த நேரத்தில் அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறேன்.

தற்போது காவிரிப் படுகை விவசாயிகளின் நன்மைக்காக 7.10.2003 அன்று மேட்டூர் அணையில் இருந்து நீரைத் திறந்துவிட நான் ஆணையிட்டேன். நிச்சயம் நல்ல மழை பெய்யும் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. நிச்சயம் காவிரி நீரில் நமக்குள்ள பங்கைப் பெற்றே தீருவோம் என்ற உறுதியும் நமக்கு உண்டு. காவிரி டெல்டாப் பகுதியில், வேளாண் பணிகள் முழு மூச்சில் நடைபெறும்! முழு வீச்சில் நடைபெறும்! அந்த நாள் வந்தே தீரும்!

இன்றும், என்றும் தமிழகத்தைக் காப்பதிலும் தமிழர் உரிமைகளைக் காப்பதிலும் எவருக்கும் முன் நிற்பது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்று கூறி எனது முற்போக்கு முயற்சிகளுக்கு எல்லாம் உறுதுணையாக இருக்கும் உங்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றியை இந்த இனிய வேளையில் தெரிவித்துக் கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பல்வேறு நலத்திட்ட உதவிகளை இன்றைய தினம் நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும் நேரம் குறைவாகவே இருப்பதால் 15 பேருக்கு மட்டும் இந்த உதவிகளை இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு, அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் எம். வீர சண்முகமணி இ.ஆ.ப., அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

(13.10.2003 அன்று நாகப்பட்டினம் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை)

***




# பொற்காலத் தமிழகத்தை உருவாக்கும் புனித முயற்சி

– மாண்புமிகு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

அழகிய மேற்குத் தொடர்ச்சி மலை மேற்கில் அரணாக நிற்க சிறப்புடன் விளங்கும் இந்த விருதுநகர் மாவட்டத்தில், என் அன்புக்குரிய விருதுநகர் மாவட்டப் பெருமக்களாகிய உங்கள் அனைவரையும் காணவும், உங்களோடு ஒரு சில கருத்துகளைப் பரிமாறவும், நிறைவேற்றப்பட்ட பணிகளைத் திறந்து வைத்து, புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத் திட்ட உதவிகளை வழங்கவும் இன்று வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் உள்ளபடியே மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

விரிந்து பரந்திருந்த இராமநாதபுரம் மாவட்டம் **3** மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, அவற்றில் ஒன்றாக விருதுநகர் மாவட்டம் **15.3.1985** அன்று இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் உருவாக்கப்பட்டது.

தமிழகத்தில் உள்ள மாவட்டங்களை, பொதுவாக, ஆன்மிகத்தில் சிறந்த மாவட்டம் என்றும், வேளாண்மையில் சிறந்த மாவட்டம் என்றும், தொழில் வளத்தில் சிறந்த மாவட்டம் என்றும், அவற்றின் சிறப்புத் தன்மை கருதி நாம் அழைப்பது உண்டு. அந்த வகையில், விருதுநகர் மாவட்டத்தை வணிக மாவட்டம் என்று வாயார அழைக்கலாம். விருதுநகர், தமிழகத்தின் தலைசிறந்த வணிக நகரம். இதன் பெயரிலேயே 'விருது' அடங்கியிருக்கிறது. இது யார் வழங்கிய 'விருது' ? இது இயல்பாகவே அமைந்த சிறப்பு விருது !

இவ்வாறு, பெயரிலேயே சிறப்புடைய ஊரில் தான், இந்த நாட்டிலே சிறந்த தலைவரான பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் பிறந்தார். அந்த மாபெரும் தலைவருக்கு, நூற்றாண்டு விழா எடுக்கும் வாய்ப்பை, உங்கள் அன்புச் சகோதரியாகிய எனது தலைமையில் அமைந்த அரசுக்கே, காலம் வழங்கியது என்பது பெருமைக்குரிய ஒன்று.

இந்த விருதுநகர் மாவட்டத்தில் உள்ள இராஜபாளையத்தில் பிறந்து, தமிழகத்தின்

முதலமைச்சராக விளங்கிய பெருமைக்குரியவர் திரு. குமாரசாமி ராஜா அவர்கள்.

அரசியல் உலகுக்கு பெருந்தலைவர் திரு. காமராஜர் அவர்களையும், திரு. குமாரசாமி ராஜா அவர்களையும் அளித்த இந்த மாவட்டம் தான், ஆன்மிக உலகுக்கு பகவான் ரமணரைத் தந்திருக்கிறது. அந்தக் கருணை முனிவர் பிறந்தது, தேவாரப் பாடல் பெற்ற பாண்டிய நாட்டுத் திருத்தலங்களில் ஒன்றான 'திருச்சுழி' ஆகும். அந்தத் திருச்சுழி இந்த மாவட்டத்தில் தான் அமைந்திருக்கிறது என்பது, இந்த மண் ஞானம் விளைகின்ற மண் என்பதை உலகுக்கு உணர்த்துவதாக இருக்கிறது.

இந்தப் பெருமை இன்று நேற்று வந்தது அல்ல. 1,200 ஆண்டுகளுக்கு முன், இந்த மண்ணிலே தோன்றிய ஒரு மாபெரும் கவியரசி தான் இந்தியாவின் ஆன்மிகச் சிறப்புக்கு ஒரு முக்கியக் காரணமாக விளங்கினார் என்பதை எவரும் மறந்து விட இயலாது. 'சூடிக் கொடுத்த சுடர்க் கொடி' என்றும், 'பெரியாழ்வார் பெற்ற பெண் கொடி' என்றும் அழைக்கப்பட்ட ஆண்டாள், 'பாடிக் கொடுத்த பாமாலை' திருமாலுக்கே திருமாலையாக அமைந்தது.

வடக்கே, ஒரு மீராபாய் தோன்றி, ஆன்மிகப் பயிர் வளர்ப்பதற்கு, 700 ஆண்டுகளுக்கு முன்னாலேயே ஓர் ஆன்மிகச் சோலையை – கவிச் சோலையை வழங்கிய கவியரசி தான் ஆண்டாள்! அவள் பிறந்ததால் பெருமை பெற்றது, இன்று அரசு விழா நடைபெறும் இந்த ஸ்ரீவில்லிபுத்தூர்!

இத்தனை சிறப்புடைய, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலின் கோபுரம் தான், இன்று தமிழ்நாடு அரசின் சின்னமாக விளங்குகிறது என்பது, இந்த மாவட்ட மக்கள் அனைவரும் பெருமிதம் கொள்ளத்தக்க செய்தி ஆகும்.

இந்த மாவட்டம், மெய்ஞ்ஞானத்தில் மட்டும் சிறந்து விளங்கும் மாவட்டம் அல்ல; விஞ்ஞானத்திலும் சிறந்து விளங்கும் மாவட்டம்.

குட்டி ஜப்பான் என்று அழைக்கப்படும் சிவகாசி, பட்டாசுக்குப் பெயர் பெற்ற நகரம். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பிருந்தே, விருதுநகர் மாவட்டம், பட்டாசு தயாரிப்பதில் முன்னணி வகித்த மாவட்டம் ஆகும். விருதுநகர் மாவட்டத்தில் மட்டும், 554 பட்டாசுத் தொழிற்சாலைகள் உள்ளன என்பதும், இந்திய பட்டாசு உற்பத்தியில், 70 சதவீதம் பட்டாசு இந்த மாவட்டத்தில் தான் தயாரிக்கப்படுகின்றது என்பதும், இவற்றில் தயாரிக்கப்படும் பட்டாசுகள் உலகத் தரம் வாய்ந்தவை என்பதால், 'இந்தியாவின் வட மாநிலங்களுக்கு மட்டும் அல்லாமல், அமெரிக்கா, இத்தாலி போன்ற நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதும், தமிழகத்தில் உள்ள ஒவ்வொருவரும் பெருமைப்படத்தக்க செய்திகள் ஆகும்.

அது போலவே, விருதுநகர் மாவட்டத்தில் சுமார் 2,400 தீப்பெட்டி நிறுவனங்கள், சிவகாசி, சாத்தூர், விருதுநகர் மற்றும் ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய வட்டாரங்களில் செயல்பட்டு வருகின்றன. இந்திய தீப்பெட்டி தயாரிப்பில், 50 முதல் 60 சதவீதம் வரை, விருதுநகர் மாவட்டத்தில் தான் தயாரிக்கப்படுகிறது என்பதும், இந்தோனேஷியா, தென்அமெரிக்கா, ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு, இந்தத் தீப்பெட்டிகள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன என்பதும், நாம் பெருமைப்படத் தக்க விஷயங்கள் ஆகும்.

மேலும், சிமெண்ட் தயாரிப்பு, ஆப்–செட் அச்சுப் பணி, பேண்டேஜ் துணிகள் தயாரிப்பு ஆகியவற்றிலும் விருதுநகர் மாவட்டம் சிறப்பிடம் பெற்று வருவது தமிழகத்திற்கு மிகப் பெருமை அளிப்பதாகும்.

இத்தனை பழம்பெருமையும், புதுமைச் சிறப்பும் கொண்ட விருதுநகர் மாவட்டத்திற்கு மொத்தம் 234 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள, முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க, உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று ஸ்ரீவில்லிபுத்தூர் வந்திருக்கிறேன்.

சீர்மிகு இந்த விழாவில் விருதுநகர் மாவட்டத்தின் அனைத்து மக்களும் பயன் அடையும் வண்ணம், 106 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 8,186 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். அவற்றில் முக்கியமான சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக 39 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகள், சுய உதவிக் குழுக் கட்டடங்கள், கதிர் அடிக்கும் களங்கள், கிராம நிருவாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள், கண்மாய் மேம்பாடு மற்றும் தூர்வாரும் பணிகள், சாலை மேம்பாட்டுப் பணிகள் – நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 12 கோடியே 42 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலை மேம்பாடு, பாலம் சீரமைப்பு போன்ற பணிகளை இன்று திறந்து வைத்ததில் நான் அக மிக மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, 19 கோடியே 61 இலட்சம் ரூபாய் மதிப்பில் ஸ்ரீவில்லிபுத்தூர், படிக்காசுவைத்தான்பட்டி மற்றும் வத்திராயிருப்பு ஆகிய இடங்களில் 66/11 கிலோ வோல்ட்டிலிருந்து 110/11 கிலோ வோல்ட்டாக திறன் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்கள்; எரிச்சநத்தத்தில் 110/11 கிலோவோல்ட் மற்றும்

திருத்தங்கலில் 110/33/11 கிலோ வோல்ட் புதிய துணை மின்நிலையங்கள்; பாளையம்பட்டியில், 33/11 கிலோ வோல்ட் புதிய துணை மின்நிலையம் ஆகியவற்றைத் திறந்து வைத்ததில் அக மிக மகிழ்கின்றேன்.

ஓர் ஊரில் ஒரு குடிகாரன் இருந்தான். அவன் இரவு நேரத்தில் நிறைய குடிப்பது வழக்கம். அப்படிக் குடித்து விட்டு, குடித்த இடத்திலேயே விழுந்து அங்கேயே தூங்கி விடுவான். காலையில் எழுந்து வீட்டுக்குப் போவான்.

இது தான் அவனது அன்றாட நடவடிக்கையாக இருந்தது.

'வழக்கமா குடிப்பது போல் நெறைய குடிச்சிருந்தா, அங்கேயே தூங்கியிருப்பேன்; பிரச்சினை இல்லை! இன்னைக்குப் பாருங்க, அரைகொறையா குடிச்சேனா? வீட்டுக்குப் போயிடலாமேன்னு தோணுச்சு நடந்தேன்; விழுந்துட்டேன். அடிபட்டிடுச்சி. நாளைக்கு இருந்து இந்த அரைகுறையா குடிக்கிற சமாச்சாரமே கெடையாதுங்க. அரை கொறையா குடிக்கிறது ஆபத்தானதுங்க; ஆகவே முழுக்க குடிக்கப் போறேனுங்க' என்று சொன்னானாம் அந்தக் குடிகாரன்.

குடிகாரனுடைய logic–ஐப் பார்த்தீர்களா ? முழுக்கக் குடிப்பதே சாலச் சிறந்தது என்று




சொல்லுகிறான்; அதுவே பாதுகாப்பானது என்று பாடம் வேறு படிக்கிறான். குடிகாரன் தன்னுடைய தவறுகளுக்கும், குற்றங்களுக்கும் எப்படி நியாயம் கற்பித்தான் என்பதை பார்த்தீர்களா!

ஒரு நாள், இரவில் அதிகமாகக் குடிக்கவில்லை; போதை கொஞ்சம் குறைவாகவே இருந்தது. எனவே, வீட்டுக்கு நடந்து போய் விடலாம் என்று எண்ணி நடக்கத் தொடங்கினான். ஆனால், பாதி தூரத்திலேயே விழுந்து, முழங்கால்களில் அடிபட்டு விட்டது. எனவே, நொண்டி நொண்டி நடந்து போய்க் கொண்டிருந்தான். வழியில் பார்த்த ஒருவர் 'என்னடா தம்பி, இப்படி நொண்டிக் கொண்டு வருகிறாயே, என்ன காரணம்? எக்கச்சக்கமான போதையா ?' என்று கேட்டார்.

'அப்படி இல்லீங்க, இன்றைக்கு சரியாகக் குடிக்கலீங்க, அதனால தான் விழுந்து விட்டேன்' என்று குடிகாரன் சொன்னானாம்.

'என்னடா இது ஆச்சரியமாய் இருக்கிறது! சரியாய்க் குடிக்கவில்லை என்பதாலா நீ விழுந்து விட்டாய்? நம்ப முடியவில்லையே!' என்றாராம் அந்த நண்பர்.

அதற்கு, குடிகாரன் என்ன பதில் சொன்னான் தெரியுமா ?

இப்படித்தான் இன்றைக்கு சில எதிர்க்கட்சித் தலைவர்கள் தங்களுடைய மோசடித் தனங்களுக்கு முலாம் பூசிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தச் சாயம் போன அரசியல்வாதிகளை தமிழ்ச் சமுதாயம் தூக்கி எறிந்து விட்டது. அந்த ஆத்திரத்திலே அவர்கள் புலம்புகிறார்கள். அந்தப் புலம்பல்களுக்கு மத்தியில் தான், ஒரு பொற்காலத் தமிழகத்தை உருவாக்கும் புனித முயற்சியில் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் ஈடுபட்டிருக்கிறேன்.

விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு அரசுத் திட்டப் பணிகளின் பயன்களை அனைத்து மக்களும் பெருமளவில் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த சிறப்பு மிக்க விழாவிலே 109 கோடியே 17 இலட்சம் ரூபாய்

மதிப்பிலான 4,532 பணிகளுக்கு இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை உளமார்ந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அவற்றில் முக்கியமான சில பணிகளை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக, 24 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பில் தொகுப்பு வீடுகள், கதிர் அடிக்கும் களங்கள், சுய உதவிக் குழு கட்டடங்கள், சாலைப் பணிகள், ஊரணி மேம்பாடு, கண்மாய் தூர்வாருதல், சுகாதார வளாகம் மற்றும் கழிவறைகள் கட்டுதல் போன்ற பல்வேறு பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 3 கோடியே 52 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படவிருக்கும் சாலை மேம்பாடு மற்றும் சிறு பாலங்கள் சீரமைப்பு பணிகளுக்கும் – நகராட்சி மற்றும் பேரூராட்சித் துறைகள் மூலமாக, 6 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் செயல்படுத்தப்படவிருக்கும் வணிக வளாகங்கள், சுகாதார வளாகங்கள், மழைநீர் வடிகால் பணிகள், சாலைப் பணிகள் போன்ற பல்வேறு பணிகளுக்கும், ராஜபாளையம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்கும் பணிக்கும் இன்று அடிக்கல் நாட்டியதில் நான் மிகவும் மகிழ்கின்றேன்.

தாட்கோ மூலமாக 2 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்படவிருக்கும் ஆதிதிராவிடர் மாணவ மாணவியர் விடுதிகள், பயிற்சி மையம், வகுப்பறைக் கட்டடங்கள் போன்ற பணிகளுக்கும் அடிக்கல் நாட்டியதில் பெரும் உவகை கொள்கின்றேன்.

தமிழகத்தில் நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல், அனைத்து கிராமங்களிலும் பாதுகாப்பான குடிநீர், தேவையான அளவுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதில் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு . மிகுந்த கவனத்துடன் செயல்பட்டு வருகிறது.

இந்த அடிப்படையில் தான், கடந்த இரண்டு ஆண்டுகளில் விருதுநகர் மாவட்டத்தில், 24 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், பல்வேறு நகர்ப்புற மற்றும் கிராமப்புறக் குடிநீர்த் திட்டங்கள் எனது அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இன்றைய தினம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், 103 ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகள், எஸ்.கொடிக்குளம் குடிநீர்த் திட்டம், வத்திராயிருப்பு பேரூராட்சி குடிநீர்த் திட்டம் ஆகிய பணிகள், 8 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் – நகராட்சி, கல்வி, பேரூராட்சி, ஊரக வளர்ச்சி ஆகிய துறைகளின் மூலமாக, பல்வேறு குடிநீர்ப் பணிகள் 74 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் முடிக்கப்பட்டு, அவற்றை நான் இங்கே திறந்து வைத்துள்ளேன் என்பதையும், இதன் மூலம், இந்தப் பகுதிகளில் உள்ள 2 இலட்சத்து 47 ஆயிரம் பேர்கள் பயன் அடைவார்கள் என்பதையும், மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தாமிரபரணி ஆற்றின் நீர் ஆதாரத்தைக் கொண்டு, சாத்தூர் நகர மக்களுக்குக் குடிநீர் வழங்கிட, 11 கோடியே 18 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட உள்ள சாத்தூர் நகராட்சி குடிநீர் மேம்பாட்டுத் திட்டத்திற்கும் – சிவகாசி நகர மக்களுக்கும், திருத்தங்கல் நகரப் பேரூராட்சி மக்களுக்கும், குடிநீர் வசதி வழங்கிட 15 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறைவேற்றப்பட உள்ள மானூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் – 22 கோடியே 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ராஜபாளையம் நகராட்சியில் செயல்படுத்தப்பட உள்ள கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கும் இன்று நான் அடிக்கல் நாட்டியதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம், 7 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள, 102 ஊரகக் குடிநீர்த் திட்டப் பணிகளுக்கும் – திருத்தங்கல் பேரூராட்சி குடிநீர்த் திட்டப் பணிக்கும், நகராட்சி, கல்வி ஆகிய துறைகளின் மூலம் 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட உள்ள பல்வேறு குடிநீர்த் திட்டப் பணிகளுக்கும் இன்று நான் அடிக்கல் நாட்டி உள்ளேன் என்பதையும் மிகுந்த மன நிறைவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகளின் மூலம், மொத்தம் 4 இலட்சத்து 11 ஆயிரம் பேர்கள் பயன் அடைவார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மூன்று பேர் சேர்ந்து ஒரு லாட்டரி சீட்டு வாங்கினார்கள். பரிசு விழுந்தால் கடவுளுக்குச் சமபங்கு தருவோம் என்று முடிவு செய்தார்கள். ஒரு சில நாட்களில் லாட்டரி குலுக்கலில் அவர்கள் வாங்கிய அந்தச் சீட்டுக்குப் பரிசு விழுந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

பணத்தை வாங்குவதற்கு முன் மூன்று பேருக்கும் ஒரே சிந்தனை தோன்றியது. கடவுளுக்கு ஒரு பங்கு தருவோம் என்று சொன்னோமே, அப்படித் தரக் கூடாது என்று முடிவு செய்தார்கள்.

ஒவ்வொருவனும் வடி கட்டிய கஞ்சன். அவசரப்பட்டுக் கடவுளுக்கு ஒரு பங்கு தருவதாக சத்தியம் செய்து விட்டோமே, அதிலிருந்து எப்படித் தப்பிப்பது என்ற சிந்தனையே ஒவ்வொருவனுடைய மனதிலும் ஓடிக் கொண்டிருந்தது.

சரி, கடவுளுக்கு எவ்வளவு பங்கு ? எவ்வளவு தான் கொடுக்கலாம் ?



"தரையில் ஒரு சிறிய வட்டம் வரைவோம். எல்லாப் பணத்தையும் நாணயங்களாக்கி மேல் நோக்கி எறிவோம். சின்ன வட்டத்துக்குள் விழுவது கடவுளுக்கு" என்றான் முதல் கஞ்சன்.

இரண்டாவது கஞ்சன் சொன்னான் "கூடாது, கூடாது, மிகப் பெரிய வட்டம் வரைவோம், நடுவில் நாம் நின்று கொண்டு பணத்தை மேல் நோக்கி எறிவோம். அந்த வட்டத்துக்கு வெளியே எவ்வளவு பணம் விழுகிறதோ அது கடவுளுக்கு" என்றான்.

இருவர் சொன்னதையும் கேட்ட மூன்றாவது கஞ்சனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. "அபத்தப் பேச்சுகளை நிறுத்துங்கள் ! சின்ன வட்டமாவது, பெரிய வட்டமாவது – பணத்தை மேலே வீசி எறிவோம். மேலே நின்று விடுகின்ற பணம் கடவுளுக்கு, கீழே விழுகின்ற பணமெல்லாம் நமக்கு ! என்றானாம். எப்படி என் யோசனை ?'' என்றானாம் மூன்றாவது கஞ்சன்.

இவர்களிடம் கஞ்சத்தனம் மட்டும் அல்ல; கடவுளை விடத் தாங்களே கெட்டிக்காரர்கள் என்ற ஆணவமும் இருந்தது. இப்படிப்பட்ட அரசியல் தலைவர்களும் நம்மிடையே இருக்கிறார்கள்.

இந்த தலைவர்களால், அவர்களுடைய வீடு முன்னேறும்; ஆனால் நாடு முன்னேறுமா ? நிச்சயமாக முன்னேறாது !

தமிழகம் முன்னேற்றம் பெற வேண்டும் என்று தான், புதிய புதிய வளர்ச்சித் திட்டங்களை நான் மக்களுக்கு அர்ப்பணித்து வருகிறேன்.

ஒரு ரஷ்ய அறிஞர் மார்க்சிம் கார்க்கி என்பவர் அந்தக் காலத்திலேயே சொல்லியிருக்கிறார். "The Measure of one's Civilisation is one's treatment of Women" என்று சொல்லியிருக்கிறார். ஒருவர் எந்த அளவிற்கு நாகரிகம் அடைந்தவர் என்பதை மதிப்பிட அவர் பெண்களை எப்படி மதிக்கிறார், எப்படி நடத்துகிறார் என்பது தான் அளவுகோல் என்றார். அதை போலவே ஒரு நாடு எந்த அளவு முன்னேறி இருக்கிறது என்பதற்கு அந்த நாடு அந்த நாட்டிலுள்ள பெண்களையும், எப்படி நடத்துகிறது என்பதை வைத்துத் தான் மதிப்பிட முடியும் என்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஆகவே, நாகரிகமுள்ள ஒரு நாடு என்றால், முன்னேறிய ஒரு நாடு என்றால் அங்கே பெண்கள் எந்த அளவுக்கு மதிக்கப்படுகிறார்களோ, அந்த அளவிற்கு அந்த நாடு முன்னேறும் என்று அந்தக் காலத்திலேயே அறிஞர்கள் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு ஒவ்வொரு துறையிலும் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலம் என்ற பெயர் அந்தஸ்து பெற்று வருகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டிலுள்ள பெண்களின் நிலையை, அந்தஸ்தை நாம் உயர்த்திக் கொண்டிருக்கிறோம். அதனால் தான் இந்த மாநிலமும் முன்னேறி வருகிறது என்பதை நான் உங்களுக்கு எடுத்துக் கூற விரும்புகிறேன். ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக வாழ வேண்டும், இந்த நிலையை அடைய வேண்டும் என்று எல்லோரும் உதட்டளவில் பேசுகிறார்கள். ஆனால் இந்த நிலையை அடைவது எப்படி ? காலம் காலமாக நம் சமுதாயத்தில் இருந்து வந்த மரபு என்ன ? இருந்து வந்த வழக்கம் என்ன ? பெண்கள் என்றால் அவர்கள் பலவீனமானவர்கள். பெண்கள்

என்றால் அவர்களால் சொந்தக் காலில் நிற்க முடியாது, அவர்களால் தனித்து வாழ முடியாது, குழந்தைப் பருவத்தில் ஒரு பெண் தந்தையைச் சார்ந்திருக்க வேண்டும். பெரியவளானால் கணவரைச் சார்ந்திருக்க வேண்டும். வயதாகிவிட்டால் மகனைச் சார்ந்திருக்க வேண்டும் என்பது தான் நம் சமுதாயத்தில் நிலவி வந்த ஒரு நியதியாகவே இருந்தது.

நான் முதலமைச்சரானதும் சிந்தித்தேன். இதை எப்படி உடைத்து எறிவது ? ஆண்களோடு பெண்கள் உண்மையிலேயே சமநிலை பெற வேண்டும். சம அந்தஸ்து பெற வேண்டும். ஆண்களோடு சரிநிகர் சமானமாக பெண்கள் வாழ வேண்டுமானால், பெண்களை எப்படி முன்னேற்றுவது என்று சிந்தித்தேன். அப்போது எனக்குத் தோன்றிய விடை இது தான். பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களை சார்ந்திருக்கக் கூடாது. செலவுக்குப் பணம் தாருங்கள் என்று எந்த ஒரு பெண்ணும் ஆண்களிடம் கையை ஏந்தி நிற்கக் கூடாது. பெண்கள் சொந்தக் காலில் நிற்க வேண்டும். சுயமாக சம்பாதிக்க வேண்டும். பொருளாதார ரீதியாக பெண்கள் தன்னம்பிக்கை பெற வேண்டும். வலிமை பெற வேண்டும். அந்த நிலையை நான் உருவாக்க வேண்டும் என்று யோசித்து தான் 1992–ஆம் ஆண்டில் முதன் முறை நான் முதலமைச்சராக இருந்த போது, இந்தப் பெண்கள் சுயஉதவிக் குழுக்களைத் தொடங்கினேன். அது இன்றைக்கு ஆல மரமாக விரிந்து பரந்து இன்றைக்கு தமிழ்நாட்டில் ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் இருக்கின்றன. இன்றைக்கு கிட்டத்தட்ட 22 இலட்சம் மகளிர் இந்த சுயஉதவிக் குழுக்களில் உறுப்பினர்களாக இருக்கின்றனர். இந்தப் பெண்களின் ஒட்டு மொத்த சேமிப்பு இன்றைக்கு ஏறக்குறைய 400 கோடி ரூபாயைத் தாண்டி விட்டது. அந்த அளவிற்கு உயர்ந்து இருக்கிறது. ஆரம்பத்தில் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களைத் தொடங்கிய போது, வங்கிகள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்த பெண்களுக்குக் கடன் கொடுக்க மிகவும் தயக்கம் காட்டின. அன்றைக்கு பகீரத முயற்சி எடுத்துத் தான், ஆரம்பத்தில் இந்த மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கடன் கொடுக்க வைத்தோம். ஆனால், இன்றைக்கு நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. இன்று தமிழகம் எங்கும் வெற்றிகரமாகச் செயல்பட்டு வரும் இந்த மகளிர் சுயஉதவிக் குழுக்களிடம் கோடிக் கணக்கான ரூபாய் சேமிப்பு நிதியாக இருப்பதைப் பார்த்து, இன்றைக்கு வங்கிகளே இந்தப் பெண்களை பின் தொடர்ந்து, அவர்களை அணுகி, உங்களிடம் இருக்கின்ற சேமிப்பு நிதியை எங்கள் வங்கியில் வைப்பு நிதியாக போட்டு வையுங்கள் என்று பெண்களை நாடி வருகின்ற ஒரு சூழ்நிலை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. இதைப் பார்த்து உள்ளபடியே நான் பூரிப்பு அடைகிறேன் பெருமைப்படுகிறேன். அது மட்டுமா ? இதுவரை காலம் காலமாக பெண்கள் முன்னேற்றத்தில் நாம் அக்கறை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்ட உதாரணமாக என்ன சொல்லுவோம், ஆண்களுக்கு எப்படி செய்தோமோ அதைப் போலவே பெண்களுக்கும் செய்திருக்கிறோம் என்று தான் சொல்லிக் கொண்டிருப்போம். அந்த நிலையும் இன்றைக்கு தலைகீழாக மாறி விட்டது. இன்றைக்கு எத்தனையோ



இளைஞர்கள், ஆண்கள் என்னை அணுகி பெண்களுக்கு மட்டும் சொந்தக்காலில் நிற்க ஒரு வழி செய்து கொடுத்து விட்டீர்களே, வழி காட்டி விட்டீர்களே, நாங்களும் வேலை இல்லாமல் இருக்கிறோம், எங்களுக்கும் அதே வழியைக் காட்டுங்கள் ஆண்களுக்கும் சுய உதவிக் குழுக்கள் அமைத்துத் தாருங்கள் என்று ஆண்கள் விண்ணப்பம் போட்டு, இன்றைக்கு ஆண்களுக்காகவும் சுயஉதவிக் குழுக்கள் தொடங்கப்பட்டு மாவட்டம் மாவட்டமாக இப்போது அமைத்துக் கொண்டு வருகிறோம். ஆகவே, ஆண்களைப் போலவே எங்களுக்கும் செய்து கொடுங்கள் என்று பெண்கள் கேட்கின்ற நிலைமை மாறி, பெண்களைப் போலவே எங்களுக்கும் உதவி செய்யுங்கள் என்று ஆண்கள் கேட்கின்ற நிலைமை இன்றைக்கு தமிழகத்தில் உருவாகியிருக்கிறது என்றால் இது பெருமைப்பட வேண்டிய விஷயம் அல்லவா ?

வைப்பாற்றின் உபரி நீர் கடலில் வீணாகக் கலப்பதைத் தடுத்து, அந்த தண்ணீரைத் தேக்கி வைக்க வேண்டும்; அதனைப் பயன்படுத்தி இந்தப் பகுதி மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டும்; பயிர்களுக்குப் பாசன வசதி அளிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் என்னுடைய கடந்த ஆட்சிக் காலத்தின் போது, சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்திற்கு அருகே, வைப்பாற்றின் குறுக்கே, 499.50 மில்லியன் கன அடி கொள்ளளவு கொண்ட நீர்த்தேக்கம் ஒன்றை அமைக்க 1992–ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன்.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலம், சாத்தூர் நகராட்சி வாழ் மக்களுக்கு 50 மில்லியன் கன அடி குடிநீர் கிடைக்கும். தூத்துக்குடி மாவட்டத்தில் 9,267 ஏக்கர் நிலம் புதிதாக பாசன வசதி பெறும். அது தவிர, விளாத்திகுளம் மற்றும் எட்டையபுரம் வட்டத்தில் 3 கண்மாய்களின் மூலம், 1,255 ஏக்கர் நன்செய்ப் பயிர்களுக்குப் பாசன வசதி உறுதிப்படுத்தப்படும்.

இவ்வளவு வசதிகளை வழங்குகின்ற இந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டு விட்டால், இதனால் பயன்பெறும் மக்கள் அனைவரும், இந்தத் திட்டத்தைத் தொடங்கிய உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னைத் தானே பாராட்டுவார்கள் என்ற கெடுமதியின் பொறாமையின் காரணத்தால், கருணாநிதி தன்னுடைய ஆட்சிக் காலத்தில் இந்த திட்டத்தை மந்த கதியில் செயல்படுத்திக் கொண்டிருந்தார்.

ஆனால், நான் கடந்த 2001–இல் மீண்டும் ஆட்சிப் பொறுப்பேற்றதும், கடுமையான நிதி நெருக்கடிக்கு இடையிலும், இருக்கன்குடி நீர்த் தேக்கத் திட்டத்தின் மீது தனிக் கவனம் செலுத்தி, நபார்டு வங்கியின் மூலம் 48 கோடியே 73 இலட்சம் ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு பெற்றுத் தந்து, திட்டத்தை வேகப்படுத்தி உள்ளேன். மேலும் இத்திட்டத்தைச் செயல்படுத்த 62 கோடியே 20 இலட்சம் ரூபாய்க்கான திருத்திய மதிப்பீட்டுக்கு அங்கீகாரம் அளித்துள்ளேன். இந்தத் திட்டப் பணிகளை இன்னும் 5 மாதங்களுக்குள் அதாவது 2004–ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்திற்குள் நிறைவு செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்" என்று வேளாண்மையின் பெருமையைப் புகழ்கிறது திருக்குறள். விருதுநகர் மாவட்ட மக்கள் உன்னதத் தொழிலாம் உழவுத் தொழிலை முனைப்பாகச் செய்ய வல்லவர்கள். ஆனால், அதற்கு உதவ வேண்டிய இயற்கை அன்னையின் கருணை, அவ்வளவாக இந்த மாவட்டத்திற்கு இல்லை என்று தான் சொல்ல வேண்டும். விருதுநகர் மாவட்டத்தின் மழை அளவு, ஆண்டுக்கு 812 மில்லி மீட்டர் தான். இவ்வாறு மழை வளம் இல்லாமல், தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் உள்ள விவசாயிகளும் பயன்பெறும் வகையில், உங்கள் அன்புச் சகோதரியாகிய என்னுடைய தலைமையில் அமைந்த அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், விருதுநகர் மாவட்டத்தில் விவசாயப் பணிகளை மேம்படுத்திடவும், விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கவும், இன்றைய தினம், பொதுப்பணி மற்றும் வேளாண் பொறியியல் ஆகிய துறைகளின் மூலம், ஆனைக்குட்டம் நீர்த்தேக்க சீரமைப்புப் பணிகள், புதிய கண்மாய்கள் அமைத்தல், கண்மாய்களை நவீனப்படுத்துதல், கண்மாய்கள் மற்றும் வரத்துக் கால்வாய்கள் தூர்வாருதல், கண்மாய்க் கரைகளைப் பலப்படுத்துதல், கைவிடப்பட்ட விவசாயக் கிணறுகளைப் புதுப்பித்தல், பண்ணைக் குட்டைகள் அமைத்தல், கசிவு நீர்க்குட்டை அமைத்தல், நிலத்தடி நீர் அபிவிருத்திப் பணி மேற்கொள்ளுதல் போன்ற 530 பணிகள், 10 கோடியே 96 இலட்சம் ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்டு, அவற்றை இங்கு நான் திறந்து வைத்துள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடனும், மனநிறைவுடனும் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலங் காலமாக தமிழ்நாட்டில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் தரிசாகக் கிடக்கிறது. இந்தத் தரிசு நிலங்களை வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றி, தமிழகத்தில் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற லட்சியத்தோடு ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டு திட்டத்தை நான் கொண்டு வந்தேன். இந்தத் திட்டத்தின் கீழ், விருதுநகர் மாவட்டத்தில் கண்டு அறியப்பட்டுள்ள 415 ஏக்கர் அரசு தரிசு நிலங்களை, விளை நிலங்களாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உள்ளது.




மேலும், தனியாரிடம் உள்ள தரிசு நிலங்களை மேம்படுத்தி அவற்றை விளை நிலங்களாக மாற்ற, பல்வேறு திட்டங்களை எனது அரசு நிறைவேற்றி வருகிறது.

இன்றைய தினம், பல்வேறு தரிசு நில மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ், 12,793 எக்டேர் நிலத்தை மேம்படுத்தும் வகையில், 7 கோடியே 29 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான பணிகள் நிறைவேற்ற அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கைத்தறி நெசவாளர்கள் வாழ்வு மலர, பல்வேறு நடவடிக்கைகளை உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் எடுத்து வருகிறேன். முந்தைய திமுக ஆட்சிக் காலத்தில், பட்டு மற்றும் பருத்தித் துணிகள் தேக்கம் அடைந்து கிடந்தன. இதனால் கைத்தறிச் சங்கங்கள், தங்கள் உறுப்பினர்களாகிய நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க இயலவில்லை. எனவே, வேலையின்றி வாடிய நெசவாளர் துயர் துடைக்க நெசவாளர் குடும்பங்களுக்கு மூன்று தவணைகளில் மொத்தம் 60 கிலோ அரிசி வழங்க நான் ஆணையிட்டேன். மேலும், தேங்கிக் கிடந்த கைத்தறித் துணிகள் விற்பனையாகவும், ஏழை எளியவர்கள் இவற்றை மிகக் குறைந்த விலையில் வாங்கிப் பயன்பெறவும், குறைந்த விலையில், நியாய விலைக் கடைகள் மூலம் வேட்டி, சேலை விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்தேன். இவை தற்காலிக நடவடிக்கைகள் தான்.

கடும் போட்டிகள் நிலவி வரும் சந்தையில் விற்பனை வாய்ப்புகளைப் பெற வேண்டுமானால், புதுப் புது வண்ணங்களிலும், வடிவங்களிலும் நமது நெசவாளர்கள் ஆடைகளைத் தயாரிப்பது அவசியம். ஆகவே, கைத்தறி நெசவாளர்களின் திறனை மேம்படுத்தி, கைத்தறி ஆடைகளை உயர்ந்த தரத்தில், நவ நாகரீகமான வண்ணங்களிலும், கணினி வடிவமைப்புகளிலும் உற்பத்தி செய்ய நான் ஆணையிட்டேன். அதனால், இன்று கைத்தறி ஆடைகள் எல்லோராலும் விரும்பி வாங்கப்படுகின்றன. கைத்தறி ஆடை அணிவது இன்று, ஒரு மக்கள் இயக்கமாகவே மாறி வருகிறது.

நவீன ரகங்களை உற்பத்தி செய்வதற்குத் தேவையான பயிற்சியை கைத்தறி நெசவாளர்களுக்கு அளிப்பதற்கும், அவர்களது தறிகளை மேம்படுத்துவதற்கும், மைய அரசுடன் இணைந்து ஒரு சிறப்புத் திட்டத்தை எனது தலைமையிலான அரசு செயல்படுத்த உள்ளது. இந்தச் சிறப்புத் திட்டத்தால் 13 மாவட்டங்களிலுள்ள 23,707 நெசவாளர்கள் பயன்பெறுவர். இதில், 7,743 நெசவாளர்கள் விருதுநகர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இத்திட்டம் விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலமாக செயல்படுத்தப்பட உள்ளது. நெசவாளர்களைக் கொண்டு சுயஉதவிக் குழுக்கள் அமைத்து அவர்களுக்கு தேவையான பயிற்சி அளித்து, அவர்களது தறியை மேம்படுத்தச் செய்து, சந்தையின் தேவைக்கு ஏற்ப நவீன ரகங்களை உற்பத்தி செய்வதற்கு ஏற்ற வகையில் 25 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தினை இன்று இந்த இனிய விழாவில் துவக்கி வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

விருதுநகர் மாவட்டத்தில், ஏப்ரல் 2003 முதல், 35 இலட்சம் மீட்டர் பள்ளிச் சீருடைத் துணி உற்பத்தி

செய்ய ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், முதியோர் உதவித் தொகை பெறுவோருக்கான இலவச சேலை உற்பத்திக்கும் தொடர்ச்சியாக நூல் வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, தற்போது விருதுநகர் மாவட்டத்தில் நெசவாளர்களுக்குத் தேவையான வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதை மனநிறைவுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

விருதுநகர் மாவட்ட நெசவாளப் பெருமக்கள் புதுமையான வடிவங்களிலும், கவர்ச்சியான வண்ணங்களிலும், ஆடைகளை நெய்து, நல்ல முறையில் விற்பனை செய்து பயன் அடைய வேண்டும் என்று, இந்த இனிய வேளையில் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், இந்த விழாவில் முக்கியமான அறிவிப்பு ஒன்றை வெளியிடுவதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

ஸ்ரீவில்லிபுத்தூரில், ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களும், நீதிபதிகளின் குடியிருப்புகளும் கட்டுவதற்கு சுமார் 12 ஏக்கர் 54 சென்ட் நிலத்தை ஒதுக்கி, எனது கடந்த கால ஆட்சியின் போதே நான் ஆணையிட்டிருந்தேன். ஆனால், அதற்குப் பின் வந்த திமுக அரசு, அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டு விட்டது. விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு. இன்பத்தமிழன் அவர்கள் அந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும் என்று என்னிடம் அண்மையில் கோரிக்கை விடுத்திருந்தார். அந்தக் கோரிக்கையை ஏற்று, ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைப்பதற்கு 9 கோடியே 82 இலட்சம் ரூபாய் தொகையை ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளேன் என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச் சென்றடைய வேண்டும் என்பதில், எனக்கு மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் எப்போதும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் விருதுநகர் மாவட்டத்திலுள்ள 31,720 பயனாளிகளுக்கு, 19 கோடியே 30 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை இந்த விழாவில் வழங்குவதில் நான் உள்ளபடியே மிகுந்த மன நிறைவு அடைகின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் மூலமாக, 2,465 பயனாளிகளுக்கு 6 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பில், குடியிருப்பு வசதிகளை வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

மாவட்ட தொழில் மையம், கூட்டுறவுத் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தாட்கோ நிறுவனம், வனத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை ஆகிய அரசுத் துறைகளின் சார்பில், 10 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய தொழில் துவங்க கடன் உதவி, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் தொழிற்சாலைகள் அமைக்க கடன் உதவி, மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி, பொருளாதாரக் கடன் உதவி, தனி நபர் கடன் உதவி முதலான பல்வேறு கடன் உதவிகளை இன்று நான் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம், 10,693 பயனாளிகள் பயன் அடைவார்கள் என்பதில் நான் மன நிறைவு அடைகிறேன்.

வருவாய்த் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை, சமூக நலத் துறை ஆகிய அரசுத் துறைகள் மூலமாக 2,574 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா மற்றும் நிலப்பட்டா, 69 பேர்களுக்கு சலவைக் கருவி மற்றும் கல் உடைக்கும் கருவிகள், 548 பேர்களுக்கு தையல் இயந்திரங்கள், 118 பேர்களுக்கு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் முதலான பல்வேறு திட்டங்களின் கீழ் உதவி, 21 பேர்களுக்கு இலவச சமையல் எரிவாயு இணைப்பு ஆகிய நலத் திட்ட உதவிகளை 1 கோடியே 14 இலட்சம் ரூபாய் மதிப்பில் இன்று வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

கல்வித் துறை, தோட்டக் கலைத் துறை, கைத்தறி மற்றும் துணி நூல் துறை, வேளாண்மைத் துறை ஆகிய துறைகளின் சார்பாக 13,412 பயனாளிகளுக்கு 1 கோடியே55 இலட்சம் ரூபாய் மதிப்புடைய பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்குவதில் நான் உளமார்ந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த விழாவில், உடல் ஊனமுற்ற 408 நபர்களுக்கு 9 இலட்சம் ரூபாய் மதிப்பில், பல்வேறு உபகரணங்கள் மற்றும் உதவித் தொகைகளை வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகிறேன்.

இந்த உதவிகளை எல்லாம் பெறுகின்ற பயனாளிகள் இவற்றை அடிப்படையாக வைத்து, தங்கள் தொழில்களைச் சிறப்போடு செய்து, தங்கள் வாழ்வில் மென்மேலும் வளமும், நலமும் பெற்றிட வேண்டுமென்று அவர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தருமரும், துரியோதனனும் ஒரு குலத்தில் தோன்றினாலும், அடிப்படைப் பண்பிலே வேறுபட்டவர்கள். இருவருடைய போக்கும் வேறு; ஏனென்றால் இருவருடைய மனோபாவமும் வேறு !

ஒருமுறை முனிவர் ஒருவர் தருமரிடம் ஒரு எழுதப்படாத ஏட்டைக் கொடுத்தார். துரியோதனன் இடத்திலும் அதே மாதிரி எழுதப்படாத ஏட்டைக் கொடுத்தார்.

தருமரிடத்தில் ஏட்டைக் கொடுத்து "உனக்குத் தெரிந்த தீயவர்களின் பெயர்களை எழுதி வா ! " என்று முனிவர் சொன்னார்.

"தீயவர் யாருமே கிடைக்கவில்லை. அதனால், எவருடைய பெயரையும் எழுதவில்லை" என்றார் தருமர்.

துரியோதனனைப் பார்த்து முனிவர் கேட்டார் "உன்னை என்ன செய்யச் சொன்னேன் ?"

"எனக்குத் தெரிந்த நல்லவர்களின் பெயர்களை எழுதச் சொன்னீர்கள்" என்றான் துரியோதனன்.




துரியோதனன் இடத்தில் ஏட்டைக் கொடுத்து "உனக்குத் தெரிந்த நல்லவர்களின் பெயர்களை எழுதி வா" என்று முனிவர் சொன்னார்.

ஒரு வாரம் கழித்து இருவரும் திரும்பி வந்தார்கள்.

முனிவரிடம் இருவரும் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஏடுகளைக் கொடுத்தார்கள்.

இரண்டு ஏடுகளிலும் எதுவுமே எழுதப்படவில்லை.

தருமரைப் பார்த்து முனிவர் கேட்டார், "உன்னை என்ன செய்யச் சொன்னேன் ?"

"எனக்குத் தெரிந்த தீயவர்களின் பெயர்களை எழுதி வரச் சொன்னீர்கள்!" என்றார் தருமர்.

"ஏன் எழுதவில்லை ?" என்று கேட்டார் முனிவர்.

"ஏன் எழுதவில்லை ? " என்று கேட்டார் முனிவர்.

"நல்லவர்கள் யாருமே கிடைக்கவில்லை, அதனால் எவருடைய பெயரையும் எழுதவில்லை" என்றான் துரியோதனன்.

தருமருக்கு கெட்டவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை.

துரியோதனனுக்கு நல்லவர்கள் யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை !

ஒரே குலத்தில் பிறந்திருந்தாலும் தருமர் வேறு ! துரியோதனன் வேறு !

ஒரே திராவிட இயக்கத்தின் வழியிலே வந்திருந்தாலும், நான் வேறு ! அண்ணாவின் வழி வந்ததாகச் சொல்லிக் கொள்ளும் தலைவர்கள் வேறு!



இது தீபாவளி நேரம் என்பதால் ஒரு பட்டாசு நிகழ்ச்சி என் நினைவுக்கு வருகிறது. அண்மையில் தீபாவளி ஏவுகணை ஒன்று, கோபாலபுரத்தில் இருந்து ஏவப்பட்டு நாகப்பட்டினத்தில் விழுந்து புஸ்வாணமானது.

அதற்கு எந்த விதத்திலும் நான் காரணம் இல்லை!

அது என்ன சிவகாசிப் பட்டாசா, சீறிப் பாய! சென்னையிலே தயாரிக்கப்பட்ட போலிப் பட்டாசு !

இதில் வேடிக்கை என்னவென்றால், அனுப்பிய இடத்துக்கே அதாவது சென்னைக்கே அது சென்று விழுந்தது தான் !

புரட்சித் தலைவரின் பாசறையிலே உருவான புரட்சித் தீ நான்! இந்த போலிப் பட்டாசுகளுக்கா பயப்படப் போகிறேன் ?

நெருப்பு, எங்காவது பட்டாசைப் பார்த்துப் பயப்படுவது உண்டா ?

நீங்களே சொல்லுங்கள் !

கபட நாடகத்தில் கை தேர்ந்த இவர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளி விட்டு, எனது முயற்சிகளுக்கு முழு ஆதரவு தரும் உங்கள் அனைவருக்கும் உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இந்த நல்ல நேரத்தில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும், என் கையாலே வழங்க வேண்டும் என்று ஆசை இருந்தாலும், நேரம் குறைவாகவே இருப்பதால், இந்த மேடையில், 15 பயனாளிகளுக்கு மட்டும், என் கையாலேயே, நானே வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும் அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், இங்கேயே, இப்போதே, உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய, விருதுநகர் மாவட்ட ஆட்சித் தலைவர், திரு. முகமது அஸ்லம் அவர்களுக்கும் அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும் காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க!

புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!

என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

– 22.10.2003 அன்று விருதுநகரில் நடைபெற்ற மாவட்ட அரசு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை.

* * *



# "நாம் சாதிக்கப் பிறந்தவர்கள்" என்னும் உணர்வை மக்களுக்கு ஊட்டி வருகிறேன்

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்

நான் இங்கே வந்து இறங்குவதற்கு முன்பாக ஹெலிகாப்டரில் இருந்து, மேலே இருந்து பார்த்தேன். இந்தப் பந்தலுக்குள் இருக்கின்ற கூட்டத்தைப் போல் இன்னும் 10 மடங்கு கூட்டம் வெளியே நிற்பதைக் கண்டேன்.

பந்தலுக்குள் அமருவதற்கு இடம் இல்லாமல், பந்தலுக்குள் நிற்பதற்குக்கூட இடம் இல்லாமல், இந்தப் பந்தலைச் சுற்றி எட்டுத் திசைகளிலும் கூடி நிற்கும் அன்பு உள்ளங்களுக்கு எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைக் காண வேண்டும் என் உரையைக் கேட்க வேண்டும் என்று ஆவலோடு, ஆர்வத்தோடு இங்கே குழுமியிருக்கும் அத்தனை அன்பு உள்ளங்களுக்கும் அன்பு நெஞ்சங்களுக்கும் மீண்டும் ஒருமுறை என் அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நெல்லுக்குக் களஞ்சியமாய், தமிழ்ச் சொல்லுக்குக் களஞ்சியமாய், கலைகளுக்குக் களஞ்சியமாய் விளங்குகின்ற வரலாற்றுக் களஞ்சியம் தஞ்சை மாவட்டம் !

காலம் தோறும் பல்வேறு சிறப்புகளின் களஞ்சியமாக விளங்கும் கவின்மிகு தஞ்சை மாவட்டத்தின் தலைநகராம் தஞ்சாவூரில் கூடியிருக்கும் அன்புக் களஞ்சியங்கள் நீங்கள் !

உங்களைக் காணவும், உங்களுடன் சில கருத்துகளைப் பரிமாறவும், நிறைவேற்றப்பட்ட பணிகளைத் தொடங்கி வைக்கவும், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டவும், நலத்திட்ட உதவிகளை வழங்கவும், இன்று கிடைத்த இந்த இனிய வாய்ப்பு குறித்து நான் மிகவும் மகிழ்கிறேன்.

இது வரை நான் 27 மாவட்டங்களில் அரசு விழாக்களில் கலந்து கொண்டு, 6,858 கோடி ரூபாய் மதிப்புள்ள திட்டங்களை வழங்கி இருக்கிறேன்.

இன்று, 28–ஆவது மாவட்டமாக தஞ்சை மாவட்டத்திற்கு வந்துள்ளேன். இன்று தஞ்சை

மாவட்டத்திற்கு 235 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள திட்டங்களையும், நலத் திட்ட உதவிகளையும் கொண்டு வந்திருக்கிறேன். இதையும் சேர்த்துக் கொண்டால், ஒட்டுமொத்தமாக நான் வழங்கியுள்ள திட்டங்களின் மதிப்பு 7,083 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஆகும். நிறைவேற்றப்பட்ட திட்டங்களின் மதிப்பு 2,942 கோடியே 48 இலட்சம் ரூபாய் ஆகும். அடிக்கல் நாட்டியுள்ள திட்டங்களின் மதிப்பு 4,140 கோடியே 67 இலட்சம் ரூபாய் ஆகும். நான் வழங்கியுள்ள நலத்திட்ட உதவிகளின் மதிப்பு 308 கோடியே 61 இலட்சம் ரூபாய் ஆகும். பயன் அடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை 5 இலட்சத்து 4 ஆயிரத்து 165 ஆகும். இத்துடன் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் சென்று என் அன்புக்குரிய மக்களைக் கண்டு,1,34,954 திட்டப் பணிகளைத் திறந்து வைத்து, 90,110 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 5,04,165 அடித்தளத்து மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகின்ற மாபெரும் வாய்ப்பு எனக்குக் கிடைத்து உள்ளது என்பதை எண்ணி நான் உள்ளம் பூரிப்படைகிறேன்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மாமன்னன் ராஜராஜனால் உருவாக்கப்பட்டு, ஆகாயத்தை உரசி நிற்கும் ஆலயமாய் தஞ்சைப் பெரிய கோயில் உயர்ந்து நிற்க தனக்கென்று ஒரு புகழ் மிக்க வரலாற்றைக் கொண்ட புண்ணிய பூமி இது!

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டை, எட்டு ஆண்டுகளுக்கு முன் நான் நடத்தியது இங்கு தான்.

பழம் பெருமை படைத்த ஊர் தஞ்சாவூர். கி.பி. 850–ஆம் ஆண்டில், பிற்காலச் சோழர் மரபைத் தொடங்கிய விஜயாலயச் சோழன் முதல் ராஜேந்திர சோழன் காலம் வரை சோழ சாம்ராஜ்யத்தின் தலைநகராக விளங்கியது தஞ்சாவூர்.

புராதனக் கோயில் இல்லாத ஊரே இல்லை என்னும்படிக்கு, ஊர் எல்லாம் பழங்கோயில் உள்ள மாவட்டம் தஞ்சை மாவட்டம்!

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தர மூர்த்தி ஆகிய மூவர் பெருமக்களால் பாடப்பட்ட தலங்களைப் பாடல் பெற்ற தலங்கள் என்று அழைப்பார்கள். அப்படிப் பாடல் பெற்ற தலங்கள் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் 51 தலங்கள் உள்ளன என்பது எத்தகைய புண்ணிய பூமி தஞ்சை பூமி என்பதை எடுத்துக் காட்டுகிறது.

நாயன்மார்களால் பாடப்பட்ட தலங்களுக்கு பாடல் பெற்ற தலங்கள் என்று பெயர் என்றால், ஆழ்வார்களால் பாடல் பெற்ற தலங்களை மங்களா சாஸனத் தலங்கள் என்று அழைப்பார்கள். தஞ்சை மாவட்டத்தில் மட்டும் அவ்வாறு ஆழ்வார் பெருமக்களால் பாடப் பெற்ற தலங்கள் பன்னிரண்டு!

புனித பீட்டர் ஆலயம், பூண்டி மாதா ஆலயம் ஆகிய கிறித்துவ ஆலயங்களும், தஞ்சை சொம்சு பெரும் பள்ளிவாசல் உட்பட, தஞ்சை மாவட்டத்தின் பல்வேறு பள்ளிவாசல்களும், மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கின்றன.

இவ்வாறு சீர்மிகு ஆலயங்களால் சிறப்பு வாய்ந்த மாவட்டம் தான் தஞ்சை மாவட்டம்!

2,000 ஆண்டுகளுக்கு முன், சங்ககாலச் சோழ மன்னர் கரிகாலனால் கட்டப்பட்டு இன்றைக்கும் வலிமையோடு விளங்கும் கல்லணை;

மராட்டிய அரசர் இரண்டாம் சரபோஜி மன்னர் காலத்தில், சாளுவ நாயக்கன்பட்டினம் என்னும் ஊரில் ஏழு அடுக்குகளோடு கட்டப்பட்ட எழில் கொஞ்சும் மனோரா;

தேவாரப் பாடல்களால் போற்றப்பட்ட ஐயாறப்பர் திருக்கோயிலையும், சத்குரு தியாக பிரம்மத்தின் நினைவாலயத்தையும் கொண்டு விளங்கும் திருவையாறு;

சோழப் பேரரசர்களின் தலைநகராய்ப் பழம் பெருமை வாய்ந்த பழையாறை;

தமிழகத்தின் சிற்பக் களஞ்சியம் என்று கூறத்தக்க தாராசுரம்;

அறுபடை வீடுகளில் ஒன்றாகி, ‘அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையன்’ அழகிய கோயில் கொண்ட திருவேரகம் என்னும் சுவாமிமலை;

ஐம்பதுக்கும் மேற்பட்ட பெரிய கோயில்கள் ஓர் ஊரில் இருக்க முடியுமா என்றால் ஏன் இல்லை ? இதோ இருக்கிறதே கும்பகோணம் என்று கூறத்தக்க குடந்தை நகரம்;

கொள்ளிடம் நதிக்கரையில் அமைந்து, தஞ்சை மாவட்டத்தின் எல்லையாகத் திகழும், இயற்கை எழில் மிக்க கீழணை;

கீழை நாட்டுச் சுற்றுலாப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் புத்தர் சிற்பத்தைக் கொண்டு விளங்குகின்ற மானம்பாடி;

இந்தச் சீர்மிகு இடங்களால் சிறப்பு வாய்ந்த மாவட்டம் தான் தஞ்சை மாவட்டம்!

‘கலைகளே உங்கள் தாயகம் தான் தஞ்சாவூரா ? என வியக்கும் வண்ணம் தஞ்சை மண்ணில் தான் எத்தனை எத்தனை கலைகள்!

23 மெட்டுக்களுடன் 17 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டு இன்று உலகப் புகழ் பெற்று விளங்கும் தஞ்சாவூர் வீணை; மரப் பலகைகளில் முப்பரிமாணமாகத் தெய்வ உருவங்களை அமைத்து, வண்ண மணிகள் மற்றும் தங்க ரேக்கால் அலங்கரிக்கப்படும் தஞ்சாவூர் ஓவியங்கள்; பித்தளைத் தட்டில் செம்பு, வெள்ளி ஆகிய உலோகத் தகடுகளைக் கலை நயத்துடன் பதித்துத் தயாரிக்கப்படும் தஞ்சாவூர் கலைத் தட்டுகள்; கலைக் குடங்கள்; ஆபரணப் பெட்டிகள்; நெல், கிராம்பு, ஏலக்காய், சந்தன மணிகள் ஆகியவற்றால் சரிகை




வேலைப்பாடுகளுடன் உருவாக்கப்படும் உலகப் புகழ் பெற்ற தஞ்சாவூர் மாலைகள்;

தரணியெல்லாம் போற்றும் தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள்;

தெய்வத் திருமேனிகளை உலோகத்தில் உருவாக்கும் தெய்விகக் கலைப் படைப்புகளான உலோக விக்கிரகங்கள்;

வெண்கலத்தால் செய்யப்படும் மங்கல விளக்குகளாம், நாச்சியார்கோவில் மற்றும் கும்பகோணம் குத்து விளக்குகள்;

நெட்டி என்னும் தாவரத்தின் தண்டுகளைப் பயன்படுத்திப் பேரழகோடு படைக்கப்படும் நெட்டி வேலைப்பாடுகள்;

பட்டில் சரிகைகள் பளபளக்க, பாவையர் உள்ளங்களைப் பரவசப்படுத்தும், திருபுவனம் பட்டுப் புடவைகள்;

திருப்பனந்தாளுக்கு அருகில் சிக்க நாயக்கன் பேட்டையில், கலம்காரி என்னும் வண்ணத் துணியிலே செய்யப்படும் கலம்காரி துணி வேலைப்பாடுகள்;

கோயில் எதுவானாலும், சாமிக்குப் பிடிக்கும் குடை கும்பகோணக் குடை தான் என்னும்படி பல்வேறு வண்ணங்களில் பார்ப்பவர்க்கு மகிழ்வூட்டும் கோயில் குடை வேலைப்பாடுகள்;

இந்தச் சீர்மிகு கலைகளால், சிறப்பு வாய்ந்த மாவட்டம் தான் தஞ்சை மாவட்டம்!

இத்தனை சிறப்பும் பெருமையும் கொண்ட தஞ்சாவூர் மாவட்டத்திற்கு, மொத்தம் 235 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்து, புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் இன்று தஞ்சாவூர் வந்துள்ளேன்.

இன்றைய தினம், தஞ்சாவூர் மாவட்டத்தில், அனைத்து மக்களும் பயன் அடையும் வகையில், 109 கோடியே 48 இலட்சம் ரூபாய் மதிப்புடைய, 6,497 முடிவுற்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாவட்ட ஊரக வளர்ச்சி, நகராட்சி, பேரூராட்சி துறைகள் மூலமாக, 55 கோடியே 17 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் செய்து முடிக்கப்பட்ட சாலை மேம்பாட்டு பணிகள், கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகள், மகளிர் சுய உதவிக் குழுக் கட்டடங்கள், சுகாதார வளாகங்கள், வணிக வளாகங்கள் போன்ற பணிகளைத் திறந்து வைத்ததில் நான் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறை மூலமாக, 36 கோடி ரூபாய் மதிப்பில் முடிக்கப்பட்ட 16 பாலங்கள், சாலைப் பணிகள் பொதுப்பணித் துறை, காவல் துறை, சுகாதாரத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, கல்வித் துறைகள் மூலமாக, 7 கோடியே 58 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட, பல்வேறு கட்டுமானப் பணிகள் ஆகியவற்றை இந்த இனிய விழாவில் திறந்து வைத்ததில் நான் பெருமிதம் அடைகிறேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 5 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பில், ஆடுதுறை,

திருவிடைமருதூர், திருபுவனம் ஆகிய பகுதிகளுக்கான, கூட்டுக் குடிநீர்த் திட்டம், மற்றும் 45 கிராமங்களில் முடிக்கப்பட்ட பல்வேறு குடிநீர்த்திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, 3 கோடி ரூபாய் மதிப்பில், தாராசுரம், திருச்சிற்றம்பலம் ஆகிய இடங்களில் நிறுவப்பட்ட, 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்கள் ஆகியவற்றை இன்று திறந்து வைத்ததில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஒரு மன்னர், வேற்று நாட்டின் மீது படையெடுத்துச் சென்றிருந்தார். பல்லாயிரக் கணக்கான வீரர்களும் அவருடன் சென்றிருந்தார்கள். முதல் நாள் நடந்த போரில், அவர்கள் தோல்வி அடைய நேர்ந்தது. மறு நாள் போரைத் தொடங்குகிற வேளை வந்தது. அப்போது, படைகள் அணி திரளவில்லை. வீரர்களுக்கு என்ன நேர்ந்தது? ஏன் அவர்கள் அணி வகுக்கவில்லை என்று புரியாததால் மன்னர் படைத் தலைவரை அனுப்பி விசாரித்து வரச் சொன்னார்.

படைத் தலைவர் திரும்பி வந்து, மன்னரிடம் சொன்னார், "நமது வீரர்கள் போரிடத் தயங்குகிறார்கள். நாம் நிச்சயம் போரில் தோற்று விடுவோம் என்று அவர்கள் நம்புகிறார்கள். ஆகவே ஊருக்குத் திரும்பி விடலாம் என்று நினைக்கிறார்கள்" என்று படைத் தலைவர் தயங்கித் தயங்கி மன்னரிடம் சொன்னார்.

"அவர்கள் நினைப்பதும் சரி தான். நாம் ஒன்று செய்யலாம். அருகில் இருக்கிற ஆலயத்திற்குச் சென்று, கடவுளிடம் உத்தரவு கேட்போம். சம்மதம் கிடைத்தால் தொடர்ந்து போராடலாம். இல்லை என்றால் நாட்டுக்குத் திரும்பிப் போய் விடலாம்" என்று மன்னர் சொன்னார்.

படைத் தலைவருக்கு விளங்கவில்லை. இருந்தாலும் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு மன்னரிடம் கேட்டார். "அரசே, கடவுளின் விருப்பத்தை எப்படித் தெரிந்து கொள்வது?"

அதற்கு மன்னர் "ஒரு தங்க நாணயத்தைச் சுண்டிப் பார்ப்போம். தலை விழுந்தால் தொடர்ந்து போராடலாம். பூ விழுந்தால் ஊருக்குத் திரும்பிப் போய் விடலாம். நீங்கள் போய், வீரர்கள் எல்லோரையும் அணி வகுத்து நிற்கச் செய்யுங்கள். நான் வந்து விடுகிறேன்" என்று பதில் சொன்னார்.

சிறிது நேரத்தில் படை வீரர்கள் அணி வகுத்து நின்றார்கள். மன்னர் வந்தார். ஒரு தங்க நாணயத்தை எடுத்து உயரத்தில் வீசினார். தரையில் அந்தத் தங்க நாணயம் விழுந்த போது, அது தலையா, பூவா என்று பார்க்குமாறு படைத் தலைவரிடம் சொன்னார்.

படைத் தலைவர் சென்று பார்த்தார். தலை விழுந்து இருந்தது. அதை எடுத்து வரச் சொல்லி, வீரர்களிடம் காட்டி, "இதோ தங்க நாணயத்தின் தலை விழுந்திருக்கிறது. இப்போது என்ன சொல்கிறீர்கள்? போராடலாமா?" என்று மன்னர் கேட்டார்.

படை வீரர்கள் அனைவரும் மன்னரை வணங்கி, "போராடுவோம்! போராடுவோம்!" என்று விண் அதிர முழக்கமிட்டார்கள்.

போர் தொடங்கியது. அன்று மாலைக்குள் எதிரிப் படை துரத்தப்பட்டது.

வெற்றிக்குப் பிறகு மன்னரும், வீரர்களும் தாயகம் திரும்பினார்கள். அங்கு அவர்கள் பெற்ற வெற்றியைக் கொண்டாட மாபெரும் விழாவுக்கு மந்திரி ஏற்பாடு செய்திருந்தார்.

மந்திரி மன்னரிடம் கேட்டார், "மாமன்னர் அவர்களே! வீரர்கள் போரிட மறுக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் வந்ததே? அப்புறம் எப்படி வெற்றி பெற்றீர்கள்?"

மன்னர் எதுவும் பதில் பேசவில்லை. தங்க நாணயத்தை மந்திரி கையிலே கொடுத்து சுண்டிப் பார்க்கச் சொன்னார். மந்திரி அவ்வாறே செய்தார்.

"என்ன விழுந்து இருக்கிறது என்று பாருங்கள்!" என்றார் மன்னர்.

மந்திரி பார்த்தார். தலை விழுந்து இருந்தது. உடனே அந்த நாணயத்தை எடுத்து வந்தார். மன்னர், "அந்த நாணயத்தை நன்றாகப் பாருங்கள். நாம் எப்படி வெற்றி பெற்றோம் என்பது புரியும்," என்று சொன்னார்.

மந்திரி அந்த நாணயத்தை நன்றாகப் பார்த்தார். திருப்பித் திருப்பிப் பார்த்தார். இரண்டு பக்கங்களிலும் தலை தான் இருந்தது.

ஒற்றை நாணயத்தை வைத்தே, வீரர்களின் மனோபாவத்தை மாற்றினார் மதி நலமிக்க மன்னர்!

எந்த வீரர்கள் போராடத் தயங்கினார்களோ, அந்த வீரர்களைக் கொண்டே மகத்தான வெற்றியை மன்னர் பெற்றார்.

தன்னம்பிக்கை என்பது ஒரு மா மருந்து. அது பல அற்புதங்களை ஆற்ற வல்லது. உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், மாவட்ட அரசு விழாக்களில் மக்களுக்காகத் திட்டங்களை அர்ப்பணித்து, நலத் திட்ட உதவிகளை வழங்கும் பணியை மட்டும் செய்யவில்லை. மக்களுக்கு நம்பிக்கை வழங்கி, "நாம் சாதிக்கப் பிறந்தவர்கள்" என்னும் உணர்வையும் அவர்களுக்கு ஊட்டி வருகிறேன், வழங்கி வருகிறேன்.

இந்தச் சீர்மிகு விழாவில், 115 கோடியே 67 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 4,976 பணிகளுக்கு, இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமிதம் கொள்கின்றேன்.

ஊரக வளர்ச்சி, மற்றும் நகராட்சித் துறைகள் மூலமாக, 41 கோடியே 88 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மகளிர் சுகாதார வளாகங்கள், முழு சுகாதார திட்டப் பணிகள், கதிரடிக்கும் களம், பூங்கா மேம்பாட்டுப் பணி, வணிக வளாகம் போன்ற பல்வேறு பணிகளுக்கும்




அடிக்கல் நாட்டியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக, 46 கோடியே 35 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய பாலங்கள் கட்டுதல், மற்றும் சாலைகள் மேம்படுத்துதல் பணிகளுக்கும் பொதுப்பணி மற்றும் கல்வித் துறைகள் மூலமாக, 9 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மாணவர் விடுதிகள், பள்ளி வகுப்பறைகள் கட்டுதல் போன்ற பணிகளுக்கும், அடிக்கல் நாட்டியதில் நான் அக மிக மகிழ்கின்றேன்.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக, 7 கோடியே 72 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 446 கிராமங்களில், 1 லட்சத்து 26 ஆயிரத்து 928 பேர் பயன் பெறும் வகையில், அமைக்கப்பட இருக்கும் குடிநீர்த் திட்டங்களுக்கும் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக, திருநாகேஸ்வரம் பேரூராட்சியில், 1 கோடியே 63 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 33/11 கிலோ வோல்ட் மின் திறன் உள்ள துணை மின்நிலையம் அமைக்கும் பணிக்கும் அடிக்கல் நாட்டியதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தஞ்சாவூர் மாவட்டம் என்றாலே, கும்பகோணம் நினைவுக்கு வரும். கும்பகோணம் என்றால், மகாமகம் நினைவுக்கு வரும். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குரு சிம்ம ராசியில் பிரவேசிக்கும் நாளில் கும்பகோணம் மகாமகக் குளத்தில், மகாமகப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. அன்று நாடு முழுவதில் இருந்தும் பல இலட்சக்கணக்கான பக்தர்கள் அந்தத் திருக்குளத்தில் புனித நீராட வருவார்கள். வட நாட்டில் கும்பமேளா போன்று தமிழ் நாட்டில் மகாமகத் திருவிழா மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

எதிர் வரும் 6.3.2004 அன்று, கும்பகோணம் நகரில் நடைபெற உள்ள மகாமகத் திருவிழாவிற்கு, இந்தியா முழுவதிலிருந்தும் வருகை தரும் பக்தர்களின் எண்ணிக்கையையும், வாகனங்களின் எண்ணிக்கை-யையும் கருத்தில் கொண்டு, சீரான வாகனப் போக்குவரத்தை உறுதி செய்திட, 8.76 கிலோ மீட்டர் நீளத்திற்கு கும்பகோணம் புற வழிச் சாலையை அமைத்திட நான் ஆணையிட்டு, அதற்கென்று 20 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதையும், இந்தக் கும்பகோணம் புறவழிச்சாலை தடங்கலின்றி அமைந்திட, சாலை வழியில் காவேரி ஆறு குறுக்கிடும், உமா மகேஸ்வரபுரம், மற்றும் பாபுராஜபுரம் ஆகிய இரண்டு இடங்களுக்கு அருகிலும், அரசலாறு குறுக்கிடும் வலையப்பேட்டைக்கு அருகிலும், ஆக மூன்று இடங்களில், மேல் நிலைப் பாலங்கள் அமைத்திட ஆணையிட்டு, 3 கோடியே 94 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதே போல, கும்பகோணம் நகருக்கு உள்ளும், மற்றும் நகரைச் சுற்றியும் உள்ள, 57 கிலோ மீட்டர் நீளச் சாலைகளை மேம்படுத்திட, 3 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கும்பகோணத்தில், சுமார் 1,000 நபர்கள் அமரக்கூடிய அளவில் ஒரு கலை அரங்கத்தை, 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பில் அமைத்திட ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதை உளமார்ந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மகாமகத் திருநாளன்று, மகாமகக் குளத்தருகே எழுந்தருளி பக்தர்களுக்கு தீர்த்தவாரி தரிசனம் வழங்கும், தெய்வத் திருமேனிகள் குடிகொண்டுள்ள, 17 கோயில்களிலும் குடமுழுக்கு நடத்திட நான் ஆணையிட்டுள்ளேன். இவற்றில், போதிய நிதி வசதி

இல்லாத 8 கோயில்களில், குடமுழுக்கு நடத்திட, 45 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, ஆணை பிறப்பித்து உள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், எனது வழிகாட்டுதலின்படி, கும்பகோணம் நகராட்சி மூலமாக் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குதல், திடக்கழிவு மேலாண்மை, சாலைப் பணிகள் முதலான பல்வேறு பணிகள், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் உயிர் நாடியாக உள்ள வேளாண் தொழிலுக்கு எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 10–ஆவது ஐந்தாண்டு திட்டக் காலத்தில், முதன்மைத் துறை, 4 சதவிகித வளர்ச்சி எய்த வேண்டும் என்ற முனைப்போடு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறேன். கர்நாடக அரசு, போதிய அளவு பாசன நீரைக் காவிரியில் திறந்து விடாததாலும், பருவ மழை பொய்த்து விடுவதாலும், காவிரி டெல்டா விவசாயிகளுக்கு, விவசாயத்திற்குத் தேவையான அளவு நீர், கிடைக்காத சூழ்நிலை உள்ளது. இந்தச் சூழ்நிலையில் ஒவ்வொரு துளி நீரையும், சேமிக்க வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது. பழுதடைந்த ரெகுலேட்டர்களால், அறுவடைப் பருவங்களில் சுமார் 350 மில்லியன் கன அடி பாசன நீர் வீணாகிறது. இதைத் தடுக்க, இந்த ரெகுலேட்டர்களை மாற்றி புதிய ரெகுலேட்டர்களைப் பொருத்தவும், பழுதடைந்த கட்டட அமைப்புகளைச் சீர் செய்யவும், 34 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

பருவ மழை பொய்த்த சூழ்நிலையில், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்திடவும்; நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்திடும் வகையில் மழை நீர் சேமிப்பு அமைப்புகளை உருவாக்கிடவும்; வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், 4 கோடியே 85 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 1,719 பண்ணைக் குட்டைகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், காவிரி பாசனப் படுகை மேம்பாட்டுத் திட்டம், சுழற்சி முறை பாசனத் திட்டம், சொட்டு நீர்ப் பாசனத் திட்டம், பாழடைந்த கிணறுகளைப் புதுப்பிக்கும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழ், 6 கோடியே 38 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் பல்வேறு வேளாண் வளர்ச்சித் திட்டங்களுக்கு, 2 கோடியே 38 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிற்கு உரிய நீரைக் கர்நாடக அரசு வழங்காததாலும், பருவமழை பொய்த்து விட்டதாலும், காவிரி டெல்டா விவசாயிகள், குறுவைப் பயிர் செய்யப் போதுமான அளவு தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே, குறுவைப் பயிர் செய்ய இயலாத நிலையில், விவசாயிகளுக்கு ஓரளவாவது வருமானம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில், இந்த வருடம் மாற்றுப் பயிர் செய்யும் திட்டத்தை அறிமுகப்படுத்த நான் உத்தரவிட்டேன். அதன்படி, தஞ்சாவூர் மாவட்டத்தில், 37,065 ஏக்கர் நிலத்தில், குறைந்த நீர் தேவைப் பயிரான, உளுந்து, எள், நிலக்கடலை, மக்காச் சோளம், சூரியகாந்தி, கம்பு, கேழ்வரகு, வெங்காயம் மற்றும் காய்கறிப் பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு விவசாயிகள் நல்ல பயன் பெற்றுள்ளனர் என்பதை அறிந்து நான் மன நிறைவு அடைகின்றேன்.

மேட்டூர் அணையிலிருந்து தண்ணீரைத் திறந்து விட, 7.10.2003 அன்று நான் ஆணையிட்டேன். அந்தத் தண்ணீரை முறையாகப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்குமாறு, விவசாயப் பெருமக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு ஊரில் ஒரு பயில்வான் இருந்தான். ஏழு, எட்டுப் பேர் ஏக காலத்தில் மோத வந்தாலும் அவர்களை அடித்து வீழ்த்தக் கூடிய ஆற்றல் பெற்றவன் அந்தப் பயில்வான்.

ஒரு நாள் ஒருவன் அந்தப் பயில்வானை அடித்து விட்டான். இதில் என்ன வேடிக்கை என்றால், அடித்தவன் காற்றடித்தால் கூடப் பறந்து விடும் அளவுக்கு நோஞ்சானாக இருந்தான். அவன் பயில்வானைத் தொடர்ந்து அடித்துக் கொண்டே இருந்தான். அவர்களைச் சுற்றிப் பெரிய கூட்டமே கூடி விட்டது.

கூட்டத்தில் கூடி இருந்தவர்கள், "பயில்வான் ஏன் திருப்பித் தாக்காமல் இருக்கிறான்? இவன் ஓர் அடி அடித்தாலே அந்த நோஞ்சான் வீழ்ந்து விடுவானே!" என்று தங்களுக்குள்ளே பேசிக் கொண்டிருந்தார்கள்.

அப்போது ஒருவர் சொன்னார்: "இத்தனை அடிகளையும் வாங்கிக் கொண்டிருந்தாலும், ஏன் திருப்பித் தாக்கவில்லை தெரியுமா? பயில்வான் கருணையே உருவானவன். திருப்பி அடித்தால் அந்த நோஞ்சான் தாங்க மாட்டான் என்று தான் அடிக்கவில்லை" என்று வியாக்யானம் செய்தார்.

இருந்தாலும், பயில்வான் தொடர்ந்து அடி வாங்குவதைத் தாங்க முடியாத சில பேர், "திருப்பி அடி! திருப்பி உதை!" என்று கூக்குரல் இட்டார்கள்.

பயில்வானுக்கு கோபம் வந்தது. அடித்தவன் மீது அல்ல; 'அடி! உதை!' என்று சொன்னார்களே, அவர்கள் மீது!

"என்னை என்ன ஏமாளி என்று நினைத்தீர்களா? நான் யார்? மாபெரும் பயில்வான். ஒரு இலட்சம் ரூபாய் பந்தயம் கட்டினால் தான், சண்டை போடுவேன். அது தான் வழக்கம்! அதை விட்டு விட்டு, பைசா எதுவும் தராமலே, 'ஒருவனை அடி' என்கிறீர்களே! பணம் வாங்காமல் சண்டை போட நான் என்ன ஏமாளியா?" என்று கேட்டானாம்.

தன்னைத் தாக்குபவனைக் கூட, பணம் தந்தால் தான் தாக்குவேன் என்றான் பணத்தாசை பிடித்த அந்தப் பயில்வான். அவனுக்குப் பணத்தைத் தவிர, வேறு எதிலும் நாட்டம் இல்லை !

விலை நிர்ணயித்தால் தான், வீரத்தையே காட்ட முடியும் என்று வாழ்ந்தான் அந்தப் பயில்வான். அந்தப் பயில்வானைப் போன்ற அரசியல்வாதிகளுக்கு நம் நாட்டில் பஞ்சமே இல்லை.

இல்லை என்றால், அதைப் பற்றிப் பேசக் கூட மாட்டார் அப்படித் தானே!

நான் அவருக்கும், அவரைப் போன்ற பொறுப்பற்ற போலித் தலைவர்களுக்கும் சொல்லிக் கொள்வேன்: எப்படியும் காவிரி நீரில், தமிழகத்துக்கு உள்ள உரிமையை நான் பெற்றே தீருவேன்! இந்த உரிமைப் போராட்டத்துக்கு, மக்கள் துணை ஒன்றே எனக்குப் போதும். ஆனால், ஒன்று! இந்த உரிமைப்



காவிரிப் பிரச்சினை பொதுப் பிரச்சினை! அது தமிழகத்தின் உயிர்ப் பிரச்சினை! அந்தப் பிரச்சினைக்காக எல்லா அரசியல்வாதிகளும் போராடுவார்கள் என்று மக்கள் எதிர்பார்த்திருக்க, சில அரசியல் தலைவர்களோ அதில் தங்களுக்கு என்ன ஆதாயம் கிடைக்கும் என்று லாபக் கணக்குப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் இந்த தமிழ் மண்ணில் பிறந்தவர்கள் தானே ? தமிழ் மக்களின் ஆதரவால் தலைவர்கள் ஆனவர்கள் தானே ? பின் ஏன் போராடவில்லை ? ஏன் குரல் கொடுக்கவில்லை ? அப்படிக் காவிரிக்காகப் போராடும் பொறுப்பு, உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்கு மட்டுமே சொந்தம் என்று அந்தப் பொறுப்பை எனக்கென்று ஒதுக்கிவிட்டு, ஒதுங்கிவிட்டார்களா ? அல்லது மக்கள் எக்கேடு கெட்டால் என்ன மத்தியிலே தங்கள் கட்சிக்காரர்கள் மந்திரிகளாக இருந்தால் போதும் என்று முடிவு கட்டி விட்டார்களா ? ஒரு தலைவர் அண்மையில், ஒரு வாசகத்தை உதிர்த்திருக்கிறார். "இவர்கள் ஆட்சி செய்வார்கள்; எதிர்க்கட்சிக்காரர்கள் சென்று காவிரித் தண்ணீரைக் கொண்டு வர வேண்டுமா ?" என்பது அவரது கேள்வி. அப்படியானால், ஆட்சிப் பொறுப்பைக் கொடுத்தால் தான், தண்ணீரைக் கொண்டு வருவார்;

போராட்டத்தை, அரசியல் ஆதாயத்துக்காக, யார் யார் அலட்சியப் படுத்துகிறார்களோ அவர்களை தமிழ்ச் சமுதாயம் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தத் தான் போகிறது என்பதை இந்தத் தஞ்சை மண்ணிலே நின்று கொண்டு இன்றைக்கு அறுதியிட்டு, உறுதியாகக் கூறுகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், 45 கிலோ மீட்டர் நீளக் கடற்கரையையும், 27 மீனவக் கிராமங்களையும் கொண்டது. மீனவர்களின் மீன்பிடி தொழிலை மேம்படுத்திடவும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடவும், தொலைநோக்குத் திட்டத்தின் அடிப்படையில், சேதுபாவா சத்திரத்தில், 1 கோடியே 32 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், மீன்பிடி இறங்கு தளம் அமைக்கப்பட்டு இன்று என்னால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. மேலும் மீனவர் வசதிக்காக, அதே கிராமத்தில், 6 இலட்சம் ரூபாய் மதிப்பில், டீசல் பங்க் ஒன்று அமைக்கவும், இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன் என்பதையும், பட்டுக்கோட்டையில், 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட மீனவர் அங்காடியைத் திறந்து வைத்துள்ளேன் என்பதையும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தேசிய சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம், ஒருங்கிணைந்த கடல் மீன் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கீழ், இந்த ஆண்டு 5,411 மீனவர்களுக்கு, 88 இலட்சம் ரூபாய் மதிப்பில் நிவாரணம், கண்ணாடி இழைப் படகு, வலைகள், மற்றும் கடன் உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டுள்ளன. மேலும், இந்த விழாவில், 20 பயனீட்டாளர் குழுக்களுக்கு 25 இலட்சம் ரூபாய் மதிப்பில் எந்திரத்துடன் கூடிய கண்ணாடி இழைப் படகு, மற்றும் மீன்பிடி வலைகள், வழங்கப்பட இருக்கின்றன என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில், மீன் வளத்தை அதிகரிக்கவும், அதன் மூலம் மீன்வளர்ப்போர், மற்றும் ஏழை, எளிய மீனவர்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும், மீன்வள மேம்பாட்டு இயக்கத்தை, 18.7.2002 அன்று, இராமநாதபுரத்தில் நான் தொடங்கி வைத்தேன். இத்திட்டத்தின் கீழ், தஞ்சாவூர் மாவட்டத்தில், சின்னமனைப் பகுதியில், 2 இலட்சம் நுண் இறால் குஞ்சுகளைக் கடலில் இருப்பு செய்ய நடவடிக்கை எடுக்க நான் உத்தரவிட்டு உள்ளேன். இந்தத் திட்டம், அதிக அளவில் இறால் மீன் கிடைக்க வழிவகை செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்வதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

தஞ்சாவூர் மாவட்டம், குறிப்பாக கும்பகோணம் பகுதி பட்டுக் கைத்தறி நெசவுக்குப் புகழ் பெற்றது. இம் மாவட்டத்திலுள்ள,. 16 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைத்தறி நெசவாளர்கள், பட்டுச் சேலைகள், மற்றும் பட்டுப் பாவாடைகள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர்.

நெசவாளர்கள் என்றாலே, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு கசக்கின்ற வேம்பு! அதனால் தான், அவர்கள் உற்பத்தி செய்த பட்டு ஜவுளிகள் மலை போல அவருடைய ஆட்சிக் காலத்தில், தேங்கிக் கிடந்த போதும், அது பற்றிக் கடுகளவு கூட அவர் கவலைப்படவில்லை. ஆனால், கடந்த 2001–ஆம் ஆண்டில், உங்கள் அன்புச் சகோதரியாகிய நான் தமிழகத்தின் முதலமைச்சராக மீண்டும் பொறுப்பேற்றதும் விற்பனையாகாமல் தேங்கிக் கிடந்த பட்டு ஜவுளிகளின் விற்பனையை அதிகரிக்க, 35 சதவிகிதம் முதல், 55 சதவிகிதம் வரையிலான தள்ளுபடி, சிறப்புத் தள்ளுபடி, விழாக் காலத் தள்ளுபடி முதலானவற்றை அறிவித்து, விற்பனையை அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொண்டேன். இதன் மூலம், தேங்கிக் கிடந்த 20 கோடி ரூபாய்க்கும் மேலான பட்டு ஜவுளிகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பெண்களும், கைத்தறித் தொழில்நுட்பத்தில் பயிற்சி பெற்றிட வேண்டும் என்ற நோக்கத்தில், முதல் கட்டமாக, 50 பெண்கள் தேர்வு செய்யப்பட்டு, திருபுவனத்தில் 1 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் செலவில், அவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம், சேமிப்பு மற்றும் பாதுகாப்புத் திட்டம், ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டம் முதலான பல்வேறு நலத் திட்டங்களின் கீழ், 5,481 நெசவாளர்களுக்கு, 3 கோடியே 22 இலட்சம் ரூபாய் மதிப்பிலான உதவிகள் இந்த ஆண்டு வழங்கப்பட்டுள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவேற்புரை ஆற்றிய மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோசலராமன் அவர்கள் பேசுகின்ற போது, இந்த மாவட்டத்தில் ஆண்களை விடப் பெண்களின் எண்ணிக்கை அதிகமாக உள்ளது என்ற மகிழ்ச்சியான செய்தியை இங்கே தெரிவித்தார். பெண் சிசுவதை என்ற கொடுமை இந்த மாவட்டத்தில் நிகழவில்லை என்பதைத் தெரிவித்தார். இதைக் கேட்டதும் உள்ளபடியே நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன்.

தொட்டில் குழந்தைத் திட்டம் பற்றி புகழ்ந்து, பாராட்டிப் பலர் பேசுகிறார்கள். என்னைப் பொறுத்த வரை, தமிழ் நாட்டில் தொட்டில் குழந்தை திட்டத்திற்கு அவசியமே இல்லாமல் என்றைக்கு ஒரு நாள் வருகிறதோ, அது தான், தமிழ்நாட்டு வரலாற்றில் பொன்னாள் என்று நான் கருதுவேன்.

இந்த மாவட்டத்தில் இந்தப் பிரச்சினை இல்லை. ஆனால், தஞ்சையில் நின்று கொண்டு எந்தெந்த மாவட்டங்களில் அந்தப் பிரச்சினை இருக்கிறதோ, அந்த மக்களை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். நீங்கள் அனைவரும் ஆண் குழந்தை வேண்டும் என்று ஆசைப்படுகிறீர்களே, பெண் குழந்தை பிறந்தால் கொன்று விடுகிறீர்களே, கொல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்களே, உங்கள் ஆண் பிள்ளை வளர்ந்தால், அவனுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்று மட்டும் நீங்கள் ஆசைப் படுகிறீர்களே! பெண்களை எல்லாம் கொன்று விட்டால் உங்கள் ஆண் பிள்ளைகளுக்கு நீங்கள் எப்படி திருமணம் செய்வீர்கள் என்பதை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். ஆகவே, இந்தக் கேள்வியை நினைத்தாலே, எதிர்காலத்தில் தங்கள் ஆண் பிள்ளைக்கு திருமணம் செய்து வைக்க வேண்டுமே, என்ற ஆலோசனை வந்தாலே, யோசனை வந்தாலே, இந்தப் பெண் சிசுவதை என்பது நின்று விடும் என்று நம்புகிறேன். மீண்டும் ஒரு முறை, நான் இந்தக் கொடுமை நிகழும் மாவட்டங்களில் உள்ள மக்களை அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து உங்கள் பெண் குழந்தைகளைக் கொலை செய்ய வேண்டும், அழிக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். மீண்டும் கூறுகிறேன், தொட்டில் குழந்தைகள் திட்டம் இன்றைக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆனால், என்றைக்கு இந்தத் தொட்டில் குழந்தைத் திட்டம் தேவையே இல்லை என்று ஒரு சூழ்நிலை உருவாகிறதோ, அன்றைக்குத் தான் உண்மையிலேயே தமிழ்நாடு முன்னேறி உள்ளது என்று நாம் எடுத்துக் கொள்ள முடியும் என்பதை சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வேகமாகச்

சென்றடைய வேண்டும் என்பதில் எனக்கு மிகுந்த அக்கறையும், ஈடுபாடும் உண்டு. என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றுகின்ற வகையில் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள, 34,625 பயனாளிகளுக்கு 10 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை இந்த விழாவில் வழங்குவதில் நான் மிக்க மன நிறைவு அடைகின்றேன். மாவட்டத் தொழில் மையம், கூட்டுறவுத் துறை, ஊரக வளர்ச்சித் துறை, மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தாட்கோ நிறுவனம் ஆகிய அரசுத் துறைகளின் சார்பில், 7 கோடியே 62 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய தொழில் துவங்க கடன் உதவி; புதிய

கோடியே 37 இலட்சம் ரூபாய் மதிப்பில் இன்று வழங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

உழைப்புக்கு மரியாதை தருகின்ற மனப்பான்மை நம் நாட்டில் உருவாக்கப்பட வேண்டும். சோம்பல் என்பது வீட்டுக்கு மட்டும் அல்ல, நாட்டுக்கும் கேடு.

ஒரு மரத்தின் அடியில் ஓர் இளைஞன் காலை நீட்டி கைகளைப் பரப்பி, பகல் நேரத்திலே படுத்துக் கிடந்தான். அந்தப் பக்கம் வந்த ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, "தம்பி, இந்த வயதிலே உனக்கு இத்தனை சோம்பலா?




அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், தொழிற்சாலைகள் அமைக்கக் கடன் உதவி, மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குச் சுழல் நிதி, பொருளாதாரக் கடன் உதவி, தனி நபர் கடன் உதவி, முதலான பல்வேறு கடன் உதவிகளை இன்று நான் வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இதன் மூலம், 27,293 பயனாளிகள் பயன் அடைவார்கள் என்பதில் மன நிறைவு அடைகிறேன்.

வருவாய்த் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, பிற்பட்டோர் நலத் துறை, சமூக நலத் துறை, ஊனமுற்றோர் நலத் துறை, வேளாண்மைத் துறை ஆகிய அரசுத் துறைகள் மூலமாக 7,288 பயனாளிகளுக்கு, இலவச வீட்டுமனைப் பட்டா, நிலப்பட்டா, முதியோர் உதவித் தொகை, சலவைக் கருவிகள், இலவசத் தையல் இயந்திரங்கள் ஆகியவை வழங்கும் திட்டங்கள்; மற்றும் பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் முதலான பல்வேறு திட்டங்களின் கீழ் உதவி, வேளாண் இடு பொருட்கள் மற்றும் ஊனமுற்றோருக்கான உபகரணங்கள் ஆகிய நலத் திட்ட உதவிகளை, 2

உழைக்க வேண்டிய வயதல்லவா இது?" என்று கேட்டாராம்.

இளைஞன் கேட்டான் – "ஏன் உழைக்க வேண்டும்?"

'பணத்துக்காக!' – இது பெரியவரின் பதில்

'பணம் எதற்காக?' – இது இளைஞனின் கேள்வி.

"வீடு வாங்கலாம், கார் வாங்கலாம், திருமணம் செய்யலாம், குழந்தை குட்டிகளோடு மகிழ்ச்சியாய் இருக்கலாம்." – இது பெரியவர் பதில்.

'பிறகு....?' இது இளைஞனின் கேள்வி.

'குழந்தைகளைப் படிக்க வைக்கலாம், வேலை வாங்கித் தரலாம், நல்ல சம்பளம் வாங்கச் செய்யலாம்' இது பெரியவர் பதில்.

'அதற்கு பிறகு?' என்று இளைஞன் கேட்டான்.

'அவர்களுக்கு திருமணம் செய்து வைக்கலாம், பேரக் குழந்தைகளோடு மகிழ்ச்சியாக இருக்கலாம்' என்றார் பெரியவர்.

'அதற்கும் பிறகு ?' என்று இளைஞன் கேட்டான்.

'ஓய்வாக இருக்கலாம்; நிம்மதியாக காலை நீட்டித் தூங்கலாம்' என்று பெரியவர் சொன்னதும், உடனே அந்த இளைஞன், "அதைத் தாங்க இப்பவே செஞ்சுக்கிட்டு இருக்கேன்; போயிட்டு வாங்க!" என்றானாம்.

"எனக்கு நல்லா வேணும்; வாயை மூடிக் கொண்டு வழியைப் பார்த்துக் கொண்டு போயிருக்கலாம்" என்று வருத்தப்பட்டுக் கொண்டே போனாராம், அந்தப் பெரியவர்.

நம் நாட்டு மக்களுக்கு என்ன குறை ? அறிவில் குறையா ? இல்லை! ஆற்றலில் குறையா ? இல்லவே இல்லை!

அப்புறம் என்ன குறை ?

ஊக்கம் இல்லை என்பது குறை! உழைப்பு போதாது என்பது குறை!

வளர்கின்ற நாடுகளில் மட்டுமல்ல, வளர்ந்த நாடுகளிலும் மக்கள் கடுமையாக உழைக்கிறார்கள். உழைப்புக்கு மரியாதை கொடுக்கிறது அந்தச் சமுதாயம்!

அங்கே பணக்காரர்களும் கடுமையாக உழைக்கிறார்கள். தொழில் அதிபர்களும் நேரம் பார்க்காமல் உழைக்கிறார்கள்.

வளர்ந்த நாடுகளின் வெற்றிக்குக் காரணம் உழைப்பு தான் ! உழைப்பு என்னும் மரத்தின் வேர்கள், கசப்பாக இருக்கலாம்; ஆனால், அதன் கனிகள் இனிப்பானவை.

உழைப்பு மட்டுமே நம்மை உயர்த்தும். உங்கள் அன்புச் சகோதரியாகிய நான், நாள் ஒன்றுக்கு 20 மணி நேரம் உழைக்கிறேன் என்பது எத்தனை பேருக்குத் தெரியும் ?

இந்தியாவிலேயே முதன் மாநிலமாகத் தமிழகத்தை உருவாக்க வேண்டும்! அந்த இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் நாம் தொடர்ந்து வெற்றி பெற்று வருகிறோம் !

மாபெரும் வெற்றி என்பது, ஒரே நாளில் படைக்கிற அற்புதம் அல்ல ! அது, சிறு சிறு வெற்றிகளின் கூட்டுத் தொகை !

வெற்றி என்பது, ஒரே நாளில் அடைந்து, மறு நாளில் மறந்து போகிற இலக்கு அல்ல ! அது ஒரு தொடர் பயணம்!'

அந்தத் தொடர் பயணத்தில், எப்போதும் எனக்குத் துணை புரிகின்ற பெருமக்கள் நீங்கள்! நீங்கள் அளித்து வரும் உற்சாகம் தான் இத்தனைச் சாதனைகளை இந்த அரசு படைப்பதற்குக் காரணமாக இருக்கிறது. அதற்காக எனது மனமார்ந்த நன்றியை இந்த இனிய வேளையில் உங்கள் அனைவருக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதே ஒத்துழைப்பையும், நல்ஆதரவையும் உங்கள் அன்புச் சகோதரியாகிய எனக்குத் தொடர்ந்து நீங்கள் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும், எனது உழைப்பும், முயற்சியும் என்றைக்கும் தமிழக மக்களின் வாழ்வுக்கும், வளத்துக்காகவுமே என்பதை தஞ்சைத் தரணி மக்களாகிய உங்கள் மூலம், தமிழகம் முழுவதும் வாழ்கின்ற அனைத்து மக்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல்வேறு நலத் திட்ட உதவிகளை, இன்றைய தினம், நானே பயனாளிகள் அனைவருக்கும் என் கையாலேயே வழங்க வேண்டும் என்ற ஆசை இருந்தாலும், நேரம் குறைவாகவே இருப்பதால் இந்த மேடையில், 15 பேருக்கு மட்டும் இந்த உதவிகளை நான் வழங்க உள்ளேன். மற்ற பயனாளிகள் அனைவருக்கும், அமைச்சர் பெருமக்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், அரசின் உயர் அதிகாரிகளும், இங்கேயே இப்போதே உரிய உதவிகளை வழங்கிச் சிறப்பிப்பார்கள் என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பயனாளிகள் அனைவரும் இந்த உதவிகளை அடிப்படையாக வைத்து, தங்கள் தொழில்களை இன்னும் சிறப்போடு செய்து, வாழ்க்கையில் நலமும், வளமும் பெற்றிட வேண்டும் என்று அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நல்வாழ்த்துகளை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விழாவைச் சீரும் சிறப்பும் மிக்க நிகழ்ச்சியாக அமைத்திடப் பணியாற்றிய, தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கோசலராமன் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும், எனது மனமார்ந்த பாராட்டுகளை உரித்தாக்கிக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க !
புரட்சித் தலைவர் நாமம் வாழ்க!
என்று கூறி விடைபெறுகிறேன்.
நன்றி, வணக்கம்.

– 27.10.2003 அன்று தஞ்சாவூர் மாவட்டத்தில்
நடைபெற்ற அரசு விழாவில்
மாண்புமிகு தமிழக முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
ஆற்றிய உரை •

* * *

# படிக்கும் போதே பணம் ஈட்டுதல் என்னும் புதிய திட்டம்



**– மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள், 16.10.2003 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயிலுகின்ற பொருளாதார நிலையில் நலிவடைந்த மாணவ மாணவியர்கள் தங்களின் கல்வியைத் திறம்படத் தொடரும் வகையில், கல்வி பயிலும்போதே அவர்களுக்கு பகுதி நேரப் பணி வாய்ப்பு அளித்து ஊதியம் வழங்கும் "படிக்கும் போதே பணம் ஈட்டுதல்" (Earn while Learn) என்னும் புதிய திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகம் செயல்படுத்தும், இந்தத் திட்டத்தின் மூலம் சமூகப் பொருளாதாரத்தில் நலிவடைந்த நிலையில் உள்ள கல்வி ஆர்வமிக்க மாணவ மாணவியர்கள், தங்களது கல்வியை இடையிலேயே நிறுத்தி விடாமல் தொடர்ந்து கல்வி பயிலப் பொருளாதார வசதியைப் பெறும் வகையில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகள் வாயிலாக அவர்களுக்குப் பகுதி நேர வேலைவாய்ப்பு அளித்து அதற்குரிய ஊதியம் வழங்கப்படும்.

இத்திட்டத்தின்கீழ் பட்ட மேற்படிப்பு மற்றும் இளநிலை ஆராய்ச்சி மாணவர்கள் பல்கலைக் கழகத் துறைகளிலுள்ள ஆய்வகங்கள் மற்றும் பல்கலைக் கழக நூலகங்களில் பகுதி நேர உதவியாளர்களாக நியமிக்கப் படுவர். பி.எச்டி., ஆராய்ச்சியாளர்கள் பகுதி நேரப் பயிற்சி உதவியாளர்களாக நியமிக்கப்படுவார்கள். மாணவ – மாணவியர்களுக்கு பகுதி நேரப் பணியாக மாதத்தில் 25 முதல் 30 மணி நேரம் பணி வாய்ப்பளித்து, மாதந்தோறும் ஒவ்வொருவருக்கும் ரூ.600 முதல் ரூ.1000 வரை ஊதியமாக வழங்கப்படும்.

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு 2003 – ஆம் ஆண்டு முதல் 2008–ஆம் ஆண்டு முடிய ஐந்து ஆண்டுகளுக்கு ஐம்பது இலட்சம் ரூபாய் நிதியை உயர்திறன் சேர் பல்கலைக் கழகம் (University with Potential for Excellence) என்னும் தகுதிப்பாட்டுக்கான நிதியிலிருந்து வழங்கிட சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு, பல்கலைக்கழக நிதி நல்கைக் குழு (University Grants Commission) அனுமதி அளித்துள்ளது.

இந்த வகையில் இந்த ஆண்டு பகுதி நேரப் பணி வாய்ப்பைப் பெற்றிட சமூகப் பொருளாதார நிலையில் நலிவுற்ற 138 மாணவ மாணவியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுள் 10 மாணவ மாணவியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உரிய அனுமதி ஆணைகளை வழங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களிடமிருந்து, சென்னைப் பல்கலைக்கழகத்தின் பல்வேறு துறைகளில், பிஎச்.டி. கல்விப் பயிலும் மாணவ மாணவியர்கள் செல்வி பொன்னி பிருந்தா, செல்வி இ.ஜெயந்தி, செல்வி ஜெ.சித்ரா, செல்வி டிசென் சோடான், திரு கே.பழனி, திரு ஜி.எம். நாகேஷ், திரு.எம்.வையாபுரி ஆகியோர் பகுதி நேரப் பயிற்சி உதவியாளர் (Part Time Tutorial Assistant) பணிக்கும், எம்.எஸ்சி. இரண்டாம் ஆண்டு படித்து வரும் மாணவர் திரு. கே.பழனிவேல், மாணவி செல்வி. கே.கொளஞ்சியம்மாள் ஆகியோர் பகுதி நேர ஆய்வக உதவியாளர் (Part Time Laboratory Assistant ) பணிக்கும், எம்.ஃபில் படித்து வரும் செல்வி ரெபெக்காள் பகுதிநேரப் பயிற்சி உதவியாளர் பணிக்கும் உரிய அனுமதி ஆணைகளை நேரில் பெற்றுக் கொண்டு தங்களது நன்றியினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொண்டார்கள்.

அப்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் பகுதி நேர வேலைவாய்ப்புப் பெற்றுள்ள மாணவ மாணவியர்கள் அனைவரும் இவ்வுதவியைப் பயன்படுத்திக் கொண்டு தங்களது கல்வியில் தேர்ந்து விளங்க வேண்டும் என்று வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் திரு. எஸ்.செம்மலை, உயர்கல்வித் துறைச் செயலாளர் செல்வி லீனா நாயர், சென்னைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் எஸ்.பி.தியாகராஜன், பதிவாளர் (பொறுப்பு) டாக்டர் எஸ்.கருணாநிதி ஆகியோர் உடனிருந்தனர்.

★ ★ ★

# 2003-2004 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகள்



**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2003–2004ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன்.

> ***"வேளாண் குடும்பங்களின் வருமானம், வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைக் கருத்திற்கொண்டு, சிறு மற்றும் குறுநில உழவர்கள் கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெற்ற பயிர்க் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்வது தொடர்பாக, அரசு ரூ.20 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.3 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது."***

துணை மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவானதொரு அறிக்கை, இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.578.36 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில் ரூ.498.83 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சியத் தொகையான ரூ.79.53 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2003–ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் நாளன்று கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகள் சட்டப்பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணங்கள் பெற்று, ''புதுப்பணிகள்'' குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப்பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாராச் செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

வேளாண்மைச் சாகுபடியில் நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்காக, 2003–2004 ஆம் ஆண்டில், உழவர்களுக்கான சொட்டு நீர் மற்றும் தெளிப்பு நீர்ப் பாசன ஏற்பாட்டைச் செயல்படுத்தும் வகையில் அரசு, ரூ.25.10 கோடி அனுமதித்துள்ளது. ''மானியம் எண்.5 – வேளாண்மைத் துறை'' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில், ரூ.15 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

வேளாண் குடும்பங்களின் வருமானம், வறட்சியினால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதைக் கருத்திற்கொண்டு, சிறு மற்றும் குறுநில உழவர்கள் கூட்டுறவு வங்கிகளிலிருந்து பெற்ற பயிர்க் கடன்கள் மீதான வட்டியைத் தள்ளுபடி செய்வது தொடர்பாக, அரசு ரூ.20 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.3 கோடி முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், ''மானியக் கோரிக்கை எண். 12 – கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை'' என்பதன் கீழ் ரூ.20 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

பருவமழை தவறியதையடுத்து, புனல் மின்சக்தி உற்பத்தி குறைந்த காரணத்தால் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை மிகவும் மோசமாகப்

பாதிக்கப்பட்டுள்ளது. புனல் மின்சக்தி உற்பத்தி குறைந்த காரணத்தால் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஆதரவு அளிப்பது தொடர்பாக, இந்தத் துணை மதிப்பீடுகளில், ''மானியக் கோரிக்கை எண்.13 – எரிசக்தித் துறை'' என்பதன் கீழ் ரூ.200 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

2004ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மேலும் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடையும் வகையில் 81 இலட்சம் பாலியஸ்டர் பருத்திப் புடவைகளும், 74 இலட்சம் பாலியஸ்டர் பருத்தி வேட்டிகளும் இலவசமாக வழங்குவதற்காக அரசு ரூ.120 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.20 கோடி முன்பணமாக வழங்கப் பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகளில், ''மானியக் கோரிக்கை எண்.16 – கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை – கைத்தறி மற்றும் துணிநூல்'' என்பதன் கீழ் ரூ.120 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

**"**

**2004ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் மேலும் நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் மக்கள் பயனடையும் வகையில் 81 இலட்சம் பாலியஸ்டர் பருத்திப் புடவைகளும், 74 இலட்சம் பாலியஸ்டர் பருத்தி வேட்டிகளும் இலவசமாக வழங்குவதற்காக அரசு ரூ.120 கோடி அனுமதித்துள்ளது.**

**"**

கும்பகோணம் புறவழிச்சாலை அமைப்பதற்காக அரசு ரூ.24.09 கோடி அனுமதித்துள்ளது. வரவிருக்கும் மகாமகம் திருவிழாவையொட்டி கும்பகோணம் நகர மற்றும் நகரைச் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்துவதற்காக அரசு ரூ.1.50 கோடி அனுமதித்துள்ளது. துணை மதிப்பீடுகளில் ''மானியக் கோரிக்கை எண்.20 – நெடுஞ்சாலைகள் துறை'' என்பதன் கீழ் ரூ.25.59 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

''தேசிய சமச்சீர் வளர்ச்சித் திட்டத்தை (Rashtriya Sam Vikas Yojana) நிறைவேற்றுவதற்காக திருவண்ணாமலை மாவட்டத்திற்கு அரசு மொத்தம் ரூ.15 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.3 கோடி வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் ''மானியக் கோரிக்கை எண்.35 – திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை'' என்பதன் கீழ் ரூ.7.50 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

காவிரி கழிமுகப் பகுதி மாவட்டங்களில் காவிரி நதியின் குறுக்கேயும், கால்வாய்களிலும் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளவும், மதகுகளை மாற்றவும் மற்றும் பழுது பார்ப்பதற்காகவும் அரசு ரூ.34 கோடி அனுமதித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ.5 கோடி வழங்கப்பட்டுள்ளது. துணை மதிப்பீடுகளில் ''மானியக் கோரிக்கை எண். 38 – பொதுப்பணித்துறை'' என்பதன் கீழ் ரூ.34 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வறட்சியின் காரணமாக சிறு/குறு நில உழவர்கள் மற்றும் வேளாண் தொழிலாளர்களில் தகுதியுடைய குடும்பங்களுக்கு மாதமொன்றுக்கு இலவசமாக 30 கிலோ கிராம் அரிசி வழங்கும் திட்டத்தை அறிவித்திருந்தார்கள். உணவுப் பாதுகாப்பு அளிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்பட்ட செலவுத் தொகைகளைக் கொடுத்து தீர்ப்பதற்காக துணை மதிப்பீடுகளில் ''மானியம் எண்.49 – இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு'' என்பதன் கீழ் ரூ.75 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003–2004 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம்மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

– மாண்புமிகு நிதி அமைச்சர்
திரு. சி. பொன்னையன் அவர்கள், 2003 – 2004 ஆம்
ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை,
சட்டமன்றப் பேரவை முன்வைத்து,
2003–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள்
3–ஆம் நாளன்று ஆற்றிய உரை.

* * *

# சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் தமிழகம்

மாண்புமிகு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்




**சு**ற்றுலா வளர்ச்சிக்கான சர்வதேச அமைப்பின் 64ஆவது "ஸ்கால்'' சர்வதேச மாநாட்டைத் தொடங்கி வைத்து இந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்த மாநாட்டில் பெருந்திரளாகக் கலந்து கொண்டுள்ள பிரதிநிதிகளை நானும், ஒட்டு மொத்த தமிழ்நாடு மற்றும் சென்னை மாநகர மக்கள் ஆகியோரும் மனமுவந்து வரவேற்கிறோம். ஏனெனில், இந்த ஸ்கால் மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருக்கும் பிரதிநிதிகள் உலகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்திருக்கிறீர்கள்.

தமிழகத்தின் இனிமையான வரலாற்றுப் பக்கங்களில் இம்மாநாடு நடைபெறுவது ஒரு சாதனை வரலாறாகும். இந்த மாநாட்டின் மூலம் தமிழ்நாட்டில் புதைந்து கிடக்கின்ற அரிய பொக்கிஷங்களை உலகத்திற்கு எடுத்துக்காட்டுவதற்கு உதவுகின்றது. மேலும் இம்மாநாட்டின் மூலம் சர்வதேச சுற்றுலா வரைபடத்தில் தமிழகம் குறிப்பாக சென்னை இடம்பெறுகிறது.

சுற்றுலாத் துறையில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள பல்வேறு சுற்றுலாத் தலங்களை பார்க்கும்போது அவற்றிற்கு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் அங்கு ஸ்கால் அமைப்பின் ஆண்டு மாநாடுகள் நடைபெற்றிருப்பதும் ஒரு முக்கிய காரணமாக இருப்பது தெரிய வருகிறது.

இது கடந்த 63 ஆண்டு காலமாக ஸ்கால் மாநாடுகள் நடைபெற்ற இடங்களில் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்ததிலிருந்து தெரிகிறது. அந்த வரிசையில் தமிழ்நாட்டிற்கும் இனி வரும் காலங்களில் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவதற்கு இம்மாநாடு உதவி புரியும் என்று நான் நம்புகிறேன்.

ஸ்கால் என்னும் வார்த்தை ஒரு சொற்றொடரில் உள்ள சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது. அதாவது ஸ்காண்டிநேவியன் மொழியில் நல்ல ஆரோக்கியம், அன்பு, நட்பு, நீண்ட கால வாழ்க்கை மற்றும் மகிழ்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் சொற்களின் முதல் எழுத்துக்களைக் கொண்டு அமைந்துள்ளது. இது மிகவும் அழகான ஒரு தத்துவத்தை உண்மையிலேயே உணர்த்துகிறது. இது நாட்டின் அனைத்து பகுதியினருக்கும், அனைத்துச் சூழ்நிலைக்கும் பொருத்தமானதாக அமைகிறது.

ஸ்கால் அமைப்பின் சர்வதேச மாநாட்டை நடத்துவதற்கு தமிழ்நாட்டையும் சென்னையையும் நீங்கள் தேர்வு செய்ய உரிமை எடுத்துக்கொண்டது உண்மையிலேயே சரியான ஒரு முக்கிய முடிவாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற ஒரு முதுமொழி தமிழகத்தின் சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூற்றில் கூறப்பட்டுள்ளது. அதாவது ஒவ்வொரு நாடும் என்னுடைய நாடு; ஒவ்வொரு மனிதனும் என்னுடைய உறவினர் என்பதாகும்.

அதன் அடிப்படையில், இந்தப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ள நாங்கள் இம்மாநாட்டில் இன்று கலந்து

கொள்வதற்காக 38 நாடுகளிலிருந்து வந்துள்ள ஸ்கால் அமைப்பின் பிரதிநிதிகள் அனைவரையும் வரவேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம் என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். எங்கள் முன்னால் இம்மாநாடு ஒரு குட்டி உலகமே இருப்பது போன்ற ஓர் உணர்வை ஏற்படுத்துகிறது.

உலகத்திலேயே மிகவும் தொன்மையான பாரம்பரியத்தை தாயகமாகக் கொண்டுள்ள நாடு இந்தியாவாகும். உலக சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் தன்மை கொண்ட, பல்வேறு எண்ணிக்கையில் அடங்காத, நம்ப முடியாத அளவிற்கு சுற்றுலாத் தலங்கள் அணிவகுத்துக் காணப்படும் பெருமை கொண்டது. நீண்டு, பரந்து விரிந்த இந்த நாட்டில் உண்மையிலேயே பல்வேறு கலை மற்றும் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியங்கள் நிரம்பி திகைப்புறச் செய்யும் அளவிற்கு பல்வேறு வரலாற்றுச் சிறப்புமிக்க பண்டைய பழக்க வழக்கங்களையும், நாகரிகங்களையும், கலைகளையும் தன்னகத்தே இன்றளவும் இயல்பான நிலையில் கொண்டுள்ளது.

செல்வங்களைப் பெற்றுள்ளன. சில மாநிலங்கள் பள்ளத்தாக்குகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. வேறு சில மாநிலங்கள், பாரம்பரிய வரலாற்றுச் சிறப்புமிக்க நினைவகங்களையும், சுவடுகளையும் மற்றும் பல தலங்களையும் பெற்றுள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் மட்டும்தான் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் அனைத்து அம்சங்களும் ஒரே இடத்தில், காணப்படுகிறது என்பதை நான் மிகுந்த மகிழ்ச்சியுடனும், மிகுந்த மன உறுதியுடனும் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

சுற்றுலாப் பயணிகள் எந்தெந்த விஷயங்களை ஆர்வமுடன் விரும்பிப் பார்ப்பார்கள் என்று பார்க்கும்போது பழங்கால கலை மற்றும் சிற்பக்கலை, இந்திய கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ளுதல், கோவில்கள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்ப்பது ஆகியவை ஆகும். இவற்றைப் பார்க்கும்போதெல்லாம், ஒவ்வொரு கற்களில் இருந்தும் கவிதைகளை உணர முடியும். காலங்களுக்கு அப்பாற்பட்டு பக்தியை உணர முடியும்.




தமிழ்நாடு இந்த அளவிற்கு அழகாகவும், முதன்மையாகவும் சுற்றுலாப் பயணிகள் விரும்பும் இடமாகவும் இருப்பதற்கு முக்கியக் காரணம் இயற்கையின் பங்களிப்பு அதிக அளவில் இருப்பதுதான். இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மாநிலமும் அதற்கென்று தனித்தன்மையுடன் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இயற்கை வளங்களைப் பெற்றுள்ளது. சில மாநிலங்கள், குளிர்ப் பிரதேசங்களை உள்ளடக்கிய எழிலான மலைப் பிரதேசங்களைக் கொண்டுள்ளன.

சில மாநிலங்கள், சுற்றுலாப் பயணிகளால் மிகவும் நேசிக்கப்படும் அளவிலான இயற்கை வனச்

மேலும் கறுப்பு மான், காட்டெருமை, யானை ஆகியவற்றை காடுகளில் பார்க்கச் செல்லும்போதும், மலைப் பிரதேசங்களில் உள்ள பள்ளதாக்குகளையும் அழகான மலைமுகடுகளையும் பார்க்கும்போதும், அங்குள்ள இல்லங்களில் தங்கி இருக்கும்போதும், எழில்மிகு கடற்கரைகளில் உலாவும்போதும், சூரியக் குளியல் எடுக்கும்போதும் தமிழ்நாடு மட்டும்தான் இவை அனைத்தையும் ஒரே இடத்தில் தரும் சுற்றுலாத் தலமாகும் என்பதை உணர முடியும்.

தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாவுக்கான இயற்கை வளங்களை மற்றும் அதனுடைய சிறப்புகளை மட்டும்




சொல்லிக் கொண்டே போவதைவிட அதற்கென்று தனித்தன்மையான குணாதிசயம் ஒன்று உள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இந்தத் தன்மை தமிழகத்திற்கு மட்டுமே உரித்தானதாகும். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை தமிழர்கள் மனமுவந்து குடும்ப ரீதியான அளவில் அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளைச் செய்யும் பண்பைக் கொண்டவர்கள்.

சமஸ்கிருதத்தில் ''அதிதி தேவோ பவ'' என்று சொல்வார்கள். இது விருந்தோம்பல் பற்றியது. விருந்தினரைக் கடவுள் போன்று பாவித்து உபசரிக்க வேண்டும் என்பதுதான் அது. நாங்கள் உங்களை கடவுள்போல் பாவிப்போம்.

தமிழ்நாடு விடுமுறைச் சுற்றுலாத் திட்டங்களுக்கு அழைப்பு விடுக்கின்றது. இங்கு குறிப்பிட்ட சில பருவநிலைகளில் மட்டும் சுற்றுலாப் பயணிகளை ஒரு சில தலங்களில் வரவேற்பது கிடையாது. மாறாக, அனைத்துப் பருவ சூழ்நிலைகளுக்கும் ஏற்ற பல்வேறு வகையான எண்ணிக்கையில் அடங்காத சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இடங்கள் உள்ளன. பரந்து விரிந்த இந்தியாவில் உண்மையிலேயே அமைதியும், சமூக நல்லிணக்கமும் தெளிவான சூழ்நிலையும் தமிழகத்தில் உள்ளது.

சர்வதேச நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் உண்மையிலேயே தங்கள் பயணத்தை அமைதியான முறையில் அனுபவிக்க ஏற்ற சூழ்நிலை தமிழகத்தில் நிலவி வருகிறது. இதுதான் ஆண்டுதோறும் இந்தியாவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 30 சதவீதத்தினரை ஈர்ப்பதற்கான முக்கியக் காரணம் என்பதில் ஆச்சரியப்படுவதற்கு ஏதுமில்லை.

வரலாற்றுப் புகழ்மிக்க பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ள அதே நேரத்தில் நாங்கள் எங்கள் பாரம்பரிய மதிப்பீடுகள் மற்றும் ஒழுக்கங்களை இன்றைய காலக்கட்டத்திற்கு ஏற்ப தொடர்ந்து கடைப்பிடித்து வருகிறோம் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே வேளையில் இங்கு அடிப்படை மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஆசியாவிலேயே சிறந்ததும் மற்றும் உலகத்தின் ஏனைய பகுதிகளில் உள்ளவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மிகச் சிறந்ததாகவே இருக்கும் அளவுக்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு செயல்படுத்தி உள்ளோம்.

தமிழகத்தைப் பொறுத்தவரை இந்தியாவின் பிற மாநிலங்கள் மற்றும் சர்வதேச நாடுகளின் சுற்றுலா மற்றும் தலைநகரங்களுடன் இணைக்கும் அளவிற்கு வான்வெளிச் சேவை உள்ளது. மேலும், விரிவான இரயில் போக்குவரத்து, அதிநவீன மேம்படுத்தப்பட்ட நெடுஞ்சாலைகள், அனைத்து நவீன வசதிகள் கொண்ட உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகள், வாகனப் போக்குவரத்து வசதிகள் முறைப்படுத்தப்பட்ட மற்றும் நல்ல தரமான வணிக வளாகங்கள் ஆகியவை உள்ளன.

தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான அனைத்து உயர்ந்தபட்ச தரமான வசதிகளை செய்து தருவது எங்களுடைய முக்கியமான குறிக்கோளாகும்.

சர்வதேச தரத்தினாலான விடுமுறை அனுபவத்தை தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகள் அனுபவிக்கும் வகையில் என்னுடைய தலைமையிலான அரசு மாநிலத்தின் அடிப்படைக் கட்டுமானத்தை தரம் உயர்த்தி, மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது.

மேலும், விரைவான பொருளாதார வளர்ச்சி, வேலைவாய்ப்பை உருவாக்குதல் மற்றும் சேவைகள் துறையை மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக சுற்றுலாத்துறையில் உள்ள அனைத்து வாய்ப்புகளையும் முழுமையான அளவில் பயன்படுத்த வேண்டும் என்ற முனைப்புடன் தீவிரமாக திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தி வருகின்றோம். இந்தியாவிலேயே தொழில் வளர்ச்சியில் தற்போது தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

வலுவான வேளாண் சார்ந்த அடிப்படைத் தொழில்கள், போதுமான அளவு மின் உற்பத்தி நிலை, மேம்படுத்தப்பட்ட நல்ல நிலையில் உள்ள அடிப்படை உள்கட்டமைப்பு, அதிகபட்ச கல்வியறிவு, அளவிடற்கரிய மனிதவளம் சர்வதேச தரத்தினாலான சுகாதார வசதிகள் மற்றும் தொழில் சார்ந்த நிலையான ஆதரவு தரும் அரசு தமிழ்நாட்டில் இருப்பதால் தொழில் துவங்க வருபவர்களின் விருப்பமான இடமாக தமிழ்நாடு விளங்குகின்றது.

சமீபகாலமாக மாநிலம் அறிவுச்சார்ந்த தொழில் துறைகளான உயிரி தொழில்நுட்பவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறையில் சர்வதேச அளவில் இத்துறைகளில் உள்ள எங்கள் தொழில்நுட்ப வல்லுநர்கள் மிகப்பெரிய அளவில் மதிக்கப்படுகின்றனர். இதன் அடிப்படையில் தமிழ்நாடு மிகப் பலம் வாய்ந்த ஒரு மாநிலமாக விளங்குவதோடு, மற்றவர்களாலும் மதிக்கப்படுகின்றது.

ஆகவே, இத்துறைகளில் உள்ள வல்லுநர்களையும், இத்துறையையும் வலுப்படுத்தவும், அவர்களுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து கொடுக்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம். இந்த நடவடிக்கைகளால் இம்மாநிலம் இன்று மிகப்பெரிய தொழில் நிறுவனங்களைப் பெற்று வலுவான பொருளாதாரத்தை நோக்கி முன்னேறி வருகின்றது.

இந்தியாவின் பன்னாட்டு நிறுவனங்களை தொடங்க விரும்புகிறவர்களின் விருப்பத்திற்குரிய இடமாக குறிப்பாக சென்னை விளங்கி வருகிறது. கணக்கிட முடியாத திறமை வாய்ந்த மனித வளம், தொழிற்சாலைகளுக்குத் தேவையான சர்வதேசத் தரத்தினாலான வீடுகள், பள்ளிகள், கல்வி நிறுவனங்கள், நவீன மருத்துவமனைகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகள் இருப்பதால் பல்வேறு சர்வதேச நிறுவனங்கள் எங்கள் பிரகாசமான தலைநகரை விரும்புவதற்குக் காரணமாக அமைந்துள்ளது.

**"தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாவுக்கான இயற்கை வளங்களை மற்றும் அதனுடைய சிறப்புகளை மட்டும் சொல்லிக் கொண்டே போவதைவிட அதற்கென்று தனித்தன்மையான குணாதிசயம் ஒன்று உள்ளது என்பதையும் இங்கு தெரிவித்துக் கொள்ள விழைகிறேன். இந்தத் தன்மை தமிழகத்திற்கு மட்டுமே உரித்தானதாகும். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகளை தமிழர்கள் மனமுவந்து குடும்ப ரீதியான அளவில் அவர்களுக்குத் தேவையான பணிவிடைகளை செய்யும் பண்பைக் கொண்டவர்கள்."**

இந்தப் பின்னணியில் திட்ட முதலீடு மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய சுற்றுலாக் கொள்கையை வகுத்து, தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலா வாய்ப்புகளை முழு அளவில் உணர்ந்து கொண்டு பயன்பெறுவதற்கும், அதன்மூலம் ஆசிய பசிபிக் மண்டலத்தில் சர்வதேச சுற்றுலாப் பயணிகள் விரும்பும் முக்கிய சுற்றுலா மையமாக தமிழ்நாட்டை மாற்றுவதற்கு ஏற்றவகையில் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறோம். தமிழ்நாட்டை தென்னிந்தியாவின் நுழைவுவாயிலாக சர்வதேச சுற்றுலாப் பயணிகளுக்கு அறிமுகப்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

எங்களுடைய சுற்றுலாக் கொள்கை 7 செயல் திட்டங்களை உள்ளடக்கியது. தமிழ்நாட்டில் புதைந்து கிடக்கும் சுற்றுலா வளங்களை இனம் கண்டறிவது, சென்னை மற்றும் கோவை ஆகிய நகரங்களை சர்வதேச கூட்டங்கள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதற்கு ஏற்ற வகையில் அமைப்பது, சர்வதேச சுற்றுலாப் பயணிகள் எளிதில் வந்துசெல்லும் வகையில் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது, உள்கட்டமைப்பு வசதிகளில் உள்ள குறைபாடுகளை அகற்றி சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் இடங்களாக மாற்றுவது, சுற்றுலா குறித்த தீவிரமான வர்த்தக முறைகளை அறிமுகப்படுத்துவது, மேலும் தரமான விமானச் சேவைகளை விரிவுபடுத்துவது ஆகியவை அத்திட்டங்களாகும். இது குறித்து ஒரு சில கருத்துகளை தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

மாநிலத்தின் சுற்றுலாவைப் பொறுத்தமட்டில் மிகவும் பலம் வாய்ந்ததாக அமைந்துள்ளது கோவில்கள் மற்றும்




பாரம்பரிய நினைவுச் சின்னங்கள் ஆகும். இவற்றோடு இதனையொத்த பல்வேறு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் அம்சங்களுக்கும் இணையான முக்கியத்துவம் அளித்து அவற்றையும் சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க ஏற்பாடு செய்து வருகிறோம். இவற்றில் ஒரு சிலவற்றை இங்கு குறிப்பிட விழைகின்றேன்.

மிக உயர்ந்த கட்டடப் பாரம்பரியத்தை தன்னகத்தே கொண்ட செட்டிநாடு இல்லங்கள், நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்ட வீட்டு உபயோகப் பொருட்கள், தரமான உணவு வகைகள், மிகவும் அழகாகவும், நேர்த்தியாகவும் பார்ப்பவர்கள் மனங்களை கொள்ளை கொள்ளும் பிச்சாவரம் காடுகள், தஞ்சாவூர் மாவட்டத்தில் அமைந்துள்ள 9 கோள்களுக்கான தனித்தன்மை வாய்ந்த பக்தியைத் தூண்டும் கோவில்கள் மற்றும் கன்னியாகுமரியில் முக்கடல் சந்திக்கும் இடம், நீண்ட அழகான கடற்கரைகள் ஆகியவற்றையும் சுற்றுலாத் தலங்களை இணைத்து மேம்படுத்தி சுற்றுலாப் பயணிகளுக்கு இதுகுறித்து விரிவாக எடுத்துச் சொல்ல புதிய திட்டம் வகுத்துள்ளோம். இவற்றையெல்லாம் சுற்றுலாப் பயணிகள் பார்த்து மகிழும் வகையில் விரைவில் சுற்றுலாத் திட்டங்களில் இணைக்க உள்ளோம்.

தென்னிந்தியாவில் ஒரு காலத்தில் எங்கள் தலைநகருக்கு இருந்த அந்தஸ்தை மீண்டும் கொண்டு வரவும் உலகத்திற்கு இந்தியாவின் கிழக்கு நுழைவு வாயிலாகக் கொண்டுவருவதுடன், இணைப்பு மைய கலாச்சாரம், பாரம்பரிய நவீன முதலீடு செய்பவர்கள் இயற்கையாக விரும்பும் இடமாகவும் மற்றும் சுற்றுலாப் பயணிகளுக்கு ஏற்ற இடமாகவும் மாற்றுவதற்குத் தேவையான அனைத்து வளர்ச்சித் திட்டங்களையும் முனைப்புடன் செயல்படுத்துவதற்கு நான் திட்டமிட்டுள்ளேன்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு உட்பட்ட பகுதிகளில் சுமார் 4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஒருங்கிணைந்த அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான விரிவான திட்டம் இறுதி செய்யப்பட்டுள்ளது. இடைக்கால உள்கட்டமைப்பு வளர்ச்சித் திட்டத்தில் செலவுத் தொகை 2 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இந்த முதலீட்டில் மின்சார பகிர்மானத்தை முறைப்படுத்துதல், போக்குவரத்து மற்றும் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது, குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றல், திடக்கழிவு மேலாண்மை மற்றும் வீட்டு வசதி ஆகியவை இதில் அடங்கும்.

சென்னை மாநகரம் கண்காட்சிகள் மற்றும் மாநாடுகள் நடத்துவதற்குத் தேவையான தலைசிறந்த அனைத்து வசதிகளையும் தன்னகத்தே உள்ளடக்கியதாகும். ஒரு புதிய மாநாட்டு அரங்கம் இந்த வர்த்தக மையத்தில் வரும் 2004க்கு முன்னதாகவே தயாராகிவிடும். சென்னையைப் பார்க்க வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள சிறப்புமிக்க கோவில்கள், உலகப் புகழ்பெற்ற கடற்கரை கோவில், மாமல்லபுரத்தில் அமைந்துள்ள கலை மற்றும் சிற்பக்கலை சின்னங்கள், சென்னை மாநகரின் கிழக்கு கடற்கரையோரம் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க தேவாலயங்கள் ஆகியவையும் பார்க்க வசதி செய்து தரப்படும்.

சென்னை நகரின் பிரதான பகுதியில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகம், அதனுடைய வரலாற்றுப் புகழ்மிக்க கட்டடக் கலைச் சிறப்புகளால் அமைந்துள்ள கட்டுமானங்களாக மேலும் அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற 80,000 கலைப் பொருட்கள் ஆகியவை சென்னைக்கு வரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். சென்னை அருங்காட்சியகம் தற்போதுதான் புதுப்பிக்கப்பட்டு நவீன விளக்குகளால் ஒளியூட்டப்பட்டு முப்பரிமாண அமைப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளது. கண்ணாடி இழை, அதிக சக்தி வாய்ந்த ஒளிவிளக்குகள் எடுக்கப்பட்டு வருகிறது. சர்வதேச அளவில் உள்ள நாடுகளில் சுற்றுலாத் துறையினருடன் இணைந்து பணியாற்ற உள்ளோம். மேற்கு மற்றும் தூரக் கிழக்கு நாடுகளில் உள்ள சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தமிழ்நாட்டில் இருந்து ஏற்கெனவே பல்வேறு நாடுகளுக்கு சர்வதேச விமானப் போக்குவரத்து சேவை நடைமுறையில் உள்ள நிலையிலும் மேலும் பல்வேறு வழித்தடங்களில் சர்வதேச



ஆகியவற்றைப் பயன்படுத்தி வெண்கல கண்காட்சி மையத்தை சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்கேற்ற இடமாக மாற்றி உள்ளோம். நீங்கள் இந்த அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிடாமல் சென்னையை விட்டுச் செல்ல இயலாது.

இதேபோன்று சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு ஏற்ற மற்றொரு மிகப்பெரிய தொழில் மையமான கோவை மாவட்டம் விமானம், ரயில் மற்றும் அனைத்து அடிப்படை வசதிகளையும் கொண்டுள்ளது. கோவை சுற்றுலா வளர்ச்சிக்கு வன உயிரின பாதுகாப்பு மற்றும் காடுகளில் சுற்றுலா சவாரி மேற்கொள்வதற்கும், அடர்ந்த காட்டுப் பகுதிகளில் அமைந்துள்ள சுற்றுலாத் தலங்களான உதகமண்டலம், குன்னூர் ஆகியவற்றின் நுழைவு வாயிலாகவும் மாற்றி அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் சுற்றுலாத் தொழிலை மிகவும் கவனத்துடன் விரிவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகளும் விமான சேவை இணைப்பை குறிப்பாக ஐரோப்பா மற்றும் அமெரிக்காவிலிருந்து இயக்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மாநிலத்தில் உள்ள சாலை வசதிகளை மேம்படுத்தும் வகையில் மாநில அரசு 458 மில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு முதலீடு செய்து மிக விரிவான அளவில் சாலை வசதிகளை மேம்படுத்தி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளுக்கு வசதிகளை உருவாக்கித் தரும் வகையில் எங்களது சுற்றுலாத் தலங்களில் உள்ள ஒரு சில குறைபாடுகளைக் களைவதற்கு மிகச் சிறிய அளவில் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த முதலீடு செய்ய வேண்டியுள்ளது. மாமல்லபுரம், காஞ்சிபுரம், நவக்கிரகங்கள் அமைந்துள்ள தஞ்சாவூர் மாவட்ட வட்டப் பாதை, கன்னியாகுமரி ஆகிய இடங்களுக்கு இந்த வசதிகள் தேவைப்படுகிறது. மாமல்லபுரத்திற்குச் செல்லும்போது இந்த வகையான பணிகள் நடைபெற்று வருவதை நீங்கள் காணமுடியும். மேலும் சுற்றுலா ஒரு வர்த்தகமாகும். ஆகவே, இதில்

"சென்னை நகரின் பிரதான பகுதியில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகம், அதனுடைய வரலாற்றுப் புகழ்மிக்க கட்டடக் கலைச் சிறப்புகளால் அமைந்துள்ள கட்டுமானங்களாக மேலும் அங்கு பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள விலைமதிப்பற்ற 80,000 கலைப் பொருட்கள் ஆகியவை சென்னைக்கு வரும் ஒவ்வொரு சுற்றுலாப் பயணியும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். சென்னை அருங்காட்சியகம் தற்போதுதான் புதுப்பிக்கப்பட்டு நவீன விளக்குகளால் ஒளியூட்டப்பட்டு முப்பரிமாண அமைப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளது. கண்ணாடி இழை, அதிக சக்தி வாய்ந்த ஒளிவிளக்குகள் ஆகியவற்றைப் பயன்படுத்தி வேண்கல கண்காட்சி மையத்தை சுற்றுலாப் பயணிகளின் விருப்பத்திற்கேற்ற இடமாக மாற்றி உள்ளோம். நீங்கள் இந்த அரசு அருங்காட்சியகத்தைப் பார்வையிடாமல் சென்னையை விட்டுச் செல்ல இயலாது."

உங்களுடைய வசதிகள்தான் எங்களுடைய வர்த்தகத்திற்கு முக்கியமான அடிப்படையாகும்,

மேலும் சுற்றுலாத் துறையில் உள்கட்டமைப்பு வசதிகள் சிறிய அளவில் மேம்படுத்தப்பட உள்ள மதுரை திருமலை நாயக்கர் மகாலில் ஒலி – ஒளி அமைப்பு, தொடர்ச்சியான வளர்ச்சித் திட்டங்களான சாலை மேம்பாடு, சுற்றுலாத் தலங்களில் தேவைப்படும் கூடுதல் வசதிகள் ஆகியவையும் அடங்கும். இப்பணிகளை நிறைவேற்றுவதற்காக இந்த நிதியாண்டில் 90 மில்லியன் ரூபாய் அளவிற்கு என்னுடைய தலைமையிலான அரசு நிதி ஒதுக்கி உள்ளது.

இதோடு பக்தி சுற்றுலா, சுற்றுப்புறச் சூழல் சுற்றுலா, துணிகரச் சுற்றுலா ஆகியவற்றை உள்ளடக்கிய வட்டச் சுற்றுலா ஆகியவற்றை இணைப்பது குறித்தும் திட்டமிட்டுள்ளோம்.

சுற்றுலாப் பயணிகள் தூத்துக்குடி மற்றும் சென்னையில் கடற்பயணம் மேற்கொள்ள மாநிலத்தில் உள்ள துறைமுகப் பொறுப்புக் கழக அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து வருகிறோம். மேலும் மாநிலத்தில் உள்ள சுற்றுலாத் தலங்களை இணைக்கும் வகையில் மாநிலத்திற்குள்ளேயே விமானச் சேவை வழங்குவதற்கும் ஆலோசனை நடத்தி வருகிறோம்.

சுற்றுலாத் துறையில் உள்ள வாய்ப்புகளை முழுவதுமாகப் பயன்படுத்தும் வகையில் வர்த்தகத் திட்டம் ஒன்றை உருவாக்கி முழு அளவில் முனைப்புடன் செயல்படுத்தி வருகிறோம். சுற்றுலா குறித்த தகவல்களை நாளிதழ்கள், வார, மாத, பருவ இதழ்கள், போக்குவரத்து தகவல்களை உள்ளடக்கிய புத்தகங்கள், தொலைக்காட்சி ஆகியவற்றின் மூலம் விளம்பரப்படுத்தி வருகிறோம். இதன் மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்ப்பதற்கு இலக்கு நிர்ணயித்துள்ளோம்.

சுற்றுலாத் துறையின் வளர்ச்சியின் அடிப்படையில் மாநில சுற்றுலாத்துறை தகவல் பரிமாற்ற இணைய தளத்தை உருவாக்கியுள்ளது. மேலும், சுற்றுலாத்துறை குறித்த தகவல்கள் அடங்கிய குறுந்தகடுகள் மற்றும் விளக்கக் குறிப்பேடுகள் ஆகியவற்றின் மூலமும் சுற்றுலாப் பயணிகளுக்கு தமிழகத்தில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை அறிமுகப்படுத்தி வருகிறோம். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் அழைத்துச் செல்லப்படும் சுற்றுலாப் பகுதிகள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்தியா முழுவதிலும் உள்ள 20 தமிழ்நாடு சுற்றுலா அலுவலகங்கள் மற்றும் 21 தமிழ்நாடு சுற்றுலா தகவல் மையங்கள் ஆகியவை சுற்றுலாப் பயணிகளிடையே மிகவும் பிரபலமான ஒன்றாகும்.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மத்தியில் பெருத்த வரவேற்பைப் பெற்றுள்ள மாமல்லபுரம் நடன விழா இந்த ஆண்டு மிகப் பெரிய அளவில் கொண்டாடத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் சுற்றுலா தொடர்பான தகவல்களை எழுதுவதற்காக பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் இத்துறையில் முக்கிய பணியாற்றும் ஊழியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு சுற்றுலாத் தலங்கள் குறித்த தகவல்களை கட்டுரைகளாக எழுதி பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி மற்றும் தனியார் நிறுவனங்கள், மற்ற நாடுகளில் உள்ள சுற்றுலா நிறுவனங்கள் மற்றும் தொடர் சுற்றுலாக்களை இயக்குவோருடன் இணைந்து பணியாற்றும்.

தமிழ்நாடு சுற்றுலா மூலம் "ஸ்கால்'' அமைப்பில் உள்ள பிரதிநிதிகள் தங்களிடையே நீண்டகால வர்த்தக




உறவுகளை உருவாக்கிக் கொள்வதற்கும் இந்த மாநாடு உதவும் என்று நான் உறுதியாக கூறிக்கொள்ள விழைகிறேன். நாம் எல்லோரும் இணைந்து ஒரு குறிப்பிட்ட அளவிலான முதலீட்டில் சுற்றுலாத் திட்டங்களை வரையறுக்க வேண்டும். இந்தத் திட்டங்களெல்லாம் ஏற்கெனவே பயன்பெறத் தொடங்கி விட்டன.

ஆண்டுக்கு 25 மில்லியன் என்ற அளவில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும், சர்வதேச சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை ஆண்டுக்கு ஒரு மில்லியன் என்ற அளவிலும் உள்ளது. எதிர்வரும் காலங்களில் உங்களின் ஒத்துழைப்புடன் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம். சுற்றுலாப் பயணிகளை அதிகரிப்பது மட்டுமல்லாது, அவர்கள் நீண்ட நாட்கள் தமிழ்நாட்டில் தங்கி முழுமையாக சுற்றுலா அனுபவங்களைப் பெற வேண்டும் என்பதுதான் நோக்கமாகும். இந்த இலக்கை எட்டுவதற்கு உங்களுடைய மேலான ஒத்துழைப்பும், ஸ்கால் அமைப்பின் உதவியும் முழு அளவில் எங்களுக்குக் கிடைக்கும் என்பதில் எனக்கு எள்ளளவும் சந்தேகமில்லை.

ஒருமுறை தமிழக மக்களின் மனமுவந்த வரவேற்பையும் மாநிலத்தின் அழகான இயற்கை எழில் கொஞ்சும் சுற்றுலாத் தலங்களையும் பார்த்து ரசித்தவர்களால், உணர்ந்தவர்களால் உங்கள் நாடுகளில் உலகம் முழுவதும் உள்ள உங்கள் உறுப்பினர்களிடம் "தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணம் மேற்கொள்ளாதவர்கள் தங்கள் வாழ்க்கையில் பெரும்பகுதியை இழந்துவிட்டார்கள்'' என்று கூறுவீர்கள் என நான் உறுதியாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

உங்களுடைய ஆதரவு மற்றும் ஒத்துழைப்புடன் ஸ்கால் அமைப்பு இன்னும் வளர்ச்சி பெறும் என்று நாங்கள் நம்புகிறோம். உங்களோடு கலந்துரையாட இந்த அருமையான நல்ல நிகழ்ச்சியில் வாய்ப்பு நல்கிய உங்கள் அனைவருக்கும், ஸ்கால் அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்னையில் நீங்கள் தங்கியிருந்த நாட்கள் மகிழ்ச்சியாகவும் மறக்க முடியாத நாட்களாகவும் அமைய வாழ்த்துகிறேன். இங்கிருந்து திரும்பும்போது இந்த மாநிலத்தில் நீங்கள் பெற்ற பல்வேறு மகிழ்ச்சியான சம்பவங்களை உங்களுடன் எடுத்துச் செல்வீர்கள். மேலும் உங்கள் நண்பர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் மீண்டும் மீண்டும் தமிழ்நாட்டிற்கு வரவேண்டும் என்று விரும்புகிறேன். கடவுளின் தூதனை எதிர்நோக்கி காத்திருப்பவர்களைப் போல் உங்களுடைய வரவுக்காக நாங்கள் காத்திருப்போம்.

சுற்றுலா வளர்ச்சிக்கான சர்வதேச அமைப்பின் 64ஆவது "ஸ்கால்'' சர்வதேச மாநாட்டை 20.10.2003 அன்று தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் மொழிபெயர்ப்பு.

# பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள்! புதிய தொழில் வாய்ப்புகளை உருவாக்கியுள்ளன!

– மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள்




தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்தின் சார்பில் தமிழகத்தில் உருவாகியுள்ள புதிய தொழில் வாய்ப்புகள் குறித்த கருத்தரங்கத்தில் கலந்து கொண்டு அதனைத் தொடங்கி வைப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்தக் கருத்தரங்கம் பாரம்பரிய உற்பத்தித் துறையில் தொடங்கி வேளாண் சம்பந்தப்பட்ட தொழில்கள், தகவல் தொழில்நுட்ப அடிப்படை கொண்ட தொழில்கள் மற்றும் உடல்நலம் உட்பட்ட சேவைகள் துறை ஆகியவற்றில் உருவாகி வரும் தொழில் வாய்ப்புகள் மற்றும் வளர்ச்சி ஆகியவற்றை எடுத்துக்காட்டும் வகையில் இது அமைந்துள்ளது.

**சரியான தருணம்**

2003–2004ஆம் நிதியாண்டு உருவாகியுள்ள அபரிமிதமான வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது தற்போது தொழில் வாய்ப்புகள் அதிக அளவில் உருவாகியுள்ளது என்பது நன்குத் தெரிய வரும். இந்தக் கருத்தரங்கம் சரியான தருணத்தில் நடைபெறுகின்றது என்று சொல்லலாம்.

ஏனெனில் தற்போது சந்தையில் கிடைக்கின்ற எலக்ட்ரானை சுருள் வழி தடம் கொண்ட ஒரு சிறிய சிலிகான் துண்டில் எந்த அளவிற்கு தகவல்களை அதில் சேமித்து வைக்க முடியும் என்பதிலிருந்து உயர்ந்த அளவிலான வளர்ச்சியை நாம் அடைய முடியும் என்பது நிரூபணமாகியுள்ளது.

தமிழகத்தில் பல்வேறு துறைகளில் உருவாகியுள்ள புதிய தொழில் வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது குறித்து முக்கிய கருத்துப் பரிமாற்றத்தை செய்து கொள்வதற்கு ஏற்ற நல்லதோர் அருமையான கருத்தரங்கத்தை ஏற்பாடு செய்த தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் குழுமத்திற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தகவல் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி**

தமிழ்நாட்டை பொறுத்தவரையில் 10–ஆவது திட்ட காலத்தில் பொருளாதார வளர்ச்சி விகிதம் 8 சதவிகிதம் என்று நமக்கு நாமே ஒரு திட்டத்தை நம்பிக்கையுடன்

வகுத்துச் செயல்பட்டு வருகிறோம். உண்மையிலேயே சில துறைகளில் குறிப்பாக உற்பத்தித் துறையில் வளர்ச்சி விகிதம் 10 சதவிகிதத்திற்கு அதிகமாக இருக்க வேண்டும் என்ற இலட்சியத்தை கொண்டுள்ளோம். தகவல் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சி விகிதம் கடந்த ஆண்டை விட 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது நம்முடைய வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணையாகவும், பலமாகவும் அமைந்துள்ளது.

கடந்த ஆண்டு கடுமையான, வறட்சி சூழ்நிலையால் ஏற்பட்டிருந்த பொருளாதார வீழ்ச்சி மற்றும் அதனைத் தொடர்ந்த சூழ்நிலைகள் தற்போது சீர் செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் அதிகபட்சமாக 8 சதவிகிதம் என்பது நம்முடைய கொள்கையில் முக்கியமான திட்டமாகும். இந்தியப் பொருளாதாரத்தின் வளர்ச்சி விகிதத்தை பார்க்கும் பொழுது தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதத்தை 8 சதவிகிதமாக உயர்த்துவது என்பது முடியாத காரியம் என்று சிலர் என்னிடம் தெரிவித்தார்கள். இருந்த போதிலும் மர்ஃபி வரையறையை தவறு என்று நிரூபிப்போம் என்ற உறுதி என்னிடம் உள்ளது.

என் முன்னால் இருந்த வாய்ப்புகளில் ஒன்றான பொருளாதாரச் சீர்திருத்தங்களை செயல்படுத்துவதில் தைரியமாக சரியான நேரத்தில் அமல்படுத்தியதால் மாநிலத்தில் கடந்த காலங்களில் இருந்த நிச்சயமற்ற நிலைமை மாறி இன்று அபரிதமான வளர்ச்சிக்கு உரிய சூழ்நிலை வந்துள்ளது.

**பொருளாதார வளர்ச்சி 5 முதல் 6 சதவிகிதம்**

தற்போது தமிழ்நாட்டில் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆண்டுக்கு 5 சதவிகிதம் முதல் 6 சதவிகிதம் என்ற நிலையில் உள்ளது. நம்முடைய திட்ட இலக்கான 8 சதவிகித பொருளாதார வளர்ச்சியை அடைவதற்குத் தேவையான உந்து சக்தி, பலம், உற்சாகம் ஆகியவற்றை இந்த சிறப்புப் பொருளாதாரச் சீர்திருத்த திட்டத்தின் நிதிச் சீர்திருத்தம் மற்றும் முதலீட்டுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கித் தருவதில் சீர்திருத்தம் சேவைத்துறையில் பணிகளை மேம்படுத்துவதற்காக அத்துறையில் சீர்திருத்தம் மற்றும் ஒருங்கிணைந்த வறுமை ஒழிப்புத் திட்டம் ஆகியவை இதனுள் அடங்கும்.

இதனை நாம் எட்டுவதற்கு எதிர்பார்ப்பில்லாத கடமை உணர்வுடனும் கடும் உழைப்புடனும் பணியாற்ற வேண்டும் என்பதை உங்களுக்கு நினைவுபடுத்த விழைகின்றேன். இதனைச் செயல்படுத்துவதற்கு எண்ணற்ற தடைகள் உண்டு என்பது எனக்குத் தெரியும். ஆனால் அந்தத் தடைகளை எல்லாம் தகர்த்தெறிந்து வெற்றி பெறுவோம் என்பதில் சந்தேகம் எதுவுமின்றி நான் உறுதியாக இருக்கின்றேன்.

தமிழ்நாடு புதிய தொழில் கொள்கை 2003ஐ கடந்த மாதம் வெளியிட்டேன். இந்த தொழில் கொள்கையில் உள்ள கொள்கை மற்றும் திட்டங்கள் மிகப்பெரிய அளவில் பலராலும் பாராட்டப்பட்டதுடன், பெருத்த வரவேற்பும் பெற்றுள்ளது. பல்வேறு வர்த்தக கூட்டமைப்புகளின் வரவேற்பை குறிப்பாக இந்திய தொழில் கூட்டமைப்பு இந்திய தொழில் மற்றும் வர்த்தக கூட்டமைப்பு மற்றும் பல தொழில் கூட்டமைப்புகள் வரவேற்பைப் பெற்றுள்ளது.

**பொருளாதார வளர்ச்சிக்கு புதிய உத்வேகம்**

தமிழகத்தில் முதலீட்டுக்கு ஏற்ற இடமாக மாற்றும் வகையில் ஒரு நீண்டகாலத் திட்டத்தை வகுத்து அதனைச் செயல்படுத்துவதன் மூலம் நம்முடைய இலக்கை எட்டுவதற்கு உரிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன. இது 8 சதவிகித பொருளாதார வளர்ச்சிக்கு புதிய உத்வேகத்தை அளிக்கும் என்பதில் எனக்கு எந்தவித சந்தேகமும் இல்லை. இந்தப் புதிய தொழில் கொள்கை மாநிலத்தில் தெளிவான சூழ்நிலையை படம் பிடித்துக் காட்டுகிறது.

இரண்டாம் கட்டச் சீர்திருத்தம் குறிப்பாக சர்வதேச தரத்திற்கு இணையாக அடிப்படைக் கட்டுமான பணிகளை மேம்படுத்துவது, தரமான குடிநீர் வழங்கல், தரமான மின் விநியோகம், தொழிலாளர் நலச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வருவதன் மூலம் புதிய வேலை வாய்ப்புகள், வரி சீர்திருத்தம் மற்றும் வர்த்தகத்தை எளிமைப்படுத்துவது ஆகியவை அடங்கும். இந்த சீர்திருத்தத்தின் விளைவாக முதலீட்டுக்கு ஏற்ற சூழ்நிலையை உருவாக்கியதுடன் புதிய தொழில் வாய்ப்புகள் இதன் மூலம் உருவாகி வருவதுடனும் மேலும் பல புதிய விரைவான தொழில் நிறுவனங்கள் இங்கு உருவாவதற்கும் இது அடிப்படையாக அமைகிறது.

**உற்பத்தித்துறையில்**
**தமிழகம் முக்கிய இடம்**

தமிழகத்தில் பல்வேறு துறைகளில் உருவாகியுள்ள புதிய தொழில் வாய்ப்புகளில் முதலாவதாக உற்பத்தி துறையில் உருவாகியுள்ள வாய்ப்புகள் குறித்து உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அளவுக்கு அதிகமான தகுதி வாய்ந்த மனித வளம், அமைதியான தொழில் உறவுச் சூழ்நிலை, முறையான சட்டம் ஒழுங்கு பராமரிப்பு, தொழிலுக்கு திட்டமிடுதல் ஆகியவை நாட்டின் உற்பத்தி துறையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு முக்கிய இடத்தை பெற்றுத் தந்துள்ளது. உற்பத்தித் துறையில் தமிழ்நாடு ஏற்கெனவே முன்னணி நிலையில் உள்ளது. தமிழ்நாடு பாரம்பரியமாக மோட்டார் வாகனம் மற்றும் உதிரி பாகங்கள் உற்பத்தித் தொழில்களில் தனக்கென்று ஓர் இடத்தை தக்க வைத்துக் கொண்டுள்ளது.

மேலும் அசோக் லேலண்ட், டி.வி.எஸ்., டாபே, ரானே மற்றும் பல்வேறு மோட்டார் வாகன உற்பத்தியாளர்கள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் தாய் வீடாக தமிழகம் திகழ்ந்து வருகின்றது. மேலும் சர்வதேச




அளவில் இத்துறையில் முன்னணியில் உள்ள பன்னாட்டு நிறுவனங்களான ஃபோர்டு மற்றும் ஹுண்டாய் ஆகிய நிறுவனங்கள் தங்களது உற்பத்தி நிலையங்களை இங்கு அமைத்ததன் மூலம் அது மேலும் தமிழகத்திற்கு வலு சேர்த்துள்ளது.

**உதிரிபாக உற்பத்தியில் தனித்தன்மை**

நாட்டில் மோட்டார் வாகன உற்பத்தி மற்றும் உதிரிபாக உற்பத்தியில் தமிழ்நாடு பயணிகள் மோட்டார் வாகன உற்பத்தியில் 21 சதவிகிதத்தையும், வர்த்தக வாகனங்கள் உற்பத்தியில் 33 சதவிகிதத்தையும் மற்றும் மோட்டார் வாகன உதிரிபாக உற்பத்தியில் 35 சதவிகிதத்தையும் பெற்று தனித்தன்மையுடன் விளங்குகிறது.

தற்போது சர்வதேச அளவில் மோட்டார் வாகன உதிரிபாகங்கள் சந்தை 250 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உள்ள நிலையிலிருந்து இந்த பத்தாண்டுகளின் இறுதியில் 500 முதல் 700 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் புதிய தொழில் வாய்ப்புகளை தமிழ்நாட்டிலுள்ள மோட்டார் வாகன உற்பத்தி மற்றும் மோட்டார் வாகன உதிரிபாகங்களின் நிறுவனங்கள் சரியான அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

**உதிரிபாக ஏற்றுமதி அதிகரிக்க வேண்டும்**

தமிழ்நாடு மோட்டார் வாகன உதிரிபாகங்களின் ஏற்றுமதியானது 250 மில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 1 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு ஓர் ஆண்டுக்குள் உயர வேண்டும் என்ற என்னுடைய ஆசையை தெரிவித்துக் கொள்கின்றேன். திறமையான நிருவாகம் மற்றும் திட்டமிடுதல் உள்ள நகரமாக சென்னை உள்ளதால் விரைவில் சர்வதேச மோட்டார் வாகனம் மற்றும் மோட்டார் வாகன உற்பத்தி தொழில்களின் முக்கிய மையமாக தமிழகம் விளங்கும்.

இன்று நாட்டில் உற்பத்தி செய்யப்படும் வேளாண் மற்றும் வீட்டு உபயோகப் பம்புசெட்டுகள் மற்றும் எந்திரங்கள் உற்பத்தியில் கோவை 50 சதவிகித உற்பத்தியை செய்து வருகின்றது. எந்திரங்கள் உற்பத்தித் துறை மாதத்திற்கு 20 ஆயிரம் டன் என்ற அளவில் உற்பத்தியையும் வர்த்தகம் சுமார் ரூ. 1,000 கோடி அளவுக்கும் நடைபெற்று வருகிறது. நாட்டில் எந்திரங்கள் உருவாக்கும் துறையில் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது கோவை ஒரு முக்கிய மையமாக உருவாகும் என்பதுடன் எந்திரப் பொருட்கள் தயாரிப்பு மற்றும் பல்வேறு வகையான உபரித் தொழில்களுக்கு ஏற்ற மையமாக சர்வதேச அளவில் கோவையை உருவாக்க வேண்டும்.

**திருப்பூர் உலக வரைபடத்தில்**

ஜவுளித்துறையிலும் சாதனை படைத்துள்ளோம். பின்னலாடை, வீட்டு உபயோக துணி வகைகள் மற்றும் மற்ற துணி வகைகள் உற்பத்தித் துறையில் தமிழ்நாடு மிகப்பெரிய இடத்தைப் பெற்றுள்ளது. காரணம் பின்னலாடைகள் மற்றும் நெசவு ஆடைகள் அதிக அளவில் ஏற்றுமதி செய்து அந்நியச் செலாவணியை

ஈட்டுவதால்தான் சர்வதேச அளவில் பின்னலாடைகள் ஏற்றுமதியில் திருப்பூர் உலக வரைபடத்தில் இடம் பெற்றுள்ளது.

மேலும் உள்நாட்டு தேவையில் 50 சதவிகிதத்திற்கும் அதிகமான அளவுக்கு பங்களிக்கின்றது. ஆடைகள் உற்பத்தித் துறையை அடுத்து வீட்டு உபயோக துணி வகைகள் தயாரிப்புத்துறை முக்கியமானதாகும். நாட்டின் வீட்டு உபயோக ஆடைகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு மூன்றாவது இடத்தைப் பெறுகின்றது. இவைகளில் கரூர் மற்றும் ஈரோடு மாவட்டங்கள் சாதனை படைத்துள்ளன.

இந்த அருமையான தொழில் வாய்ப்புகளை வளர்ச்சிக்கு ஏற்ற வகையில் பயன்படுத்துவதற்கு ஏற்ப விரைவில் புதிய ஜவுளி தூதுக்குழு உருவாக்கப்பட்டுப் புதிய வாய்ப்புகள் உள்ள இடங்களை இனம் கண்டறிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இதேபோன்று ஆடை மற்றும் விசைத்தறி பூங்காக்களும் புதிதாக உருவாக்கப் படும். பல அடுக்கு ஒப்பந்தம் 2005–ஆம் ஆண்டு முதல் அமலுக்கு வருவதை அடுத்து நம் நாட்டிலுள்ள ஜவுளி மற்றும் விசைத்தறி துறை மற்றும் உள் அலங்காரத்துறை ஆகியவற்றின் தரம், வடிவமைப்பு மற்றும் வகைகள் ஆகியவற்றை சர்வதேசச் சந்தைகளான அமெரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளுக்கு ஏற்றதாக மேம்படுத்தும் நிலையில் உள்ளோம்.

**ஜவுளித்துறையை மேம்படுத்த வேண்டும்**

மேலும் சர்வதேச அளவில் பின்னலாடை, வீட்டு உபயோக துணி வகைகள் மற்றும் மற்ற துணி வகைகள் ஆகியவற்றை மிகப்பெரிய அளவில் சில்லறை விற்பனை செய்து வரும் வால்மார்ட், டார்கட், மார்க்ஸ் மற்றும் ஸ்பென்சர்ஸ் போன்ற நிறுவனங்கள் இந்த வகைகளை தமிழ்நாட்டில் கொள்முதல் செய்ய ஏற்ற வகையில் ஜவுளித்துறையை மேம்படுத்த வேண்டும்.

இவ்வாறு அந்த நிறுவனங்கள் தமிழ்நாட்டில் ஜவுளி வகைகளை கொள்முதல் செய்வதற்கு நாம் செய்ய வேண்டியவை நம்முடைய உற்பத்தி நிலையங்களை நவீன மயமாக்குவதும், பல்வேறு வகையான மாடல்களை உருவாக்குவதும், ஆடை மாதிரிகள் மற்றவர்களை ஈர்க்கும் வகையில் உருவாக்குவதும் ஆகும். நாட்டின் தோல் உற்பத்தி துறையில் ஏற்றுமதியில் 42 சதவிகித தோல் பொருட்கள் ஏற்றுமதி அதாவது 760,மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பில் தமிழகத்திலிருந்து ஏற்றுமதி செய்யப் படுகிறது.

சர்வதேச அளவில் தோல் பொருட்கள் வணிகத்தில் இந்தியாவின் பங்கு 3.15 சதவிகிதம்தான். இதனை நாம் தெரிந்து கொண்டால் சர்வதேச அளவில் தோல் பொருட்கள் ஏற்றுமதிக்கு உள்ள அபரிமிதமான வாய்ப்புகள் தோல் உற்பத்தித் துறையில் உருவாகியுள்ளது தெரிய வருகின்றது. இந்த வாய்ப்புகளை பயன்படுத்துவதன் மூலம் தோல் பொருட்கள் உற்பத்தித் துறையில் வளர்ச்சி மேலும் அதிகமாகும்.

**உயிரி தொழில்நுட்ப வணிகம்**

உயிரி தொழில்நுட்பத் தொழிற்சாலைகளின் கூட்டமைப்பின் ஒட்டுமொத்த உயிரி தொழில்நுட்ப துறையின் வணிகம் 53 சதவிகித ஏற்றுமதியுடன் மொத்தம் ரூ. 1,830 கோடியாகும். அடுத்த 5 ஆண்டுகளுக்கு இதனுடைய கூட்டு வளர்ச்சி விகிதம் 20 சதவிகிதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த புதிய வாய்ப்புகள் உயிரி மருத்துவம், உயிரி சேவைகள் துறை மற்றும் உயிரி தகவல்கள் ஆகிய துறைகளில் உருவாகியுள்ளது.

நம்முடைய உயிரி தொழில்நுட்ப பூங்கா அமெரிக்காவின் கார்னல் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தொடங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இது அடுத்த ஆண்டு தொடக்கத்தில் செயல்படத் தொடங்கும். இதன் மூலம் உயிரி தொழில்நுட்பத் துறையில் அதிக அளவில் வேலைவாய்ப்பு பெருகுவதுடன் வளர்ச்சிக்கும் இது உறுதுணையாக அமைகிறது.

கட்டுமான தொழிலில் வளர்ச்சி ஒரு குறிப்பிட்ட அளவிற்கு வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளதோடு மேலும் பல்வேறு துறைகளின் வளர்ச்சிக்கும் மூலக்காரணியாக அமைந்துள்ளது.

பொருளாதார இரண்டாம் கட்டச் சீர்த்திருத்தத்தின் விளைவாக நகர்ப்புறங்களில் உள்ள இடங்களை எளிதில் பெறும் வகையிலும் கட்டுமானப் பொருட்களான மணல் மற்றும் பொருட்கள் எளிதில் கிடைப்பதற்கும் புதிய திட்டங்களுக்கு விரைவான நிலையில் ஒப்புதல் அளிப்பது ஆகியவை அடங்கும்.

**கட்டுமானத் துறைக்கு ஆலோசனை**

அதே நேரத்தில் இந்தக் கருத்தரங்கம் கட்டுமானத் துறையின் வளர்ச்சிக்கு தேவையான காரணிகள் குறித்தும் ஆலோசனைகள் வழங்க வேண்டும். குறைந்த விலையில் வீடுகள் உருவாக்கித் தருவது மிகவும் முக்கியமான புதிய முயற்சியாக இத்துறையின் முன் அமைந்துள்ளது. புதிய கட்டுமானப் பொருட்களை இனம் கண்டறிவதோடு, புதிய கட்டுமான தொழில்நுட்பங்களை புகுத்துவதன் மூலம் விரைவான அதே நேரத்தில் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப தேவைப்படும் வீடுகளை உருவாக்கித் தருவதற்கு முயற்சி எடுக்க வேண்டும். இத்துறையின் விரைவான வளர்ச்சிக்குத் தேவையான நடவடிக்கைகள் குறித்தும் ஆலோசனைகள் மேற்கொள்ள வேண்டும்.

**வறுமையை ஒழிக்க முக்கிய காரணி**

நான் தற்போது வேளாண் சார்ந்த தொழில்கள் துறையைப் பற்றி உங்களிடம் கூற விழைகின்றேன். என்னுடைய தலைமையிலான அரசு தொடர்ச்சியான சீர்திருத்தங்களை அமல்படுத்துவதன் மூலம் முக்கிய துறையான இதில் ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கி வருகின்றது. பண்ணை சாராத கிராமப்புற வேலைவாய்ப்பு உருவாக்குவதன் மூலம் மிகப்பெரிய அளவில் வறுமை ஒழிப்பை செயல்படுத்துவதற்கு முக்கியக் காரணியாக இது அமையும்.

**எளிதில் சந்தைப்படுத்தவே ஏற்றுமதி மையம்**

நான் ஏற்கெனவே மூன்று வேளாண் ஏற்றுமதி மையங்களை உருவாக்குவதாக அறிவித்துள்ளேன். மலர் ஏற்றுமதிக்காக தருமபுரி மாவட்டத்தில் ஓசூரிலும், மாம்பழ ஏற்றுமதிக்காக நீலகிரி மாவட்டத்திலும், மற்ற பழ வகைகள் ஏற்றுமதிக்காக தேனி மாவட்டத்திலும் இந்த வேளாண் ஏற்றுமதி மையங்கள் உருவாக்கப்படும். விரைவில் மேலும் இதுபோன்ற இரண்டு புதிய வேளாண் ஏற்றுமதி மையங்களை அமைக்க உள்ளோம். திருச்சிராப்பள்ளி




மாவட்டத்தில் வாழைப்பழ ஏற்றுமதி மையமும், மற்றொன்று நெய்வேலியில் முந்திரி ஏற்றுமதி மையமும் ஆகும்.

இந்த வேளாண் ஏற்றுமதி மையங்கள் உருவாக்கப்படுவதன் அடிப்படை நோக்கம் எளிதில் சந்தைப் படுத்துவதற்கும், அறுவடைக்கு பிந்தைய இழப்புகளை குறைப்பதற்கும், உலர வைப்பதற்கும், பழ வகைகள் கெடாமல் பாதுகாப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பாதுகாப்பதற்கும் தரக்கட்டுப்பாடு முறைகளை பயன்படுத்துவதற்கும் மற்றும் உணவு பூங்காக்கள் அமைப்பதற்கும்தான்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலம் மாநிலத்திலுள்ள 385 ஒன்றியங்களிலும் ரூ.1 கோடி மதிப்பில் வேளாண் சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்கப்படும். தற்போது இத்திட்டம் முழு வேகத்தில் செயல்படத் தொடங்கியுள்ளது. அனைத்து வணிக வங்கிகளும் இத்திட்டத்தை முழுமையான அளவில் செயல்படுத்துவதற்கு தேவையான உதவிகளை முன் வந்து செய்ய வேண்டும் என்று இந்த நேரத்தில் உங்களை வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

தோட்டக்கலைத் துறை மற்றும் மலர் ஏற்றுமதி ஆகிய இரண்டு துறைகளிலும் தற்போது அளவுக்கு அதிகமான வாய்ப்புகள் உருவாகியுள்ளன. இத்துறைகளின் வளர்ச்சிக்கு மதிப்புக்கூட்டு மற்றும் எளிதில் சந்தையை அணுக முடியாத நிலை ஆகியவை தான் மிகப்பெரிய இடையூறாக உள்ளது. ஆகவே விவசாயிகள் எளிதில் புதிய சந்தைகளை அணுகும் வகையில் அவர்களுக்குத் தேவையான வசதிகளை உருவாக்கித் தருவதன் மூலம் அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களின் மதிப்பைக் கூடுதல் செய்ய இயலும்.

**விவசாயிகள் வர்த்தக இணையம்**

டிட்கோ ஏற்கெனவே கூட்டு முயற்சியில் கோழி பதப்படுத்துதல், முட்டை பவுடர் உற்பத்தி ஆகியவற்றிற்கு தொழிற்சாலைகளை தொடங்கி உள்ளது. வேளாண் பொருட்களின் வகைகளின் மலர்களின் இதழ்களைப் பாதுகாப்பது மற்றும் மருத்துவத் தாவரங்கள், தாவர அழகுப் பொருட்கள், விதைகளின் தரத்தை மேம்படுத்துதல், தாவர

எண்ணெய் உற்பத்தி ஆகிய புதிய துறைகளில் பல்வேறு புதிய வாய்ப்புகள் குறித்து இனம் கண்டறிய வேண்டும்.

எங்களைப் பொறுத்தவரை மேலும் இரண்டு புதிய முயற்சிகள் எடுக்க இருக்கிறோம். தோட்டப் பயிரின் தரங்களை உயர்த்துதல், விற்பனை வசதியை ஏற்படுத்துதல், தொழில்நுட்ப கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் போன்றவைகளை செய்ய இருக்கிறோம்.

இரண்டாவதாக தமிழ்நாடு சிறுவிவசாயிகள் வர்த்தக இணையம் ஏற்படுத்த இருக்கிறோம். புதிய தொழில் கருத்துகள் பரிமாற்றம் செய்ய இந்த இணையம் உதவும்.

விவசாயத் தொழில் செய்வோர் மற்றும் வர்த்தக வங்கிகள் இடையே தொடர்பு மற்றும் புதிய உற்பத்தி பொருள் பற்றித் தேவையான தகவல்கள் பரிமாற்றம் செய்யவும், புதிய தொழில்நுட்பம் விவசாயிகளுக்கும் சென்றடையவும் இந்த இணையம் பயனுள்ளதாக இருக்கும்.

தற்போது தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் துறையில் உருவாகியுள்ள வாய்ப்புகள் குறித்து உங்களிடம் சிலவற்றைத் தெரிவிக்க விழைகின்றேன். சுவாட் (SWOT) ஆய்வறிக்கையின்படி இத்துறையில் முதலீடு செய்பவர்களை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது மாநிலத்தின் வளர்ச்சிக்கு மிகவும் அடிப்படைக் காரணியாக அமைந்துள்ளது என்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. பலமான வேளாண் தொழில் அடிப்படையும் போதுமான சீரான மின் விநியோக நிலையும் மேம்படுத்தப்பட்ட அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளும், அதிக தரமான அறிவு பெற்றவர்களின் எண்ணிக்கையும், அபரிமிதமான மனித வளமும் தொழிற்சாலைகளின் சுமூகமான உறவு முறையும் அரசின் ஒத்துழைப்பு ஆகியவை தமிழ்நாட்டின் இந்த வளர்ச்சிக்கு அம்சங்களாக அமைந்துள்ளன.

**தகவல் தொழில்நுட்ப நிறுவனம் எண்ணிக்கை உயர்வு**

இந்தக் காரணிகளை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டும். கடந்த இரண்டு ஆண்டுகளில் தமிழ்நாட்டின் தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி இரண்டு மடங்குக்கும் அதிகமாக, அதாவது 0.67 பில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து 1.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவுக்கு உயர்ந்துள்ளது என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன். தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களின் வளர்ச்சி 750லிந்து 1,000 என்ற அளவுக்கு நிறுவனங்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு ஆண்டுகளில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை நிறுவனங்களின் எண்ணிக்கை 250 அதிகரித்துள்ளது ஒரு முக்கியமான சாதனையாகும்.

மேலும் ஒவ்வொரு மூன்று நாட்களுக்கும் ஒரு புதிய நிறுவனம் உருவாகி வருகின்றது. இதற்கு மூலக்காரணம் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை பணிகள் (ITES) மற்றும் வெளிநாடுகளிலிருந்து பணிகளை வாங்கி இங்கு செய்து கொடுக்கும் துறைகள் (BPO) ஆகியவற்றின் வளர்ச்சி தான் இதற்குக் காரணமாகும்.

**சென்னைக்கு கிடைத்த வாய்ப்பு**

தகவல் தொழில்நுட்ப சேவை துறையில் கிடைத்த வாய்ப்புகளில் மிகப்பெரிய அளவிலான வாய்ப்பு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைத் துறையில் சென்னைக்கு கிடைத்த வாய்ப்புகள் தான். இந்தியாவில் கடந்த ஆண்டில் மட்டும் இத்துறையின் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்ட தகவல் தொழில்நுட்ப ஏற்றுமதி அளவான 10 பில்லியன் அமெரிக்க டாலரில் இத்துறையின் பங்கு 2 பில்லியன் அமெரிக்க டாலராகும்.

நாஸ்காம் (NASSCOM) கூற்றுப்படி மொத்த மென்பொருள் ஏற்றுமதி 2008ஆம் ஆண்டு 50 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு உயரும் என்று தெரிகிறது. இதில் 24 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை பணிகள் மற்றும் பி.பி.ஒ. துறையின் பங்களிப்பு இருக்கும். அகில இந்திய அளவில் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் கடந்த 1997–98இல் நான்கு சதவிகிதத்திலிருந்து 2001–02இல் 14 சதவிகிதத்திற்கும் மேல் வளர்ச்சி அடைந்து, தற்போது 2002–03 இல் 17 சதவிகிதத்திற்கும் உயரும் என்று எதிர்ப்பார்க்கப் படுகிறது.

**பெரிய சவால்கள்**

இதே வளர்ச்சி விகிதத்தையும், பங்கையும் தொடர்ந்துநாம் செயல்படுத்தி வந்தால், சென்னை மற்றும் தமிழ்நாடு 8.5 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு மென்பொருட்களை ஏற்றுமதி செய்ய முடியும். அதில் 4 பில்லியன் அமெரிக்க டாலர் அளவிற்கு தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவை தொழில்கள் மற்றும் வர்த்தக பி.பி.ஒ. துறையின் பங்களிப்பாக இருக்கும். தகவல் தொழில்நுட்ப துறையில் நமக்கு அளப்பரிய வாய்ப்புகளும், அதே நேரத்தில் பெரிய சவால்கள் உள்ளதும் நன்கு தெரிய வருகிறது.

அந்நிய முதலீட்டை இந்த துறைகளில் முதலீடு செய்ய வைப்பது மின்னணு நிருவாகத்தையும் அதன் பயன்பாட்டையும் அனைத்து அரசுத் துறைகளிலும் அமல்படுத்துவதன் மூலம் தமிழ்நாட்டை தகவல் தொழில்நுட்பம் மற்றும் அதனைச் சார்ந்த துறைகளில் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்பது என்னுடைய இலட்சியம்.

**மக்களின் வாழ்க்கைத் தரம் உயர**

தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் மூலம் பழைய பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களை, போட்டிகளை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைப்பதற்கும் மக்கள் அதிகமாக வசிக்கும் கிராமப்புறங்களை நகர்ப்புற மையங்களுடன் இணைப்பதற்கும் கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தரத்தை, வளத்தை மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் இதனைப் பயன்படுத்த வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்பாடு அடையச் செய்வதுதான் இதனை பயன்படுத்துவதன் முக்கிய காரணமாகும்.

இந்தக் கருத்தரங்கத்தில் சேவை துறையில் உருவாகி வரும் புதிய வாய்ப்புகள் குறித்து ஒரு சிறப்பு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதை அறிந்து நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். இது ஒரு சிறந்த திட்டம். ஏனெனில் சேவைகள் துறை அல்லது மூன்றாவது இடத்தில் உள்ள இத்துறை கடந்த காலங்களில் கண்டுகொள்ளாமல் விடப்பட்டுவந்தது. ஆனால் தற்போது மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 50 சதவிகிதம் அளவிற்கு இதன் பங்களிப்பு உள்ளது என்பது தெள்ளத் தெளிவாகிறது. சேவைகள் துறையின் வளர்ச்சி இரண்டு இலக்க எண்ணில் வளர்ச்சி அடையாத வரை விரைவான பொருளாதார வளர்ச்சி என்பது சாத்தியமில்லை.

**மருத்துவத்தில் இந்தியாவின் தலைநகர் சென்னை**

உடல்நலம் பேணுவதில் இந்தியாவின் தலைநகராக சென்னை விளங்குவதற்கு காரணம் தலை சிறந்த மருத்துவமனைகள், தரமான மருத்துவ முறைகள், அதிக அளவில் தகுதியுடைய சிறப்பு மருத்துவ நிபுணர்கள் இருப்பதுதான். இந்த துறை அதிக அளவில் பணியாளர்கள் ஈடுபட்டுள்ள துறை என்ற வகையில் மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. சென்னையும், தமிழ்நாடும் உலகிலுள்ள மக்களுக்கு தரமான உடல்நலத்தை வழங்கும் இடங்களாக விளங்குகின்றன என்று நான் கருதுகிறேன்.



காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. புதிய வாய்ப்புகள், சந்தர்ப்பங்கள் வரும்போது அதனைத் துணிச்சலுடன் எதிர்கொள்ளாவிட்டால் மற்றவர்கள் நமக்கு முன்னால் சென்று விடுவார்கள். எனவே தமிழ்நாட்டில் தொழில்துறையில் காணப்படும் புதிய வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அரசின் பங்கு இப்போது என்னவென்றால் நல்ல பொருளாதார வளர்ச்சிக்கு உரியச் சூழ்நிலை ஏற்படுத்தித் தருவதுதான். அதனை அரசு நிச்சயம் செய்யும்.

இன்று நாம் தகவல் தொழில்நுட்ப யுகத்தில் இருக்கிறோம். எனவே புதிய வாய்ப்புகளை பயன்படுத்தினால் தான் நாம் முன்னேற முடியும். உங்களை போன்ற தொழில் அதிபர்கள் இந்த வாய்ப்புகளைப் பயன்படுத்தி தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற எனது இலட்சியதை நிறைவேற்ற ஆதரவு தர வேண்டும்.

– 15.10.2003 அன்று ''தமிழகத்தில் உருவாகியுள்ள புதிய தொழில் வாய்ப்புகள்'' என்ற கருத்தரங்கினை தொடங்கி வைத்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் ஆற்றிய உரை

* * *

# விவசாயப் பெருங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக அரசு என்றைக்கும் இருக்கும்



மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 4.11.2003 அன்று இலவச மின்சாரம் பற்றி சட்டப் பேரவையில் ஆற்றிய உரை

**1996** ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை ஆட்சியில் இருந்த தி.மு.க. அரசு, நிதிச் சீரமைப்பு நடவடிக்கைகளை சிறிதும் கவனத்தில் கொள்ளாமல், மாநிலத்தை நிதிச் சீரழிவில் தள்ளி விட்டது என்பது அனைவரும் அறிந்ததே.

1999–2000 மற்றும் 2000 – 2001 ஆகிய ஆண்டுகளில் மிகச் சீர்குலைந்திருந்த நிதி நிலைமையைச் சரிசெய்ய, எடுக்க வேண்டிய நடவடிக்கைகளைச் செயல்படுத்தாததால், மார்ச் 2001 இறுதியில் முந்தைய தி.மு.க. அரசு, மாநிலத்தின் நிதி நிலையை முற்றிலும் சீர் கேடு அடையச் செய்துவிட்டது. இந்த மிகப் பெரிய நிதிச் சீரழிவினால், கிட்டத்தட்ட திவாலாகும் நிலையை எதிர்கொண்ட இந்த அரசு, நிலைமையை சரி செய்ய உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதாகி விட்டது. தமிழக அரசின் நிதிநிலை, தமிழ்நாடு மின்வாரியம் மற்றும் பேருந்துப் போக்குவரத்துக் கழகங்கள் ஆகியவற்றின் நிதி நலம் ஆகியவற்றையும் சீர் செய்யும் இமாலயப் பணியை மேற்கொள்ள வேண்டிய நிலைக்கு இந்த அரசு தள்ளப்பட்டது.

1998–ஆம் ஆண்டு மின்சார ஒழுங்குமுறை ஆணையச் சட்டம் என்னும் புதியதொரு சட்டத்தை இந்திய அரசு இயற்றியது. இந்தச் சட்டம் 25.4.1998 முதல் செயல்பாட்டுக்கு வந்தது. இந்தச் சட்டத்தின் கீழ், முந்தைய தி.மு.க. அரசு 17.3.1999 அன்று, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தைத் தோற்றுவித்தது. பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் வழங்கப்படும் சராசரிச் செலவின் அடிப்படையில், மின்சாரத்திற்கான கட்டணம் மாநில மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தினால் மட்டுமே நிர்ணயிக்கப்பட வேண்டும் என்று இந்தச் சட்டம் குறிப்பிடுகிறது.

2001–ஆம் ஆண்டு மே திங்களில் இந்த அரசு பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலைமை சீரழிந்த நிலையில் இருப்பதைக் கண்டது.

2001–2002ஆம் ஆண்டில், மின்சார வாரியம் 5,000 கோடி ரூபாய் அளவிற்கு மொத்த இழப்பை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. மைய அரசின் பொதுத்துறை நிறுவனங்களுக்கு, மின்சாரம் மற்றும் நிலக்கரி வாங்கியதற்காக, 1,962கோடி ரூபாய் மின்சார வாரியத்தால் கொடுக்கப்பட வேண்டியிருந்தது. நிதி நிலைமை மிக அபாயகரமான நிலையில் இருந்ததால், 1.12.2001 முதல் மின் கட்டணத்தை மாற்றி அமைக்க வேண்டிய கட்டாயத்திற்கும், மைய அரசு நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு மின்சார வாரியம் செலுத்த வேண்டிய இந்தத் தொகைகளை அரசே ஏற்க் வேண்டிய கட்டாயத்திற்கும் இந்த அரசு தள்ளப்பட்டது. டிசம்பர் திங்கள் 1–ஆம் தேதி முதல் மின்கட்டண மாற்றத்தை அமலுக்குக் கொண்டு வந்த அதே வேளையில், விவசாய பம்பு செட்டுகளுக்கும், கிராமப்புற குடிசைகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்குவது தொடரப்பட வேண்டும் என்பதை இந்த அரசு உறுதி செய்தது.

2001–ஆம் ஆண்டு மார்ச் திங்களில், முந்தைய தி.மு.க. அரசு துரிதப்படுத்தப்பட்ட மின்சார வளர்ச்சித் திட்டத்தின் கீழ், அதாவது Accelerated Power Development Programme நிதி உதவியைப் பெற்று விட்டது. இதற்கு, தேவைப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தம் அதாவது, Memorandum of Understanding ஒன்று மத்திய அரசால் முன்மொழியப்பட்டது. மாநில ஒழுங்குமுறை ஆணையத்தைச் செயலாக்கம் பெறச் செய்யவும் மேலும் 31.12.2003க்குள் அனைத்து நுகர்வோருக்கும் மின் பயனீட்டு அளவுக் கருவிகள், அதாவது மீட்டர்கள், பொருத்தப்பட வேண்டும் என்பதும் தமிழ்நாடு மின்சார வாரியம் மாநில ஒழுங்குமுறை ஆணையத்திடம் மின் கட்டண விகிதத்தை மாற்றி அமைக்க ஒரு விண்ணப்பத்தினை 30.9.2002–க்குள் கொடுக்க வேண்டும் என்பதும் இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகள். முந்தைய தி.மு.க. அரசு இந்த நிதி உதவியை இந்திய அரசால் அனுப்பப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஏற்கெனவே பெற்று விட்டது.

எனவே, மைய அரசால் அனுப்பப்பட்ட இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதை தவிர வேறு வழி இந்த அரசுக்கு இல்லை. இந்த நிலையில் வேறு வழி இல்லாததால் 2002–ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த ஒப்பந்தத்தில் இந்த அரசு கையெழுத்திட வேண்டியதாயிற்று.

2001–2002ஆம் ஆண்டிற்கான பற்றாக்குறையை சரிசெய்ய, 1.12.2001 அன்று முதற்கொண்டு கட்டண விகிதத்தை மாற்றி அமைத்த பின்னரும், 2002 – 2003ஆம் ஆண்டில் 2,589 கோடி ரூபாய் அளவிற்கும், 2003–2004ஆம் ஆண்டில் 2,993 கோடி ரூபாய் அளவிற்கும் பற்றாக்குறையை தமிழ்நாடு மின்வாரியம் சந்திக்க வேண்டி இருந்தது. இந்தப் பற்றாக்குறையைச் சரிசெய்ய, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம், மின் கட்டண மாற்றத்திற்கான விண்ணப்பத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் 25.9.2002 அன்று அளித்தது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன்னர் தமிழ்நாடு அரசு விரிவான அறிக்கையை எழுத்து மூலமாக சமர்ப்பித்தது. அதில் விவசாய பம்புசெட்டுகளுக்கும், கிராமப்புற குடிசைகளுக்கும் இலவச மின்சாரம் வழங்கப்படுவது தொடரப்பட வேண்டும் என்று திட்டவட்டமாக எடுத்துக் கூறியிருந்தது. 1998–ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட மத்திய அரசின் சட்டத்தின்படி ஏற்படுத்தப்பட்ட தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சட்டத்தில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி, 2003–ஆம் ஆண்டு மார்ச் 16ஆம் தேதி முதல் செயல்படுத்தும்படியான புதிய மின் கட்டண விகித ஆணையைப் பிறப்பித்தது.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், பல்வேறு வகையான மின் உபயோகிப்பாளர்களின் கட்டண விகிதத்தில் மாற்றம் செய்து வெளியிட்ட தனது ஆணையில், விவசாய பம்புசெட்டுகளுக்கான கட்டண விகிதம், மீட்டர் பொருத்தப்பட்டு அதனடிப்படையிலான பயனீட்டளவில், யூனிட் ஒன்றுக்கு 20 பைசா வீதம் என்றும் அல்லது மீட்டர் பொருத்தப்படும் வரை ஆண்டொன்றுக்கு ஒரு குதிரை சக்தி பம்பு செட்டுக்கு 250 ரூபாய் வீதம் என்றும் குறிப்பிட்டு, இந்தக் கட்டணம் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை என்ற அடிப்படையில், 2003 செப்டம்பர் திங்கள் முதல் செலுத்தப்பட வேண்டும் என ஆணை வெளியிட்டது. தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் வெளியிட்டுள்ள இந்தக் கட்டணம், நாடு முழுமையிலும் உள்ள பம்புசெட்டுகளுக்கான கட்டண விகிதத்தை விட மிகக் குறைந்த அளவாகும். மிகப் பெருமளவில் நிதிப் பற்றாக்குறையைத் தானே எதிர்கொண்டுள்ள நிலையிலும் தமிழ்நாடு அரசு, தனது கடன்பாடுகளை நிறைவேற்றவே சிரமப்படும் நிலையிலும் இருந்த போதும் விவசாயிகளுக்கு அரசின் உறுதியான உதவியை வழங்கும் ஒரு நடவடிக்கையாக, இதுவரை இலவச மின்சாரம் பெற்று வந்த சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு நிதி உதவி வழங்கும் திட்டத்தை நான் அறிவித்தேன். இந்தத் திட்டத்தின் கீழ், 3 குதிரைத் திறன் மோட்டார் வைத்துள்ள எல்லா சிறு மற்றும் குறு விவசாயிகளும் ஆண்டொன்றுக்கு 1,000 ரூபாய் நிதி உதவி பெறுவர். இந்த நிதி உதவி, 2 அரையாண்டுத் தவணைகளில், தவணைக்கு 500 ரூபாய் என்ற விகிதத்தில் வழங்கப்படும். மேலும், 5 குதிரைசக்தி மற்றும் அதற்கு அதிகமான குதிரைசக்தி மோட்டார் வைத்துள்ள சிறு மற்றும் குறு விவசாயிகள் ஆண்டொன்றுக்கு 1,250 ரூபாய் என்ற வீதத்தில்,

இரண்டு அரையாண்டுத் தவணைகளில் நிதி உதவி பெறுவார்கள். இந்தத் திட்டத்தின் கீழ், 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன் பெற்றுள்ளனர். மேலும், கிராமப்புறங்களில் உள்ள குடிசை இணைப்புகளுக்கு, நுகர்வோர் மின் கட்டணம் செலுத்த ஏதுவாக நிதி உதவி வழங்கும் திட்டத்தையும் நான் அறிவித்திருந்தேன். இந்தத் திட்டத்தின் கீழ், கிராமப்புற குடிசை வாசிகள், ஆண்டு ஒன்றுக்கு 100ரூபாய் உதவித் தொகை பெறுவர். 9 இலட்சம் கிராமப்புற குடிசை மின் இணைப்புகள் இந்தத் திட்டத்தின் கீழ் பயன் அடையும்.

நான் இந்த அறிவிப்புகளை செய்தபோது, அரசின் இந்த நிதி உதவித் திட்டம் விவசாயிகளை உரிய காலத்தில் சென்று அடையாது என்றும், இந்தப் பணம் விவசாயிகளைச் சென்றடைவதில் பெரிய பிரச்சினைகள் எழும் எனவும் சந்தேகங்கள் எழுப்பப்பட்டன. அரசின் இந்த நிதி உதவித் திட்டத்தின் பயன்கள், சிறு மற்றும் குறு விவசாயிகளை அடைவதில் தவறு ஏற்படவே வாய்ப்பே இல்லாமல், உரிய காலத்தில் Money Order மூலமாக பணத்தை அனுப்பும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பம்புசெட்டு வைத்துள்ள 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, அஞ்சல் பணவிடை அனுப்புவதை வருவாய்த்துறை உறுதிப்படுத்தியுள்ளது. இந்தப் பணம் அஞ்சல் பணவிடைகள் மூலம் அனுப்பப்பட்டதால், இது விவசாயிகளுக்குச் சரியாகப் போய்ச் சேருவதில் எந்தவிதமான பிரச்சினையும் ஏற்படவில்லை.

இந்தத் திட்டம் மாபெரும் வெற்றியாக அமைந்து விட்டது. மொத்தமுள்ள 15.24 இலட்சம் விவசாயிகளில், 13.36 இலட்சம் விவசாயிகள் 81.85 கோடி ரூபாய் அளவு மின் கட்டணத் தொகையை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, 28.10.2003 நிலவரப்படி செலுத்தியுள்ளனர். அதாவது, 87.69 சதவிகிதம் விவசாயிகள் கட்டணம் செலுத்தியுள்ளனர் என்பதும், செலுத்தப்பட்ட தொகை, மொத்தக் கட்டணத் தொகையில் 88.37 சதவிகிதம் என்பதும் குறிப்பிடத்தக்கது. 8.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகளில் 87.78 சதவிகிதமான 7.5 இலட்சம் சிறு மற்றும் குறு விவசாயிகள் 28.10.2003 நிலவரப்படி தங்களது கட்டணத்தை இந்த அரசின் நிதி உதவியுடன் செலுத்தி உள்ளனர். தமிழக மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய தொகையில் 88.84 சதவிகிதம் தொகையை இவர்கள் செலுத்தியுள்ளது பெரும்பான்மையான விவசாயிகள் அரசின் இந்தப் புதிய திட்டத்தை வெகுவாக வரவேற்றுள்ளனர் என்பதையே காட்டுகிறது.

மின் இணைப்பின் உரிமம் மாறியது, மின் இணைப்பின் உரிமையாளர் இறந்த பின், வாரிசுதாரர் பெயர் மாற்றம் செய்து கொள்ளாதது, தவறான முகவரிகள் போன்ற காரணங்களினால், ஒரு சில அஞ்சல் பணவிடைகள் திரும்பி விட்டன. தமிழ்நாடு மின்சார வாரியம் உரிய பெயர் மாற்றம் செய்ய எளிய நடைமுறையை வகுத்துள்ளது. இந்தப் பெயர் மாற்றங்கள் நவம்பர் மாதம் 15ஆம் தேதிக்குள் முடிக்கப்படும். அதற்குப் பிறகு, உரிய அஞ்சல் பணவிடைகள் பெயர் மாற்றம் செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அனுப்பப்படும். மின் கட்டணத்தைச் செலுத்த நவம்பர் திங்கள் 30ஆம் தேதி வரை கால அவகாசம் கொடுக்கப்படும்.

புதிய விதிமுறைகள் நடைமுறைக்கு வந்தபோதும், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படுவதை எனது அரசு உறுதிப்படுத்தியுள்ளது. இந்த அரசால் அறிமுகப் படுத்தப்பட்ட, சிறு மற்றும் குறு விவசாயிகளுக்குப் பயன்அளிக்கும் இந்தத் திட்டம் அனைவரின் வரவேற்பையும் பெற்றுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், குடிசை மின் இணைப்பைப் பொறுத்த வகையில், 9 இலட்சம் கிராமப்புற குடிசைவாசிகளுக்கு அஞ்சல் பணவிடை அனுப்பப்பட்டுள்ளது. இவர்களில் 7.5 இலட்சம் குடிசைவாசிகள், 28.10.2003 நிலவரப்படி, ஏற்கெனவே தொகையைச் செலுத்தி விட்டனர். இது மொத்தக் குடிசை இணைப்புகளில் 84.12 சதவிகிதம் ஆகும். விதிக்கப்பட்ட கட்டணத் தொகையான 5.4 கோடி ரூபாயில், 4.5 கோடி ரூபாய் அதாவது 84.46 சதவிகிதம் செலுத்தப்பட்டு விட்டது. இந்தத் திட்டமும் மாபெரும் வெற்றி அடைந்துள்ளது.

இவ்வாறாக, ஒழுங்குமுறை ஆணையத்தினால் விதிக்கப்பட்ட கட்டணங்களை, ஒவ்வொருவரும் செலுத்தியாக வேண்டும் என்ற கொள்கையை உறுதி செய்யும் அதே நேரத்தில், சிறு மற்றும் குறு விவசாயிகள் மற்றும் கிராமப்புற குடிசைவாசிகள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டணத்தை செலுத்துவதற்கு ஏதுவாக, இந்த அரசு நிதி உதவி செய்துள்ளது. மிகச் சிக்கலான இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, இந்த அரசு எடுத்த முயற்சி மாபெரும் வெற்றி அடைந்துள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மின்சாரம் சம்பந்தமாக நடைமுறையில் இருந்த அனைத்துச் சட்டங்களுக்கும் பதிலாக, மின்சாரச் சட்டம் 2003 என்னும் சட்டத்தை, மைய அரசு நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளதை அவையின்**

உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள் என அறிகிறேன். எனவே, இனிமேல் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் இயக்கம், இந்தச் சட்டத்திற்கு மட்டுமே கட்டுப்பட்டது. தி.மு.க. அங்கம் வகிக்கும் மத்திய அரசால் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட இந்தச் சட்டம் **10.6.2003** முதல் நடைமுறைக்கு வந்தது. இந்த சட்டத்தின்படி, எந்தவிதமான விதி விலக்குமின்றி எல்லா மின் நுகர்வோர்களுக்கும் மீட்டர் பொருத்தப்பட வேண்டும். அதாவது, மீட்டர் பொருத்தப்படாமல் எந்த ஒரு மின் நுகர்வோருக்கும் மின்சாரம் கொடுக்கக் கூடாது. இந்தச் சட்டத்தில் இரண்டு வருடங்களுக்குள் மீட்டர் இல்லாத இணைப்புகளுக்கு மீட்டர் பொருத்த வேண்டும் என்று கால அவகாசம் கொடுக்கப் பட்டிருந்தாலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் மீட்டர் பொருத்துவதற்கான ஒரு வரையறுக்கப்பட்ட திட்டத்தை, **16.3.2003**–லிருந்து **3** மாதத்திற்குள் சமர்பிக்க தமிழ்நாடு மின்சார வாரியத்தைக் கோரியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த மீட்டர் பொருத்தும் திட்டத்தை சமர்ப்பிக்க **31.12.2003** வரை கால அவகாசம் கோரியுள்ளது. மேலும், தமிழ்நாடு மின்சார ஒழுங்கு முறை ஆணையம், புதிய மின் இணைப்புகள் அனைத்தும் மீட்டர் பொருத்தப்பட்டுதான் கொடுக்கப்பட வேண்டும் என்றும் ஆணையிட்டுள்ளது. இவ்வாறாக, புதிய சட்டத்தின்படியும், மேலும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் உத்தரவின் படியும் புதிய மின் இணைப்புகளை மீட்டருடன் மட்டுமே கொடுப்பதைத் தவிர, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வேறு வழி இல்லை. மீட்டர் பொருத்துவதற்கான இணைப்புகளின் அதிகப்படியான எண்ணிக்கை, செலவு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு உரிய கால அவகாசத்தைப் பெற்று, படிப்படியாக தமிழ்நாடு மின்சார வாரியம் இதைச் செயல்படுத்தக் கருதியுள்ளது.

இனிமேல் எங்கள் முயற்சி, திட்டவட்டமான விவசாய அபிவிருத்தித் திட்டத்தை விவசாய பம்புசெட்டுகள் உள்ள விவசாயிகளிடையே செயல் படுத்துவதாகும். இந்தத் திட்டத்தின் கீழ், விவசாய பம்பு செட் மூலம் பயிர் செய்யப்பட்டு வரும் நிலங்களின் தற்போதைய நிலவரம் நன்கு ஆராயப்பட்டு, அந்த விவசாயி அதிக நிகர வருவாய் பெற உரிய உதவித் திட்டம் செயல்படுத்தப்படும். இந்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் **10** கோடி ரூபாய், இந்தத் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம் தொடங்கப்படும். விவசாயிகள் தங்களுடைய வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்பதும் அதனால் மேம்பட்ட தரத்துடன் கூடியதொரு வாழ்க்கையை அவர்கள் பெற வேண்டும் என்பதும், அதே சமயம் அவர்கள் தங்கள்

***“இனிமேல் எங்கள் முயற்சி, திட்டவட்டமான விவசாய அபிவிருத்தித் திட்டத்தை விவசாய பம்புசெட்டுகள் உள்ள விவசாயிகளிடையே செயல்படுத்துவதாகும். இந்தத் திட்டத்தின் கீழ், விவசாய பம்புசெட் மூலம் பயிர் செய்யப்பட்டு வரும் நிலங்களின் தற்போதைய நிலவரம் நன்கு ஆராயப்பட்டு, அந்த விவசாயி அதிக நிகர வருவாய் பெற உரிய உதவித் திட்டம் செயல்படுத்தப்படும்.”***

விவசாயத்திற்கு தேவைப்படும் மின்சாரம் உள்ளடக்கிய பல்வேறு செலவுகளைச் சிரமம் இன்றி மேற்கொள்ள வேண்டும் என்பதும் எங்களது கோட்பாடு ஆகும். ஒவ்வொரு பண்ணையும் இலாபகரமாக இயங்க வேண்டும் என்பதற்காக, இந்தத் திட்டத்தை நாங்கள் தொடர்ந்து செயல்படுத்துவோம்.

நான் ஏற்கெனவே சில புள்ளி விவரங்களை இந்த அவைக்குத் தெரிவித்தேன். அவற்றில் முக்கியமானதை மீண்டும் நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஆண்டிற்கு ஒரு குதிரைத் திறன் உள்ள பம்புசெட்டில் பயன்படுத்தப்படும் மின்சாரத்தின் உத்தேச அளவு **1,051** யூனிட்டுகள். **5** குதிரைத் திறன் உடைய பம்பு செட்டுக்கு ஆண்டுக்கு உத்தேச அளவு **5,255** யூனிட்டுகள். மின்சாரத்தின் அடக்க விலை அதாவது உற்பத்தி செலவு ஒரு யூனிட்டுக்கு **307** காசுகள். மின்சார ஒழுங்கு முறை ஆணையம் விதித்த கட்டணம் யூனிட்டுக்கு **20** காசுகள் மட்டுமே. வாரியத்திற்கு ஒரு யூனிட்டிற்கு ஏற்படும் இழப்பு **287** காசுகள். **5** குதிரைத்திறன் உள்ள பம்புசெட் பயன்படுத்தும் மின்சாரத்தின் விலை **16,132** ரூபாய். ஆனால் விவசாயிகள் ஆண்டிற்கு செலுத்தும் தொகை **1,250** ரூபாய் மட்டுமே. மின்சார வாரியம் **5** குதிரைத் திறன் உள்ள பம்புசெட்டுக்கு வழங்கும் மின் கட்டண சலுகை **14,882** ரூபாய். **16.74** இலட்சம் பம்பு செட்டுகளுக்கு அளிக்கும் மின் கட்டண சலுகை **2,491.25** கோடி ரூபாய் அல்லது **2,500** கோடி ரூபாய்

ஆகும். ஆகவே தமிழ்நாடு மின்சார வாரியம் ஆண்டுக்கு 2,500 கோடி ரூபாய் மதிப்புள்ள மின்சாரத்தை மானியமாக விவசாயத்திற்கு இன்னும் அளித்து வருகிறது என்பதை மீண்டும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்கள் பேசுகின்றபோது Wind Mill Power Generation காற்றாலை மூலமாக மின்சார உற்பத்தி செய்வதைப் பற்றி இங்கே குறிப்பிட்டார். ஏற்கெனவே தமிழ்நாட்டில் காற்றாலை மூலமாக மின் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே

**“தமிழ்நாட்டில் காற்றாலை மூலமாக மின் உற்பத்தி அதிக அளவில் செய்யப்படுகிறது. இன்றைக்கு இந்தியாவிலேயே காற்றாலை மூலமாக மின் உற்பத்தி செய்யும் முதல் மாநிலம் தமிழகம் என்ற பெருமையை நாம் அடைந்து இருக்கிறோம்''.**

காற்றாலை மூலமாக மின் உற்பத்தி செய்யும் முதல் மாநிலம் தமிழகம் என்ற பெருமையை நாம் அடைந்து இருக்கிறோம். விவசாயிகளுக்காக பிரத்தியேகமாக மேலும் காற்றாலை மின் உற்பத்தி செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு கேட்டுக் கொண்டார். இது நல்ல யோசனைதான். இதை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியில் ஒன்றை தெளிவாகக் கூற விரும்புகிறேன். இன்றைய தினம் உண்மை என்னவென்றால் இலவச மின்சாரம் ரத்தாகிவிட்டது, ரத்தாகிவிட்டது என்று எதிர்க்கட்சியினர் மக்களை, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களை போராட்டத்திற்குத் தூண்ட எவ்வளவோ பகீரத முயற்சி செய்தாலும் கூட, விவசாயப் பெருங்குடி மக்கள் போராடத் தயாராக இல்லை. போராட்டத்திற்கு யாரும் வரவில்லை. காரணம், இந்த அரசின் நல்ல எண்ணத்தை விவசாயிகள் புரிந்து கொண்டு இருக்கிறார்கள். ஏற்கெனவே நான் தெளிவாக சுட்டிக் காட்டியது போல் முன்பு இலவச மின்சாரம் என்ற பெயரில் அரசு அந்த மானியச் செலவை ஏற்றுக் கொண்டு சிறு குறு விவசாயிகளுக்கு அநேகமாக எல்லா விவசாயிகளுக்கும் இலவசமாக மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. ஆனால் இன்றைக்கு ஒரு சிறிய மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. பெயர் மாற்றம் அவ்வளவுதான். மின்சாரத்திற்குக் கட்டணம் செலுத்த வேண்டும் என்ற பெயரளவில் உதட்டளவில் சொல்லியிருக்கிறோமே தவிர, உண்மையில் விவசாயிகள் தங்கள் கைப்பணத்தை எடுத்து அந்தக் கட்டணத்தை செலுத்தவில்லை. சிறு குறு விவசாயிகள் செலுத்த வேண்டிய கட்டணத்திற்கான பணத்தை இந்த அரசே வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே மாற்றுப் பெயரில் கட்டணம் என்ற பெயரில் இலவச மின்சாரத் திட்டம் இன்றைக்கும் தொடருகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசுகின்ற போது, ஒரு கருத்தைத் தெரிவித்தார். விவசாயிகளிடையே ஒரு மனக்குறை இருக்கிறது என்றார். என்ன அந்த மனக்குறை? இன்றைக்கு மணி ஆர்டர் மூலமாக இந்த அரசு பணம் வழங்கிக் கொண்டிருக்கிறது. நாளை முடியவில்லை என்று நிறுத்திவிட்டால் என்ன செய்வது என்ற ஐயப்பாடு விவசாயிகள் மனதில் இருப்பதாகத் தெரிவித்தார். இந்த ஐயப்பாடு வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்களின் மனதில் இருக்கலாமே ஒழிய, விவசாயிகள் இந்த அரசின் மீது முழு நம்பிக்கை வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். விவசாயிகள் இந்த அரசின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை ஒரு நாளும் வீண் போகாது. ஆகவே இந்தத் திட்டம் தொடரும், விவசாயிகளின் நலன் பாதிக்கின்ற வகையில் எந்த ஒரு திட்டத்தையும் எந்த ஒரு நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மீண்டும் சொல்கிறேன். இந்த நாட்டின் முதுகெலும்பாக விளங்கும் விவசாய பெருங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு அரணாக, கேடயமாக இந்த அரசு என்றைக்கும் இருக்கும், என்றைக்கும் விவசாயப் பெருமக்களுக்கு உதவிக் கரத்தை இந்த அரசு நீட்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, விவசாயிகளின் நலனைப் பாதிக்க நாங்கள் ஒருபோதும் ஒரு காலத்திலும் அனுமதிக்கமாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

# ஸ்ரீபெரும்புதூரில் ஒருங்கிணைந்த கண்ணாடித் தொழிற்சாலை

**– மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்தானது**



மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முன் முயற்சிகளின் காரணமாக, பிரான்ஸ் நாட்டின் செயிண்ட் – கோபெய்ன் கண்ணாடி தயாரிக்கும் நிறுவனம், சென்னையை ஒட்டியுள்ள ஸ்ரீபெரும்புதூரில் அமைந்துள்ள தன்னுடைய கண்ணாடித் தொழிற்சாலையில், மேலும் 500 கோடி ரூபாய் முதலீடு செய்து, இரண்டாவது திட்டத்தைத் தொடங்கி மேம்படுத்த உள்ளது.

இதற்கான பொறுப்பேற்பு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசுக்கும் பிரான்ஸ் நாட்டின் செயிண்ட் – கோபெய்ன் விட்ரேஜ் நிறுவனத்திற்கும் இடையே 30.10.2003 அன்று தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்தானது.

செயிண்ட் கோபெய்ன் விட்ரேஜ் நிறுவனத்தின் சார்பில், அதன் தலைவர் ஜாக் அஸ்செனப்ரோவும் தமிழ்நாடு அரசின் சார்பில் தொழில்துறைச் செயலாளர் திரு. அருண் ராமநாதன் இ.ஆ.ப., அவர்களும் கையெழுத்திட்டனர். அப்போது முதலமைச்சர் அவர்கள், இந்த பொறுப்பேற்பு ஒப்பந்தம் கையெழுத்தானது குறித்து மிகுந்த மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

பிரான்ஸ் நாட்டின் செயிண்ட் – கோபெய்ன் கண்ணாடி தயாரிக்கும் நிறுவனம் உலகெங்கும் 29 இடங்களில் தனது தொழிற்சாலைகளை நிறுவியுள்ளது. கையெழுத்தான இந்த பொறுப்பேற்பு ஒப்பந்தத்தின்படி, 500 கோடி ரூபாய் புதிய முதலீடு செய்யப்படும் ஸ்ரீ பெரும்புதூர் கண்ணாடி தொழில் வளாகம், செயிண்ட் – கோபெய்ன் நிறுவனத்தின் பெருமளவு முதலீட்டைப் பெற்ற தனித் தொழிற்சாலைகளில் ஒன்றாக அமையும். இந்தத் திட்டம் 2004ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு 36 மாதங்களுக்குள் முடிக்கப்படும்.

இதன் மூலம் மோட்டார் வாகனங்கள், கட்டடங்கள் மற்றும் கட்டடக் கலைத் தேவைகளையும், சூரிய வெப்பம் மற்றும் ஒலிஅதிர்வுகளைக் கட்டுப்படுத்தவல்ல கண்ணாடித் தேவைகளையும் ஈடு செய்கின்ற வகையில், உலகத் தரம் வாய்ந்த ஒருங்கிணைந்த கண்ணாடித் தயாரிப்பு தொழில் வளாகமாக ஸ்ரீபெரும்புதூர் செயிண்ட் – கோபெய்ன் கண்ணாடித் தொழிற்சாலை உருவாகும்.

இந்த நிகழ்ச்சியில் செயிண்ட் – கோபெய்ன் கண்ணாடி நிறுவனத்தின் சார்பாக, பிரான்ஸ் நாட்டின் செயின்ட் – கோபெய்ன் விட்ரேஜ் நிறுவனத்தின் தலைவர் ஜாக் அஸ்செனப்ரோ, இந்தியா, பங்களாதேஷ், இலங்கை நாடுகளில் செயிண்ட்–கோபெய்ன் நிறுவன பொதுப் பிரதிநிதி ஏ.ஒய். மகாஜன், பிரான்ஸ் நிறுவனத்தின் தொழில்நுட்ப இயக்குநர் பி. சந்தானம், செயிண்ட் – கோபெய்ன் சேகுரிட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் டிஃபிலிபெர்ட், நிதி மற்றும் பணி முறை தலைமை அலுவலர் டி. பாஸ்கரன், மனிதவளத் தலைமை அலுவலர் பி. பத்மகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு அரசின் சார்பாக, மாண்புமிகு நிதித்துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு. நயினார் நாகேந்திரன், தலைமைச் செயலாளர் திருமதி. லக்ஷ்மி பிராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., தொழில்துறைச் செயலாளர் திரு. அருண் ராமநாதன் இ.ஆ.ப., சிப்காட் நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. டி.ஆர். ஸ்ரீநிவாசன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்து கொண்டனர். ★



# மாண்புமிகு முதலமைச்சர் முன்னிலையில் இயற்கை இடர்ப்பாடு தடுப்பு குறித்து ஐ.நா.வுடன் அரசு ஒப்பந்தம்

தமிழ்நாட்டில் புயல், மழை, வெள்ளம், நிலச்சரிவு மற்றும் நிலநடுக்கம் ஆகிய இயற்கை இன்னல்களுக்கு அடிக்கடி ஆளாகும் மாவட்டங்களிலும், மாநகரங்களிலும் அந்தப் பேரிடர்களைச் சமாளிக்கும் வகையில் பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தமிழ்நாடு அரசுக்கும், ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்திற்கும் இடையே, 30.10.2003 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் கையெழுத்தானது.

புயல், மழை, வெள்ளம், நிலச்சரிவு முதலான இயற்கை இன்னல்களுக்கு அடிக்கடி ஆளாகும் எனக் கண்டறியப்பட்டுள்ள நாகப்பட்டினம், திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர், கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்களிலும் நிலநடுக்கத்தின் பாதிப்புக்கு இலக்காகும் எனக் கண்டறியப்பட்டுள்ள சென்னை மற்றும் கோயம்புத்தூர் போன்ற முக்கிய மாநகரங்களிலும், இத்தகைய இன்னல்கள் ஏற்படும்போது அவற்றை எதிர்கொண்டு, மக்களுக்குத் துன்பம் நேரா வண்ணம் சமாளித்து, தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வகையில் பேரிடர் மேலாண்மைத் திட்டம் என்னும் புதிய திட்டத்தை தமிழக அரசு செயல்படுத்த உள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம், மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் பேரிடர் மேலாண்மைத் திட்டங்களை வகுத்தல், கிராம அளவிலும், வட்டார அளவிலும், பேரிடர்களை எதிர்கொள்ளும் திட்டங்களை வகுத்தல், கிராமம் மற்றும் வட்டார அளவில் மகளிருக்கு தக்க வாய்ப்பினை அளித்து பேரிடர் மேலாண்மைக் குழுக்கள் உருவாக்கிப் பயிற்சி வழங்குதல், இயற்கை இன்னல்களுக்கு ஆளாகும் பொதுமக்களையும், கால்நடைகளையும் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்லவும், இருப்பிடம், குடிநீர் மற்றும் சுகாதார வசதிகள் அளிக்கவும், தக்க மீட்புப் பணிகள் மேற்கொள்ளவும் பயிற்சி அளித்தல், முதல் உதவி வழங்குவதில் மகளிருக்கு தனிப்பயிற்சி அளித்தல், நிலநடுக்கத்தால் பாதிக்கப்படாத வகையில் வீடுகள் மற்றும் கட்டடங்கள் கட்டுவதற்கான திட்டங்களை வகுத்தல் ஆகிய பணிகள் நிறைவேற்றப்படும்.

மேலும், இந்தப் பேரிடர் மேலாண்மைத் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளின் மற்ற நடப்புத் திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்தப்படும்.

பேரிடர் மேலாண்மைத் திட்டத்தை, மத்திய அரசின் உள்துறை அமைச்சகம் மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய அமைப்புகளுடன் இணைந்து தமிழ்நாடு அரசு செயல்படுத்தும். இந்தத் திட்டத்திற்கான மொத்த ஒதுக்கீடு 1.475 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும். அதாவது, இந்திய மதிப்பில் 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் ஆகும். இந்தத் திட்டம் 2007ஆம் ஆண்டில் நிறைவடையும்.

இந்த நிகழ்ச்சியில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட நிறுவனத்தின் இந்திய துணை உள்ளுறை பிரதிநிதி டென்னீஸ் லாசரஸ், உதவி உள்ளுறை பிரதிநிதி சரோஜ் குமார் ஜா, முதுநிலை இணை அலுவலர் காளிகா மொகாபாத்ரா ஆகியோரும், தமிழ்நாடு அரசின் சார்பில் தலைமைச் செயலாளர், திருமதி. லக்ஷ்மி பிராணேஷ் இ.ஆ.ப., வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித்துறைச் செயலாளர் திரு. என். நாராயணன் இ.ஆ.ப., சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் திரு. ஆர். சந்தானம் மற்றும் வருவாய்த்துறைச் செயலாளர் திரு. என்.சுந்தரதேவன் இ.ஆ.ப., ஆகியோரும் கலந்து கொண்டனர். ✶



# நாட்டிலேயே கிராமப்புற வளர்ச்சியில் தமிழகம் முதலிடம்

கிராமப்புற மக்களின் வாழ்க்கைத் தர மேம்பாட்டிற்காக ஊரக வளர்ச்சித் துறை பல்வேறு திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் வழிகாட்டுதலின்படி செயல்படுத்தி வருகிறது. இவற்றில் சில திட்டங்கள் மத்திய அரசின் பங்கேற்புடனும் வேறு சில திட்டங்கள் முற்றிலும் மாநில அரசின் நிதியுடனும் செயல்படுத்தப்படுகின்றன.

அக்டோபர் திங்கள் 9 மற்றும் 10 தேதிகளில் அகில இந்திய அளவில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட அலுவலர்கள் மாநாடு புதுதில்லியில் நடைபெற்றது. அவ்வமயம் 2002–03 ஆம் ஆண்டில் மத்திய மாநில அரசுகள் இணைந்து செயல்படுத்தும் திட்டங்களின் கீழ் நிதியினைப் பயன்படுத்துவதில் தமிழ்நாடு நாட்டிலேயே முதல் மாநிலமாக திகழ்கிறது என தெரிவிக்கப்பட்டது. கடந்த நிதியாண்டில் இத்திட்டங்களின் கீழ் மொத்தம் கிடைக்கப்பெற்ற ரூ.626.43 கோடியில் 92.79 சதவிகிதமான ரூ.581.30 கோடியைப் பயன்படுத்தி அகில இந்திய அளவில் தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. 77.59 சதவிகிதம் நிதியைப் பயன்படுத்தி அரியானா மாநிலம் இரண்டாவது இடத்தையும், 75.01 சதவிகிதம் நிதியைப் பயன்படுத்தி மகாராட்டிர மாநிலம் மூன்றாவது இடத்தையும், 72.65 சதவிகிதம் பயன்படுத்தி ஒரிஸ்ஸா மாநிலம் 4ஆவது இடத்தில் உள்ளதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது.

பல்வேறு திட்டங்களின் கீழ் தொடர்ந்து குறைந்து வந்த ஆண்டு ஒதுக்கீட்டானது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இடையறாத வழிகாட்டுதலின்படி கடந்த இரண்டு ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. குறிப்பாக நடப்பு நிதியாண்டில் (2003–04) சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு ஒதுக்கீடான ரூ.238.59 கோடியை விட 7.38 சதவிகிதம் கூடுதலாக ரூ.256.20 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்திரா நினைவு குடியிருப்புத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு ஒதுக்கீடான ரூ.80.82 கோடியை விட 15.64 சதவிகிதம் கூடுதலாக ரூ.93.46 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதேபோல் பொன்விழா கிராம சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு ஒதுக்கீடான ரூ.36.17 கோடியை விட 38.15 சதவிகிதம் கூடுதலாக உயர்த்தி ரூ.49.97 கோடி நிதி ஒதுக்கீடு கிடைத்துள்ளது.

முழு சுகாதார இயக்கம் 1999–2000 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் 2001–2002 ஆம் ஆண்டு வரை 7 மாவட்டங்களில் மட்டுமே செயல்படுத்தப்பட்டு வந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக எஞ்சியுள்ள 21 மாவட்டங்களிலும் ரூ.251.35 கோடி மதிப்பீட்டில் விரிவுபடுத்தப்பட்டு அனைத்து மாவட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும் மாநிலமாக தமிழகம் சாதனை புரிந்துள்ளது. பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வழக்கமான ஆண்டு ஒதுக்கீடான ரூ.80 கோடி நடப்பு நிதி ஆண்டில் ரூ.164.78 கோடியாக மத்திய அரசால் உயர்த்தப்பட்டுள்ளது. ★

# சிவகங்கை மாவட்டத்தில் 21,300 எக்டேரில் தரிசு நில மேம்பாட்டுப் பணிகள்

சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 21,300 எக்டேர் தரிசு நிலங்கள் ரூ.10 கோடி செலவில் நீர்வடிமுகடுப் பகுதிகள் அடிப்படையில் மேம்படுத்தப்படவுள்ளதாக மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்து உள்ளார்.

தமிழ்நாடு அரசின் முன்னுரிமைத் திட்டங்களில் முதன்மையானது தரிசு நில மேம்பாட்டுத் திட்டமாகும். மாநிலத்திலுள்ள 20 இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களை ஐந்து வருடங்களில் மேம்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகிறது. இத்திட்டத்தின் செயலாக்கத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தலைமையில் தமிழ்நாடு நீர்வடிமுகடுகள் மற்றும் தரிசு நிலங்கள் மேம்பாட்டு ஆணையம் உருவாக்கப்பட்டுள்ளது. மாநில அளவில் திட்டச் செயலாக்கத்தினை ஒருங்கிணைக்க தமிழ்நாடு நீர்வடிமுகடுகள் மேம்பாட்டு முகமை வேளாண்மைத் துறையில் அமைக்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலும் 23 மாவட்டங்களில் மாவட்ட நீர்வடிமுகடுகள் மேம்பாட்டு முகமைகள் அமைத்து பதிவு செய்யப்பட்டு உள்ளது. வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வனத்துறை மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் திட்டச் செயலாக்க முகமைகளாக நியமனம் செய்யப்பட்டு தரிசு நிலங்கள் நீர்வடி முகடுகள் பகுதிகள் அடிப்படையில் மேம்பாடு செய்யப் படுகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் மத்திய அரசு மற்றும் மாநில அரசு நிதி உதவிகளுடன் நான்கு விதமான மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

**வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம்**

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள காளையார் கோவில், இளையான்குடி, கல்லல், தேவகோட்டை, கண்ணங்குடி, சிங்கம்புணரி மற்றும் எஸ்.புதூர் ஆகிய ஏழு வட்டாரங்கள் வறட்சிக்கு இலக்காகும் பகுதி வட்டாரங்கள் ஆக அறிவிக்கப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு துவங்கி வரும் ஐந்து ஆண்டுகளில் இந்த வட்டாரங்களில் 14 நீர்வடி முகடுப் பகுதிகளில் மொத்தம் 7,000 எக்டேர் நிலங்களில் ரூ. 420 இலட்சங்கள் செலவில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**தேசிய மானாவாரி நில நீர்வடிமுகடுகள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் காளையார் கோவில் மற்றும் மானாமதுரை வட்டாரங்கள் தவிர பத்து வட்டாரங்களில் 26 நீர்வடி முகடுப் பகுதிகளில் மொத்தம் 13,000 எக்டேர் நிலங்களில் ரூ.585 இலட்சங்கள் செலவில் மேம்பாட்டுப் பணிகள் செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**ஒட்டுமொத்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தில் நடப்பு ஆண்டில் 1,300 எக்டேர் பட்டா தரிசு நிலங்களில் பலவகை மரக்கன்றுகள் நட்டுப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. திருப்பத்தூர் மற்றும் சாக்கோட்டை வட்டாரங்களில் ஒவ்வொரு கிராமத்திலும், 100 எக்டேர் வீதம் 13 கிராமங்களில் நடவுப் பணி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

**ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டம் சிவகங்கை, மானாமதுரை மற்றும் திருப்புவனம் வட்டாரங்களில் 10,678 எக்டேரில் கடந்த 2001–2002ஆம் ஆண்டு முதல் ஆரம்பிக்கப்பட்டு 2005–2006 ஆம் ஆண்டு வரை தரிசு நில மேம்பாட்டுப் பணிகள் செய்யப்படுகிறது. இத்திட்டத்தில் இதுவரை ரூ.90 இலட்சங்கள் செலவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட நில மேம்பாட்டுத் திட்டங்களால் கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 41,118 எக்டேர் பரப்பு மானாவாரி நிலங்கள் ரூ.573.73 இலட்சங்கள் செலவில் மக்கள் பங்கேற்புடன் மேம்படுத்தப் பட்டுள்ளது. நடப்பு 2003 – 2004 ஆம் ஆண்டு முதல் 21,300 எக்டேர் பரப்பில் ரூ. 1கோடியே 90 இலட்சம் செலவில் மானாவாரி மற்றும் தரிசு நிலங்கள் மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் ஜெ. இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., மாவட்டத்திலுள்ள மொத்தம் ஒரு இலட்சம் எக்டேர் தரிசு நிலங்களையும் 2007 ஆம் ஆண்டுக்குள் முழுமையாக மேம்பாடு செய்ய திட்டமிட்டு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்றும் தெரிவித்துள்ளார்கள்.



எனவே, விவசாயத்தில் ஆர்வமுள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத்தை மேம்படுத்த முதலில் நிலங்களை மேம்படுத்த வேண்டும். அதாவது மண்ணின் தன்மை மண்ணில் உள்ள சத்துக்கள் நீர், ஆதாரம் போன்றவற்றை உரிய துறைகளுடன் கலந்து ஆலோசித்து மண்ணின் வளத்தை பெருக்கி விவசாயத்தை பெருக்குமாறு கேட்டுக் கொண்டார். மேலும் கிராமப்புறங்களில் வாழும் விவசாயிகள் பொருளாதார மேம்பாடு அடைய வேண்டுமென்றால் விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டும். சிவகங்கை மாவட்டம் மற்ற மாவட்டங்களை விட விவசாயத்திலும் மேலோங்கி நிற்க விவசாயப் பெருங்குடி மக்கள் ஆதரவு தந்துத் மாவட்டத்தின் முன்னோடித் திட்டங்களுக்கு ஆதரவு தந்து, உதவுமாறு மாவட்ட ஆட்சியர் டாக்டர். ஜெ. இராதாகிருஷ்ணன் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

– ஆ. கோபாலன்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சிவகங்கை

# மலைக்கிராமங்களுக்கு சூரிய ஒளி விளக்குகள்




தருமபுரியில் தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணைந்து நடத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பற்றிய கருத்தரங்கம், தமிழ்நாடு எரிசக்தி மேம்பாடு முகமையின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. கா. அலாவுதீன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் (பொறுப்பு) திரு. பங்கஜ்குமார் பன்சல், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

கருத்தரங்கைத் தொடங்கி வைத்து மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன் அவர்கள் பேசியதாவது :

நிலக்கரி, பெட்ரோல் போன்ற எரிசக்தி வளங்கள் வேகமாகக் குறைந்து வரும் நிலையில் நாளுக்குநாள் அதிகரித்துவரும் நமது எரிசக்தித் தேவையை நிறைவேற்ற நாம் பெட்ரோலையும், நிலக்கரியையும் பயன்படுத்தி வருகிறோம். இவற்றின் பயன்பாட்டை குறைப்பதற்காக அதில் சிக்கனத்தைக் கடைபிடிப்பது மட்டும் போதாது; மாற்று எரிசக்தி வளங்களையும் நாம் பெருமளவில் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துவது அவசியமாகும். இயற்கைச் செல்வங்களான பெட்ரோல் மற்றும் நிலக்கரி போன்ற மரபுசார்ந்த எரிசக்தி ஆதாரங்கள் இன்னும் 50 ஆண்டுகளில் தீர்ந்துவிடும் என வல்லுநர்கள் கணித்துள்ள நிலையில், இந்தியா உட்பட உலக நாடுகள் பலவும் மாற்று எரிசக்தி ஆதாரங்களைக் கண்டறிந்து அவற்றை பயன்படுத்துவதற்கான துரித முயற்சிகளை எடுத்து வருகின்றன.

மாற்று எரிசக்தியும் மரபுசாரா எரிசக்தி வளங்களுமான காற்றுச் சக்தி, சூரிய வெப்ப மற்றும் ஒளிச் சக்தி, தாவர சக்தி, பூமியின் மையப் பகுதியிலுள்ள வெப்ப சக்தி, கடலலைகளின் சக்தி, ஹைடிரஜன் சக்தி ஆகியவற்றைக் கொண்டு நமது எரிசக்தி தேவையை ஓரளவாவது பூர்த்தி செய்து கொள்வதன் மூலம் எரிசக்திப் பற்றாக்குறையை நாம் ஓரளவு தீர்த்துக் கொள்ள முடியும். மாற்று எரிசக்தி வளங்களை பயன்படுத்தத் தவறினால் மரபுசார் எரிசக்தி வளங்கள் பெரிதும் குறைந்து உலகமே செயலிழக்கும் நிலை ஏற்படலாம்; அத்தகைய நிலையை நாம் கற்பனை செய்துகூட பார்க்கமுடியாது. அந்நிலை ஏற்படுவதற்கு முன்னரே நாம் மாற்று எரிசக்தி வளங்களைப் பெருமளவில் பயன்படுத்துவதுடன் தற்போதுள்ள எரிசக்தி வளங்களை சிக்கனமாகவும் பயன்படுத்தத் தொடங்க வேண்டும். மாற்று எரிசக்தி

வளங்களான சூரிய மின்சக்தி மற்றும் வெப்பசக்தி, காற்றுச் சக்தி, உயிரியல் மற்றும் கழிவுப் பொருள்கள் மூலம் கிடைக்கும் சக்திகளையும் அனைவரும் பயன்படுத்துவது அவசியமாகும். இதன்மூலம் நாட்டிற்கும் நமக்கும் பல்வேறு நன்மைகள் ஏற்படும் என்பதில் ஐயமில்லை.

இந்தியாவில் காற்றுச் சக்தி மூலம் 45,000 மெகாவாட் மின் உற்பத்தி செய்யும் திறன் உள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் இதுவரை காற்றுச் சக்தி மூலம் இந்தியாவில் 1,868 மெகாவாட் மின்உற்பத்தி திறன் மட்டுமே உருவாக்கப்பட்டுள்ளது. இதில் தமிழ்நாட்டில் மட்டும் 31.3.2003 வரை 990 மெகாவாட் திறன் உருவாக்கப்பட்டது. இது இந்தியாவின் மொத்த திறனில் 53 சதவீதம் ஆகும். கடந்த 1995–96ம் ஆண்டில் இன்றைய தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது ஒரே ஆண்டில் மட்டும் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டில் 282 மெகாவாட் மின் உற்பத்தித்திறன் நிறுவப்பட்டது. அதற்குப் பிறகு மீண்டும் கடந்த ஆண்டு (2002–03) மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த ஆட்சியில்தான் அதிகபட்சமாக 133 மெகாவாட் கூடுதல் மின்திறன் உருவாக்கப்பட்டது. இந்தச் சாதனையின் மூலம் தமிழ்நாடு, காற்றாலை மின் உற்பத்தியில் தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது.

கடந்த 1991–96 ஆட்சியில் உருவாக்கப்பட்ட காற்றுச் சக்தி மூலம் மின்திறன் அளவு 673 மெகாவாட் ஆகும். ஆனால் கடந்த 1996–2001 ஆட்சியில் கூடுதலாக 140 மெகாவாட் மட்டுமே அதிகரித்தது. மேலும் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டுமே 180 மெகாவாட் திறன் உருவாக்கப்பட்டுள்ளது இந்த அரசின் சாதனைக்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாகும்.

இவ்வாறே தமிழகத்தில்தான் சர்க்கரை ஆலைகளில் கரும்பு சக்கையினைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதில் கடந்த இரண்டாண்டுகளில் 81 மெகாவாட் அதிகரித்துள்ளது. முந்தைய 5 ஆண்டுகளில் மின் உற்பத்தித் திறன் மொத்தம் 74 மெகாவாட் அளவிற்கு மட்டுமே அதிகரித்தது. இதன் மூலம் 31.3.2003 வரை தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தித் திறன் 223 மெகாவாட் ஆக உயர்ந்துள்ளது. இது இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் 46 சதவீதம் ஆகும். இதிலும் தமிழ்நாடு இந்தியாவில் முதன்மை மாநிலமாக இருக்கிறது.

சூரிய ஒளிசக்திச் சாதனங்களை பயன்படுத்துவதிலும் கடந்த இரண்டாண்டுகளில் தமிழகம் சிறப்பாகச் செயல்பட்டுள்ளது. 1996–2001 வரை 5 ஆண்டுகளில் 5,530 சூரிய ஒளி லாந்தர் விளக்குகளும், 70 வீட்டு விளக்குகளும், 222 தெருவிளக்குகள் மட்டுமே அமைக்கப்பட்டன. ஆனால் கடந்த இரண்டாண்டுகளில் மட்டும் (2001–03) 4,500 சூரிய ஒளி லாந்தர் விளக்குகளும், 1,400 வீட்டுவிளக்குகளும், 350 தெருவிளக்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. கடந்த இரண்டாண்டுகளில் வீட்டு விளக்குகள் மற்றும் தெருவிளக்குகள் அதற்கு முந்தைய 5 ஆண்டுகளை விட மிக அதிக அளவில் தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில் 2002–03 ஆண்டுக்கான கொள்கை குறிப்பில் 500 சதுர மீட்டர் மற்றும் அதற்கு மேல் கட்டப்படும் வணிக ரீதியான புதிய கட்டடங்களிலும் 150 சதுர மீட்டருக்கு மேற்பட்ட குடியிருப்பு கட்டடங்களிலும் சூரியசக்தி சுடுநீர் கலன்களை அவசியம் அமைக்க வேண்டுமென ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இந்த அரசு ஆணைகள் சென்னைப் பெருநகர் பகுதிகள், மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கும் பொருந்தும். இதன்மூலம் சூரிய சக்தி சுடுநீர் அமைப்புகளின் பயன்பாடு தமிழ்நாட்டில் பெருமளவில் அதிகரிக்கும். இதனால் மின்சக்தி செலவு குறைந்து அனைவரும் பயன்பெற முடியும். இதனால் தமிழ்நாடு இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாகத் திகழ வாய்ப்பு உள்ளது.

மேலும், மின்வசதி பெறாத 150 தொலைதூரக் குக்கிராமங்களுக்கு ரூ.15 கோடி செலவில் சூரிய சக்தி ஒளி மின்விளக்குகளை அமைத்திட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

ஊராட்சிகளில் மின் கட்டணச் செலவைக் குறைக்கும் வகையில் 1,000 சூரியசக்தி தெருவிளக்குகள் மற்றும் சோதனை முயற்சியாக 25 சூரியசக்தி குடிநீர் பம்புகள் அமைக்கவும் 25 சுகாதார வளாகங்களில் மனிதக் கழிவு எரிவாயுக் கலன்கள் அமைத்துக் கிடைக்கும் வாயு மூலம் பம்புகளை இயக்கி, அந்த வளாகங்களை சுயசார்பு உடையதாக மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது.

தொழிற்சாலைகளில் வெப்பசக்தி மற்றும் மின்சக்தி தேவைகளுக்கு எரிவாயுக் கலன்கள் மூலம் (Gasifier) குறைந்த செலவில் சக்தி பெறவும் அரசு மானிய உதவி அளிக்கிறது. விறகு மற்றும் பிற தாவரக் கழிவுகளைக் கொண்டு மின் உற்பத்தி செய்யும் திட்டங்களுக்கும் தமிழ்நாடு அரசு ஊக்கமளிக்க உள்ளது.

உள்ளாட்சி அமைப்புகள் தெருவிளக்கு, அலுவலக வளாக விளக்கு, தொகுப்பு வீடுகளுக்கான விளக்குகள், சமுதாயக் கூடங்கள் ஆகியவற்றுக்கும் சூரிய ஒளிசக்தி விளக்குகளைப் பயன்படுத்திக் கொண்டால் மின்கட்டணத்தை பெரிதும் குறைத்துக் கொள்ள முடியும். இத்திட்டங்களுக்கு நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும் ஒதுக்கீடு செய்தால் இதன் பயனை ஊராட்சிகள் பெற்றுக் கொள்ள முடியும்.

பள்ளிகளும், கல்லூரிகளும், கூட புதுப்பிக்கத்தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி மின் செலவைக் குறைத்துக் கொள்ளலாம். குறிப்பாக வளாகங்களில் தெருவிளக்குகள், விடுதிகளில் சமையலுக்காக எரிவாயுக் கலன்கள் ஆகியவற்றை அமைத்துக் கொள்ளலாம்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கடந்த 15.8.2003 அன்று சென்னை கோட்டையில் சுதந்திரதின கொடியேற்றி உரையாற்றும்போது :

“தூய்மையானதும், பசுமையானதுமான புதுப்பிக்கத் தக்க எரிசக்தி வளங்களைப் பயன்படுத்துவதை விரிவுபடுத்தவும், ஊக்குவிக்கவும் அதனை மற்றுமொரு மக்கள் இயக்கமாக மாற்றவும் நான் விரும்புகிறேன்'' என்று அறிவித்துள்ளார்கள். அதனைச் செயல்படுத்தும் பொருட்டு இக்கருத்தரங்கினை ஏற்பாடு செய்துள்ளார்கள். இக்கருத்தரங்கில் உள்ளாட்சிகளின் பிரதிநிதிகள், அரசு சாரா அமைப்புகள், அரசு அலுவலர்கள் சிறு மற்றும் குறுந்தொழில் முனைவோர்கள் மற்றும் தொழில் நிறுவனங்களிலிருந்து பிரதிநிதிகள் பங்கேற்றுள்ளனர். கருத்தரங்கில் கூறப்படும் கருத்துக்களைக் கேட்டு நடைமுறைப்படுத்தி, பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாற்று எரிசக்தி வளங்களைப் பயன்படுத்தி தமிழகம் அனைத்து மாநிலங்களைவிட அனைத்துத் துறைகளிலும் முதன்மையானதாக திகழ வேண்டும் என்ற நோக்கத்தில் அனைவரும் முன்வரவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு முகமை செய்துவரும் பணிகளை இச்சமயத்தில் நான் பாராட்டுகிறேன். இக்கருத்தரங்கினை தொடக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என்று மாண்புமிகு செய்தி விளம்பரத் துறை அமைச்சர் கூறினார்.

இக்கருத்தரங்கில், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், ஆணையாளர்கள், பேரூராட்சித் தலைவர்கள், செயல் அலுவலர்கள், அரசு சாரா அமைப்பு பிரதிநிதிகள், தொழில் நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

– தா. மனோகரன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தருமபுரி

❖ ❖ ❖



**14.11.2003 அன்று பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் 115ஆவது பிறந்தநாளையொட்டி சென்னை கத்திப்பாரா சந்திப்பில் உள்ள நேருவின் திருவுருவச் சிலைக்கு மேதகு ஆளுநர் திரு. பெ. ஸ்ரீ. ராமமோகன்ராவ் மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.**

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் குழந்தைகள் தின வாழ்த்துச் செய்தி



முன்னாள் பாரதப் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களின் பிறந்த நாளான நவம்பர் மாதம் 14ஆம் தேதி, குழந்தைகள் தினமாகக் கொண்டாடப்படுகிறது. நாடு முழுவதும் குழந்தைகள் தினம் கொண்டாடப்படும் இந்த நன்னாளில் குழந்தைகள் அனைவருக்கும் எனது இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏடு தூக்கிப் பள்ளியில் இன்று பயிலும் சிறுவர் சிறுமியரே நாடு காக்கும் தலைவராய் நாளை வருவார் என்பது கவிஞர்களின் நம்பிக்கைப் பிரகடனம். ஆனால், ஏடு தூக்கிப் பள்ளிக்கூடம் போகாத குழந்தைகள் இன்னும் இருக்கின்றார்கள். தொழிற்சாலைகளிலும், வணிக நிறுவனங்களிலும், வயல்களிலும் குழந்தைகள் வேலை செய்து வருகின்றார்கள். பள்ளிக்குப் போக வேண்டிய பருவத்தில் வேலைக்குப் போகின்ற இந்தக் குழந்தைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருக்கிறது. எனவே, மனிதாபிமானம் அற்ற, இந்தக் குழந்தைத் தொழிலாளர் முறையை அகற்ற வேண்டியது நமது கடமையாகும்.

எனது தலைமையிலான தமிழக அரசு குழந்தைகளின் வளர்ச்சியில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. தமிழ்நாட்டைச் சிறந்த மாநிலமாக்குவதற்கான என்னுடைய அரசின் 15 அம்சத் திட்டத்தில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்தல் ஒரு முக்கிய அம்சமாக இடம் பெற்றுள்ளது. 12.5.2003 அன்று இதற்கான செயல் திட்டம் ஒன்று என் ஆணையின்பேரில் வெளியிடப்பட்டது. ஆக்கப்பூர்வமான இந்தச் செயல் திட்டத்தின்படி, அபாயகரமான தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை 2005ஆம் ஆண்டிற்குள்ளும், அபாயகரமற்ற தொழில்களில் உள்ள குழந்தைத் தொழிலாளர் முறையை 2007ஆம் ஆண்டிற்குள்ளும் முற்றிலுமாக அகற்றுவதற்காக என்னுடைய அரசு 1.25 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கி ஆணையிட்டுள்ளது.

இந்தச் செயல் திட்டத்தின்படி, குழந்தைத் தொழிலாளர்கள் குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, சட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுத்தல், குழந்தைத் தொழிலாளர்களை மீட்டுப் பள்ளியில் சேர்த்தல், பெற்றோர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் போன்ற பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. 12.6.2003 அன்று மாநிலம் முழுவதும் முதல் முறையாக குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினமாக அனுசரிக்கப்பட்டது. மேலும், குழந்தைகளின் மேம்பாட்டுக்காக மாநில அளவில் முதல் முறையாக, தொழிலாளர் நலத்துறையில் 'மாநிலக் குழந்தைத் தொழிலாளர் மறுவாழ்வு மற்றும் நலச்சங்கம்' ஏற்படுத்தப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர்களது குடும்பங்களுக்கு வறுமை ஒழிப்புத் திட்டங்களில் முன்னுரிமை வழங்கப்பட்டு வருகிறது.

குழந்தைத் தொழிலாளர்களைப் பணியிலிருந்து முற்றிலுமாக விடுவித்து, மறுவாழ்வு அளிக்கவும், தமிழகத்தில் குழந்தைத் தொழிலாளர்களே இல்லை என்ற உன்னத நிலையை அடையவும், இந்த நாளில் உறுதி மேற்கொள்ள வேண்டும் என்று அனைவரையும் கேட்டுக் கொண்டு, குழந்தைகளுக்கு மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்



# விழுப்புரம் மாவட்டத்தில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் செயல்பாடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தை அனைத்துத் துறைகளிலும் இந்திய அளவில் முதல் மாநிலமாக விளங்கச் செய்திட பல நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறார். அதனடிப்படையில் தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முதல் மாநிலமாக விளங்கச் செய்திட புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தொடங்கி அதனை அனைத்து மாவட்டங்களிலும் முனைப்புடன் செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிற்கிணங்க, தமிழகத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களில் ஒவ்வொன்றிலும் ஒரு கோடி ரூபாய் முதலீட்டில் அல்லது குறைந்த அளவு முதலீடு ரூபாய் 25 இலட்சத்தில் நான்கு தொழிற்சாலைகளுக்கு மிகாமல் வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகள் அமைக்க, புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டது.

கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்கள் வேலைவாய்ப்பினைத் தேடி நகர்புறங்களுக்குச் செல்வதைத் தவிர்த்து, அவர்கள் வாழும் பகுதிகளிலேயே தொழிற்சாலைகளைத் தொடங்கி வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்துடனும், அப்பகுதியிலேயே கிடைக்கும் வேளாண்மைப் பொருட்களையே மூலப்பொருட்களாகக் கொண்டு தொழிலகம் அமைக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

விழுப்புரம் மாவட்டத்தில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., அவர்கள் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். அதன்பயனாக ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் 4 புதிய தொழிற்சாலைகள் விழுப்புரம் மாவட்டத்தில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் ரூ.1.04 கோடி மதிப்பீட்டில் நவீன அரிசி ஆலை ஒன்றும், ரிஷிவந்தியம் கிராமத்தில் ரூ.35.80 இலட்சம் மதிப்பீட்டில் பால் குளிரூட்டும் நிலையம் ஒன்றும், மரக்காணம் பகுதியில் ரூ.97.75 இலட்சம் மதிப்பீட்டில் நவீன அரிசி ஆலை ஒன்றும், ரூ.65.33 இலட்சம் மதிப்பீட்டில் மணிலா தோலிலிருந்து செல்லுலோஸ் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஆக மொத்தம் 4 தொழிற்சாலைகள் ரூ.3.02 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

மேற்கண்ட 4 தொழிலகங்களுக்கும் தமிழக அரசு 15 சதவிகிதம் மானியமாக ரூ.22.45 இலட்சம் வழங்க இருக்கிறது. இது தவிர உற்பத்தி தொடங்கப்பெற்ற முதல் 3 ஆண்டுகளுக்கு முறையே 30 சதவிகிதம், 20 சதவிகிதம், மற்றும் 10 சதவிகிதம் மின் மானியமும் வழங்கப்படும். ஜெனரேட்டர் வாங்கி பொருத்தும் நிறுவனங்களுக்கு ஜெனரேட்டர் மதிப்பீட்டில் 15 சதவிகிதம் மானியமும் அளிக்கப்படும். மேலும் பெண்களை 50 சதவிகிதத்திற்கும் அதிகமாக பணிகளில் அமர்த்தும் நிறுவனங்களுக்கு கூடுதலாக 5 சதவிகிதம் மானியம் அளிக்கப்படும்.

உற்பத்தி தொடங்கியுள்ள மேற்கண்ட தொழிற்சாலைகள் மூலம் 120 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்பும், 500 நபர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்பும் அளிக்கப்படுகிறது. தற்போது புதிய அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் சுயஉதவிக் குழுக்களும் கூட பங்கேற்கலாம். பொம்மை தயாரிக்கும் தொழிலுக்கு தற்போது உள்ள ஆர்வம் அதிகரித்துள்ளது. பொம்மைகளுக்கு, இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் இருக்கும் தேவையினை கருத்தில் கொண்டு, சுயஉதவிக் குழுக்கள் இத்தொழிலை ஆரம்பித்தால், புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலேயே, ஏற்கெனவே மேற்குறிப்பிட்ட மானியங்கள் வழங்கப்படும். இயந்திர பொம்மைகள், மின்னணு பொம்மைகள், பஞ்சு அடைக்கப்பட்ட பொம்மைகள், காகித பொம்மைகள் போன்ற அனைத்து வகையான பொம்மைகளையும், இத்திட்டத்தின் கீழ் தயாரிக்கலாம். மேலும் இறால் வளர்ப்பு, நண்டு வளர்த்தல், நன்னீர் இறால் வளர்த்தல், முத்து வளர்த்தல் போன்ற தொழில்களையும் மேற்படி திட்டத்தில் தொடங்கலாம்.

புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 22 ஊராட்சி ஒன்றியங்களில், ரிஷிவந்தியம், மரக்காணம், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், செஞ்சி, மைலம், விக்கிரவாண்டி ஆகிய 7 ஊராட்சி ஒன்றியங்களில் 11 தொழிற்சாலைகளுக்கு இதுவரை அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மேற்குறிப்பிட்டுள்ள நான்கு தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. 3 தொழிற்சாலைகள் பணிகள் முடிக்கப்பட்டு உற்பத்தி தொடங்கும் நிலையில் உள்ளன. மீதமுள்ள 15 ஊராட்சி ஒன்றியங்களான மேல்மலையனூர், வல்லம், ஒலக்கூர், வானூர், காணை, கோலியனூர், கண்டமங்கலம், முகையூர், திருக்கோயிலூர், திருவெண்ணைநல்லூர், சங்கராபுரம், கல்வராயன்மலை, உளுந்தூர்பேட்டை, திருநாவலூர் ஆகியவற்றில் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் பற்றி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டு, புதிய தொழில் முனைவோர் ஆர்வமுடன் மாவட்ட தொழில் மையத்தை தொடர்புகொண்டு வருகிறார்கள். உரிய தொழில் முனைவோர் விரைவில் தேர்வு செய்யப்பட்டு, அப்பகுதிகளிலும் தொழிற் சாலைகள் அமைக்க மாவட்ட ஆட்சித் தலைவர் தீவிர நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்.

புதிதாக வரும் தொழில் முனைவோர், இத்திட்டத்திற்கான நிதி உதவியினை தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மற்றும் அனைத்து வங்கிகளிலும் பெறலாம். மேலும் மத்திய அரசின் கடன் ஈட்டுறுதி நிறுவன நிதி மூலம் ரூபாய் 25 இலட்சம் வரையிலான கடன்களுக்கு சொத்து ஜாமீன் இன்றி தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெறலாம்.

தனிநபர் மட்டுமின்றி பங்குதாரர்கள், வரையறுக்கப்பட்ட நிறுவனங்கள், சுயஉதவிக் குழுக்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் கீழ் தொழில்களைத் தொடங்கலாம்.

தொழிற்சாலைகளே இல்லை என்ற அளவில் இருந்த விழுப்புரம் மாவட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் புதிய அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினால் தொழிற்சாலைகள் நிறைந்த மாவட்டமாக எதிர்காலத்தில் விளங்கும் என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை.

– பா. நாராயணமூர்த்தி
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
விழுப்புரம்.

* * *

# புதுக்கோட்டை மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் தமிழக அரசின் சீர்மிகு திட்டங்கள்

"தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக ஆக்கும் வரை நான் ஓயமாட்டேன், இந்த அரசும் ஓயாது'' என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் சூளுரைக்கு ஏற்றவாறு பல்வேறு திட்டங்களின் மூலம் மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு பல சீர்மிகு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அவ்வாறு தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட அத்தனை சீர்மிகு திட்டங்களும் புதுக்கோட்டை மாவட்டத்தில் மிகச் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டங்களைச் செயல்படுத்துவதில் இலக்குகளை மட்டும் அடைவதை நோக்கமாகக் கொள்ளாமல் திட்டத்தின் முழுப்பயனும் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வதில் மாவட்ட நிர்வாகம் அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

**பாசன வசதிகள்**

1,002 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும் வகையில் நபார்டு திட்டத்தில் ஆளப்பிறந்தான் வெள்ளாற்றில் ரூ.155 இலட்சத்தில் பஞ்சாத்தி அணை, மருதங்குடியாற்றின் குறுக்கே ரூ.33.50 இலட்சத்தில் மருதங்குடி ஆறு அணை, பெரியகோட்டை வள்ளிப்பட்டி வாரியின் குறுக்கே ரூ.29 இலட்சத்தில் அணை ஆகியவை நிறைவேற்றப் பட்டுள்ளன.

சிறப்பு சிறுபாசனத் திட்டத்தில் ரூ.47 இலட்சம் செலவில் 52 எக்டேர் நிலம் பாசன வசதி பெறும் வண்ணம் இராசகிரி அணை கோரையாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.

நபார்டு திட்டத்தில் 270 எக்டேர் பாசன வசதி பெறும் வகையில் மணமேல்குடி வட்டம் கானாடு ஏரி ரூ.38.07 இலட்சத்திலும், கரகத்திக்கோட்டை ஏரி ரூ.45.01 இலட்சத்திலும் நவீனப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 170 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற கம்மங்காடு அணைக்கட்டிலிருந்து ரூ.99 இலட்சம் மதிப்பீட்டில் வாய்க்கால் அமைத்து பூண்டிக்குளம் உள்ளிட்ட 6 குளங்களுக்கு நீர்வரத்து ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**குடிநீர்த் திட்டங்கள்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடந்த ஈராண்டுகளில் 365 தனி மின்விசைத் திட்டங்களும், 585 சிறு மின்விசைத் திட்டங்களும், 52 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு குடிநீர்த் திட்டங்களும், 144 ஆதிதிராவிடர்களுக்கான தனி குடிநீர்த் திட்டங்களும், சிறப்பு அனுமதியின் கீழ் 36 திட்டங்களுக்கும் குடிக்க உகந்ததல்லாத 15 திட்டங்களுக்குப் புதிய திட்டங்களுமாக ரூ.1,836.27 இலட்சத்தில் 1,688 திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

**மின்திட்டங்கள்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலம், ரூ.419.78 இலட்சம் செலவில் வடகாட்டில் 110/22/11 கே.வி. துணை மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆதனக்கோட்டையில் 110/33/22/11 கே.வி. துணை மின்நிலையம், ரூ.633.89 இலட்சம் செலவில் தரம் உயர்த்தும் பணியும், குண்ணாண்டார் கோவிலில் 33/11 கே.வி. துணை மின்நிலையம் ரூ.147.93 இலட்சத்திலும், திருமயம் துணை மின்நிலையம் 110/11 கே.வி. துணை மின்நிலையமாக ரூ.194.19 இலட்சத்தில் தரம் உயர்த்தும் பணியும் நடைபெற்றுள்ளது. இதன் மூலம் வடகாடு, கந்தர்வக் கோட்டை, ஆதனக்கோட்டை, புனல் குளம், குண்ணாண்டார் கோவில் மற்றும் திருமயம் தாலுகாவில் உள்ள பகுதிகளில் சீரான மின்விநியோகம் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது.



## கிராம அலுவலர்களுக்கான அலுவலக கட்டடம்

கிராமப் பகுதிகளில் தங்களது தேவைகளுக்கு கிராம நிர்வாக அலுவலரை தொடர்பு கொள்ள அலுவலகம் இல்லாத நிலையை போக்கும் வண்ணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2001–2002ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இத்திட்டத்தை அறிவித்தார்கள்.

இதன்படி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 109 அலுவலகக் கட்டடங்களும் கிராம நிர்வாக அலுவலர்களுக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் திட்டத்தில் 108 கட்டடங்களுமாக 217 கிராம நிர்வாக அலுவலர் அலுவலகக் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் பல்வேறு திட்டங்களைத் தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

## கதிரடிக்கும் களங்கள்

அறுவடைக் காலங்களில் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளின் குறை தீர்க்க கதிரடிக்கும் களங்கள் கட்டும் திட்டம் அறிமுகப் படுத்தப்பட்டது. 2002–03ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டம் பகுதி 2இல் 283 கதிரடிக்கும் களங்கள் ரூ.169.80 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2003–04ஆம் ஆண்டில் மேலும் 157 கதிரடிக்கும் களங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளது.

## மகளிர் சுயஉதவிக்குழுக் கட்டடங்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் 4,420 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் செயல்பட்டு வருகின்றன. இக்குழுக்கள் கூட்டம் நடத்துவதற்கும் பயிற்சி அளிப்பதற்கும், உற்பத்திப் பொருள்களை இருப்பில் வைத்திடவும் உரிய இட வசதி இல்லை. எனவே 2002–03ஆம் ஆண்டில் சம்பூர்ண கிராம வேலை வாய்ப்புத் திட்டம் பகுதி 1 மற்றும் 2 திட்டத்தின் கீழ் ரூ.187 இலட்சம் மதிப்பீட்டில் 187 பணிகள் எடுக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2003–04ஆம் ஆண்டில் மேலும் 143 சுயஉதவிக் குழுக் கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்பட்டு பணிகள் விரைந்து நடைபெற்று வருகிறது. இந்தக் கட்டடங்கள் சம்மந்தப்பட்ட சுயஉதவிக் குழுக்களால் கட்டப்பட்டு வருகிறது.

## கிராமக் குளங்கள் சீரமைப்பு

ஊரகப் பகுதிகளில் நீர் பற்றாக்குறையைப் போக்கவும் குளங்கள், ஊருணிகளில் நீர்க்கொள்ளளவை அதிகப்படுத்தி மழைநீரை சேமிக்க ஏதுவாக 2002–2003ஆம் ஆண்டில் 405 குளங்கள் மற்றும் ஊருணிகள் ரூ.302.10 இலட்சம் மதிப்பீட்டில் சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத் திட்டத்தில் எடுத்து மேம்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 11ஆவது நிதிக்குழு திட்டத்தின் கீழ் ரூ.112 இலட்சம் செலவில் 105 பாரம்பரிய குடிநீர் ஊருணிகள் மேம்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தொழில்முனைவோர் பயிற்சித் திட்டம்

ஊரகப் பகுதிகளில் வாழும் பெண்களின் பொருளாதாரத் தரத்தை மேம்படுத்தும் பொருட்டு 5 இலட்சம் பெண்களுக்கு தொழில்முனைவோர் பயிற்சி வழங்கும் திட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. 2002–03ஆம் ஆண்டில் 4,000 பெண்களுக்கு மகளிர் திட்டம், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மற்றும் பல்வேறு துறைகளால் தொழில் முனைவோருக்கான பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற அனைவருக்கும் பொருளாதாரக் கடன் உதவி வழங்கி அவர்களது வருமானம், வாழ்க்கைத் தரம் உயரவும் சமூக அந்தஸ்து பெற்றிடவும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## மழைநீர் சேகரிப்பு

மழைநீர்தான் அனைத்து நீர்வளங்களுக்கும் முதன்மையான ஆதாரமாகும். மழைநீர் சேகரிப்பின் அவசியம் குறித்து மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் வேண்டுகோள் கடிதங்கள் அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகளுக்கும் வழங்கப்பட்டு, கருத்தரங்குகள், பயிற்சி முகாம்கள், மனிதச் சங்கிலிகள், பேரணிகள், ஊர்வலங்கள், பள்ளி மாணவர்களிடையே கட்டுரைப் போட்டிகள், பேச்சுப் போட்டிகள் நடத்தி பொது மக்களிடையே நல்ல விழிப்புணர்வு ஏற்படுத்தப் பட்டுள்ளது.

மாவட்டத்தில் மழைநீர் சேரிப்புத் தொடர்பாக பொதுமக்கள் நன்கறிந்துகொள்ளும் வண்ணம் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தில் ‘‘மழைப்பூங்கா’’ அமைக்கப்பட்டு 28–05–2003 அன்று ஊரக வளர்ச்சித் துறை செயலர் அவர்களால் திறந்து வைக்கப் பட்டுள்ளது. மேலும் நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் ஊராட்சி அலுவலகங்களில் சேகரிப்பு தகவல் மையங்கள் 521 அமைக்கப்பட்டுள்ளன.

மேலும் மாவட்டத்தில் 96 சதவிகிதம் அளவிற்கு மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகள் முடிக்கப்பட்டுள்ளன.

## இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்

மாணவியரின் கல்வி மேம்பாட்டினைக் கருத்திற் கொண்டு கிராமப்புறங்களில் இருந்து கல்வி



நிலையங்களுக்கு வந்து கல்வியினை தொடர்ந்து கற்றிட ஏதுவாக சைக்கிள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இம் மாவட்டத்தில் 2001–2002 ஆம் ஆண்டில் 1,278 சைக்கிள்கள் ரூ.17.78 இலட்சம் செலவிலும், 2002–2003 ஆம் ஆண்டில் 996 சைக்கிள்கள் ரூ.14 இலட்சம் செலவிலும் வழங்கப்பட்டு மாணவியர்கள் பயன்பெற்று வருகின்றனர்.

**தொட்டில் குழந்தை திட்டம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழக அரசின் தொட்டில் குழந்தை திட்டம் திருச்சி சாக்கீடு தொண்டு நிறுவனத்தின் உதவியுடன் சமூக நலத்துறையால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதுக்கோட்டை தலைமை மருத்துவமனை உள்ளிட்ட அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் தொட்டில்களுடன் கூடிய வரவேற்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டத்தை பொருத்த மட்டில் 1,000 ஆண்களுக்கு 1,015 பெண்கள் வீதம் உள்ளனர். பிறப்பு விகிதம் 19.5 சதவிகிதம் ஆகவும் உள்ளது.

இம்மாவட்டத்தில் இதுவரை 8 பெண் குழந்தைகளும், 2 ஆண் குழந்தைகளும் இத்திட்டத்தின் மூலம் பெறப்பட்டன. அதில் ஆண் குழந்தைகள் 2ம், பெண் குழந்தைகள் 4ம் ஆக 6 குழந்தைகள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் முன்னிலையில் தகுதிவாய்ந்த தம்பதியினருக்கு தத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

**அன்னதானத் திட்டம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த சீர்மிகு திட்டம் பெரம்பூர் வீரமாகாளியம்மன் திருக்கோயிலிலும், புதுக்கோட்டை அருள்மிகு சாந்தநாத சுவாமி திருக்கோயிலிலும் தினசரி 100 ஏழை எளியவர்களுக்கு இத்திட்டத்தின் மூலம் அன்னதானம் வழங்கப்படுகிறது. இதற்கான நன்கொடையாக சாந்தநாதசுவாமி கோயிலுக்கு ரூ.5,30,102ம் வீரமாகாளியம்மன் கோயிலுக்கு ரூ.3,92,371ம் பெறப்பட்டு அதனைக் கொண்டு இத்திட்டம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

**பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் காற்றுஒலிப்பான்களை அகற்றுதல்**

"தூய்மை புதுகை திட்டம்'' புதுக்கோட்டை நகரில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வார்டு வார்டாக வீடுகள் தோறும் சென்று வீட்டுக் குப்பைகளை சேகரம் செய்து "மக்கும் குப்பை'', "மக்கா குப்பை'' ஆகியவற்றை தரம்வாரியாக பிரித்து ஒழுங்குபடுத்தும் முயற்சி வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது. மாவட்டம் முழுவதிலும் ஒருமுறையே பயன்படுத்தி தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக்கிற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தி பிளாஸ்டிக்கின் பயன்பாடு குறைக்கவும், பிளாஸ்டிக்கிற்கு மாற்றான சுற்றுச்சூழலுக்கு உகந்த காகிதப்பை, துணிப்பை, அரசஇலை, தொன்னை, பாக்குமட்டை, காகித கப்புகள் ஆகியவற்றை மாற்றுப் பொருளாக பயன்படுத்தும் முயற்சியும் சுயஉதவி குழுக்களுக்கு பயிற்சி வழங்கி உற்பத்தி செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

மாவட்டத்தில் உள்ள அனைத்து வாகனங்களும், தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு ஒலிப்பான்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப் பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகத்தின் முனைப்பான நடவடிக்கையைப் பாராட்டி மாவட்ட ஆட்சியருக்கு "பசுமை விருது'' வழங்கி தமிழக அரசு சிறப்பித்துள்ளது.

**மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள்**

இம்மாவட்டத்தில் ஆண்டக்குளம் மற்றும் விராலிமலை ஆகிய கிராமங்களில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் இரண்டும் தலா 30 படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனைகளாக ரூ.40 இலட்சம் செலவில் தரம் உயர்த்தப்பட்டு கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

**மாணவ மாணவியர்கள் விடுதிகள்**

மாணவ / மாணவியர்கள் தங்கிக் கல்வி பயில நல்ல நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்ட தமிழக முதலமைச்சர் ஆணையிட்டதன் பேரில் தலா ரூ.31.50 இலட்சம் செலவில் புதுக்கோட்டை நகரில் 2 விடுதிகளும், ஆவூர் மற்றும் திருக்களம்பூர் ஆகிய இடங்களில் தலா ஒன்றும் ஆக நான்கு விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு விடுதிக்கும் சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியில் இருந்து

ரூ.12 இலட்சமும், ஹட்கோ நிதி ரூ.19.50 இலட்சமும் செலவிடப் பட்டுள்ளது. 2003-04ஆம் ஆண்டிற்கு திருமயம் பொன்னமராவதி மற்றும் மணமேல்குடி ஆகிய இடங்களில் விடுதிகள் கட்ட அரசு ஆணையிட்டுள்ளது.

ஆதிதிராவிட மாணவ - மாணவியர்கள் தங்கிக் கல்வி பயில நல்ல நவீன வசதிகளுடன் கூடிய விடுதிகள் கட்ட அரசு ஆணையிட்டு கந்தர்வக்கோட்டை மற்றும் மணமேல்குடி ஆகிய இடங்களில் தலா ரூ.31.50 இலட்சம் செலவில் இரண்டு தங்கும் விடுதிகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் அறந்தாங்கியில் மாணவியர் விடுதியும், சடையம்பட்டி மற்றும் கறம்பக்குடியில் மாணவர் விடுதிகளும் கட்டப்பட்டு வருகின்றன.

### குடிசைப்பகுதிகளில் கழிவறைகள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மூலம் சுற்றுச்சூழல் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் அடிப்படை வசதிகளும், மற்றும் சுகாதார வசதியை மேம்படுத்த கழிப்பிடங்கள் குடிசைப்பகுதிகளில் குடும்பத்திற்கு ரூ.2,000 வீதம் 625 குடும்பங்களுக்கு ரூ.10.08 இலட்சத்தில் கழிவறை வசதிகளும் நிறைவேற்றப்பட்டுள்ளது.

### வால்மீகி அம்பேத்கர் வீடுகட்டும் திட்டம்

நகராட்சி மற்றும் பேரூராட்சி பகுதி குடிசை வாழ்மக்களுக்காக 15 சதுர மீட்டருக்கு குறையாமல் ரூ.40,000 மதிப்பீட்டில் 78 வீடுகள் ரூ.14.74 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ளன. 2003-04ஆம் ஆண்டிற்கு 100 பயனாளிகள் தேர்வு செய்யப் பட்டுள்ளனர்.

### நெடுஞ்சாலைத்துறை திட்டங்கள்

புதுக்கோட்டை - பூதலூர் சாலை கி.மீ. 18/2ல் அக்னியாற்றில் ரூ.95.00 இலட்சம் செலவில் பாலம் கட்டப்பட்டுள்ளது. ஆலங்குடி - மரமடக்கி சாலை கி.மீ.0/4ல் ரூ.36 இலட்சம் செலவில் பாலம் கட்டப்பட்டுள்ளது. அன்னவாசல் - குளத்தூர் சாலையில் கி.மீ.12/10ல் ரூ.30.70 இலட்சத்திலும், இலுப்பூர்-மாத்தூர் சாலையில் கி.மீ.14/4ல் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் பாலமும் கட்டப்பட்டுள்ளன.



### ஊனமுற்றோர் மறுவாழ்வுத் திட்டம்

ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு அளித்திடும் வகையில் அரசால் திட்டங்கள் பல ஏற்படுத்தப்பட்டு சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மூன்று சக்கர வண்டி, இலவச காதொலிக்கருவி, மடக்கு ஊன்றுகோல், காலிப்பர், கைத்தாங்கிகள், கல்வி உதவித்தொகை, சுயதொழில் செய்ய மானியத்துடன் கூடிய வங்கிக் கடன், கடும் ஊனமுற்றோர் பராமரிப்பு உதவித் தொகை, இலவச பேருந்துச் சலுகை, பிரெய்லி கைக்கடிகாரம், திருமண உதவி,கை / கால்இழந்தோர் நிதி உதவி, காது கேளாதோர் திருமண நிதி உதவி போன்ற நலத்திட்டங்கள் மூலம் ரூ.14,45,324 செலவில் 1,076 உடல் ஊனமுற்றோர் பயன் பெற்றுள்ளனர்.

### மீன்இறக்கு தளம்

இம்மாவட்ட மீனவர்களின் நீண்டகாலக் கோரிக்கையான ஜெகதாப்பட்டினம் கிராமத்தில் மீன் இறக்கு தளம் அமைக்கும் பணி ரூ.132 இலட்சம் செலவில் மத்திய மாநில அரசுகள் நிதியுதவியுடன் நிறைவு பெற்றுள்ளது. 132 மீட்டர் நீளமுடைய இத்தளத்தில் விசைப்படகுகள் மீன் பிடிக்கச் செல்லவும், மீன் பிடித்த பின்னர் இறக்கவும், விற்பனை செய்யவும் வசதிகள் உள்ளன. 400 விசைப்படகுகள் இத்தளத்தில் புயல்காலத்தில் பாதுகாப்பாக நிறுத்த இயலும். டீசல் பங்க் வசதி உள்ளது. மீன்கள் ஏலம் விடவும், வலைகள் உலர்த்தவும் செப்பனிடவும் உரிய இட வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இந்த மீன்பிடி தளம் இப்பகுதி மீனவர்களின் தொழில் முன்னேற்றத்திற்கும், மீனவர்களின் ஒட்டு மொத்தப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் பெரிதும் உதவியாக அமையும்.

திட்டங்களைச் செயல்படுத்துவதில் இலக்குகளை மட்டும் அடைவதை நோக்கமாகக் கொள்ளாமல் திட்டத்தின் முழுப்பயனும் மக்களுக்குச் சென்றடைவதை உறுதி செய்வதில் புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் அக்கறையோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

- துரை. தாமரைச்செல்வம்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
புதுக்கோட்டை.



# திருவாரூர் மாவட்டம் - கடல்நீர் சார்ந்த பண்ணை அமைப்பு முறை செயல்பாட்டில் மகளிர் சுயஉதவிக் குழுக்கள்

தமிழ்நாட்டில் சென்னை உள்ளிட்ட அனைத்து 29 மாவட்டங்களிலும் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் செயல்பாட்டில் 1,41,000 மகளிர் சுயஉதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டு 24,00,000 தாய்மார்கள் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இம்மகளிர் சமூக, பொருளாதார முன்னேற்றம் காண, தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம், தொழில் முனைவோர் பயிற்சி, வாழ்க்கைத் தொழில் கல்விப் பயிற்சி, திறன் பயிற்சி போன்ற பயிற்சிகளைக் கொடுத்து வருகிறது.

தமிழகத்தில் பெரும்பாலும் கிராமப்புற மகளிர் வேளாண்மைத் தொழிலையே சார்ந்து இருக்கிறார்கள். இவ்வாண்டு பருவமழை பொய்த்ததாலும், நிலத்தடி நீர் குறைந்ததாலும் காவிரி, வைகை, பாலாறு, தாமிரபரணி போன்ற நதிகளில் தண்ணீர் வராததாலும் தமிழக விவசாயம் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளது. இந்நிலையில் பலவகைகளில் தமிழக மகளிருக்கு வேலைவாய்ப்பு தருவதற்கு வங்கிகளின் ஒத்துழைப்போடு தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இவற்றில் கடல்நீர் சார்ந்த அமைப்பு முறை ஒரு சிறந்த வரப்பிரசாதம் ஆகும்.

திருவாரூர் மாவட்டம் முத்துப்பேட்டையில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கடல் சார்ந்த நிலப்பரப்பில் விவசாயம் செய்வதற்கு நல்லதொரு திட்டத்தை உருவாக்கி உள்ளது. இதனடிப்படையில், கடலோர கிராமப் பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒருங்கிணைந்த கடல் சார்ந்த பண்ணை அமைப்பு முறைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 27.09.2003 அன்று நடைபெற்றது. மாநில திட்டக்குழு உறுப்பினர் மற்றும் செயலர் திரு. நரேஷ்குப்தா இ.ஆ.ப, அவர்களைத் தலைவராகக் கொண்ட திட்டக் குழுவில் சமூக நலத்துறை செயலாளர் திருமதி சி.கே. கரியாலி இ.ஆ.ப., திருவாரூர் மாவட்ட ஆட்சியர் திரு. பெ இளங்கோ இ.ஆ.ப, மீன்வளத்துறை இயக்குநர் திருமதி. நிர்மலா, இ.ஆ.ப., சுற்றுப்புறச் சூழல் இயக்குநர் திரு. பாலாஜி, எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவன கடல் ஆராய்ச்சி அலுவலர் டாக்டர். செல்வம், ஆராய்ச்சி நிறுவன திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. கருணாகரன், வனப்பாதுகாவலர் திரு. இருளாண்டி, ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். இத்திட்டக்குழு கடல்நீர் சார்ந்த

பண்ணை அமைப்பு முறை செயல்பாட்டை குறித்து ஆலோசனை நடத்தியது.



முத்துப்பேட்டையில் செயல் படும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் கடலோர கிராமப் பொருளாதாரத்தை வளப்படுத்தும் வகையில் "கடல் நீர் சார்ந்த பண்ணை அமைப்பு முறைகள்'' என்ற முன்மாதிரித் திட்டத்தை மக்கள் பங்கேற்புடன் மேற்கொள்ள முடிவெடுத்து திட்டம் தயாரித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் கடலோரக் கிராமங்களின் அருகில் மழைநீர், நன்னீர் சேகரிக்க பெரிய அளவிலான குட்டைகள் அமைத்து நிலத்தடி நீரின் உப்புத் தன்மையை குறைக்க வழி செய்து, குட்டைகளில் அந்த ஊரைச் சேர்ந்த மக்கள் மீன் வளர்த்து மேம்பாடு அடைய லாம்.

மேலும், உப்புத்தன்மையால் பாதிக்கப்பட்டு விவசாயத்திற்குப் பயன்படாத உப்பு தரிசு நிலங்களில் அல்லது உப்பு சதுப்பு நிலங்களில் சதுப்பு நிலக்காடுகளை வளர்க்கவும், இக்காடுகளின் இடைப்பட்ட பகுதியில் உப்புநீரில் விவசாயம் செய்வது உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை மேற்கொண்டு, கடலோர கிராமப் பொருளாதார முன்னேற்றத்தை மேம்படுத்த எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் முன்மாதிரித் திட்டத்தை உருவாக்கியுள்ளது.

இந்தத் திட்டத்தை திருவாரூர் மாவட்டத்தின் கடலோரப் பகுதியான முத்துப்பேட்டைக்கு அருகிலுள்ள தொண்டியக்காடு ஊராட்சியில் செயல்படுத்த முடியும் எனவும் ஆராய்ச்சி நிறுவனம் கண்டறிந்துள்ளது.

இந்த ஆய்வுக்கூட்டம் நடந்த பின்னர் தொண்டியக்காடு பகுதியில் கடல்நீர் சார்ந்த உவர் நிலங்களையும், உப்புத் தண்ணீர் தேங்கி உள்ள குட்டைகளையும் உயர் அதிகாரிகளும், ஆராய்ச்சி நிறுவன அலுவலர்களும் பார்வையிட்டனர். பின்னர் இக்குழுவினர் தொண்டியக்காட்டில் உள்ள அனைத்து மகளிர் குழுக்களையும் கூட்டி இப்பகுதியில் உள்ள பெரிய அளவிலான உப்புநீர்க் குட்டைகளை நன்னீர்க் குட்டைகளாக மாற்றுவது குறித்தும், உவர் படிந்த தரிசு நிலங்களில் சதுப்பு நிலக் காடுகளை வளர்ப்பது குறித்தும் விவாதித்தனர்.



இந்த திட்டத்தை நிறைவேற்றினால் 200க்கும் மேற்பட்ட மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பட வாய்ப்பு உள்ளது. இதுபோன்று தமிழக கடற்கரை ஓரங்களில் உள்ள உவர் படிந்த தரிசு நிலங்களை சதுப்பு நில காடுகளாக மாற்றி நவீன வேளாண்மை செய்வதன் மூலம் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் பயன்பெற வாய்ப்பு உள்ளது.

– திரு. வீ. இராமநாதன்
திட்ட அலுவலர்,
மகளிர் திட்டம்,
திருவாரூர் மாவட்டம்.

❖ ❖ ❖

# உயிரின் மதிப்பு...

ஒரிய மொழிச் சிறுகதை

பிள்ளைப் பருவத்தில் இருந்தே ஜாலியும் அல்பியோனும் நண்பர்கள். எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவை ஒன்றையொன்று பிரிந்து இருப்பதேயில்லை. அல்பியோனின் மூதாதையர் இங்கிலாந்தில் வாழ்ந்த சாம்பல் வண்ண வேட்டை நாய் இனத்தவர். அதனால் அல்பியோன் என்று பெயர். ஜாலி, ஒரிசாவின் காடுகளில் வாழும் மான். அல்பியோன் மாமிச பட்சிணி. ஜாலி சாக பட்சிணி.

ஜாலிக்கு ஒருமுறை உடம்பு சரியில்லாமல் போய்விட்டது. அல்பியோன் இரவும் பகலும் ஜாலியின் அருகிலேயே இருந்தது. அதற்கான உணவைக்கூட அங்கேயேதான் கொண்டு போய்க் கொடுக்க வேண்டி இருந்தது. அல்பியோன், ஒரு தடவை தன் காலை உடைத்துக் கொண்டது. அல்பியோனின், எல்லையற்ற வலிமையை அறிந்திருந்த ஜாலிக்கு அது அத்தனை காலம் நடமாடாமல் இருப்பது ஏனென்றே விளங்கவில்லை. அல்பியோனின் மீது அன்பை மழையெனப் பொழிந்தது ஜாலி. ஜாலியின் கவனிப்பினால் குணம் பெற்றதுபோல உடல்நிலை தேறி, அல்பியோன் மெதுவாக நடக்கத் துவங்கியது.

எண்ணற்ற பூக்குவியல்களைக் கொண்டு வந்தது இளவேனில். இரு நண்பர்களும் தென்றலின் திசையில் வெறி கொண்டதுபோல ஓடின. பொங்கி பிரவகிக்கும் மகிழ்வின் ஊற்றைத் தேடுவது போல, புதிரான உலகைக் காண விழைவதுபோல, ஓடித் திரிந்தன. காலும் உடலும் ஒரே நேர்க்கோட்டில் நீட்டிய நூலைப் போலத் தெரிய அல்பியோன் ஓடியது. ஜாலியின் ஓட்டமோ பாரீஸ் நடனம்தான். தரையின் மேல் மிதப்பது போல் இருந்தன அதன் கால்கள். அந்தத் தோற்றம் காற்றில் நடனமாடுவதுபோல் இருந்தது.

அவை இரண்டையும் ஜமீன்தாருக்கு மிகவும் பிடிக்கும். கடுமையான உழைப்புக்குப் பின், தனது அலுவலகத்துக்கு முன்னால் உள்ள பரந்த புல்வெளிகளில் அவர் காலாற நடக்கும்போது, தங்கள் விளையாட்டுகளினால் அவை அவருக்கு வேடிக்கை காட்டி, ஆனந்தம் ஊட்டும். நடந்து செல்கிற ஜமீன்தாரின் கால்களில் ஜாலி தன் நீண்ட கழுத்தைத் தேய்த்து, அவரது கைகளை நக்கும். அல்பியோன் பின்னால் இருந்து, அவருக்கு முன்பாக ஓடி வந்து, தாழ்ந்து படுத்துப் பணிவாக வாலைக் குழைக்கும். சில சமயங்களில் அவரது இரண்டு கால்களுக்கும் இடையே புகுந்து, அவரது நடையின் வேகத்தைக் குறைக்கும்.

பேராசை மின்னப் பார்க்கிற பிற நாய்கள் வெறித்து நோக்கும்போது, ஜாலி பயந்து, மிரண்டு ஜமீன்தாரின் அருகே சென்று ஒண்டிக் கொள்ளும். அத்தகைய சமயங்களில் தனது இனத்தினரை எதிர்க்க அல்பியோன் முன் வரும். அல்பியோனைக் கண்டதும் அந்த நாய்கள் வாலைச் சுருட்டிக் கொண்டு வெளியேறும். அல்பியோனின் வல்லமையை அவை உணராதவை அல்ல. அல்பியோனும் தன் கௌரவத்தை உயர்வாக மதித்துக் காத்தது. புறங்காட்டி ஓடும் நாயை அது எப்போதும் துரத்தியதில்லை.

ஜமீன்தாரின் அருமை மகள், ஜாலிக்கும் அல்பியோனுக்கும் சிநேகிதி. அவள், தனது நேரத்தில் பெரும் பகுதியை அவற்றுடனே செலவிட்டாள். ஜாலி மெதுவாக நடந்து வந்து, மூக்கை நீட்டியதும் அவள் பறித்து வைத்திருக்கிற மென்மையான புல்கட்டை நீட்டுவாள். சுறுசுறுப்பாக அல்பியோன் ஜாலியைப் பின்தொடர்ந்து வந்து பல வேடிக்கைகள் காட்டித் தங்கள் இளந்தலைவியை சந்தோஷப்படுத்தும்.

சாய்வு நாற்காலியில் அமர்ந்து ஆடியபடியே வராந்தாவில் இருந்து ஜமீன்தார் தன்னுடைய செல்லப் பிராணிகளின் விளையாட்டைக் கண்டு களிப்பார். கவலை நிரம்பிய அவரது மனத்தில் ஆனந்தம் குடிபுகும். அவர், நவீன கருத்துகளும், இனிய சுபாவமும், பழக்க வழக்கங்களும் கொண்டவர். நேரத்துக்குத் தக்கபடி ஆடை அணிந்து கொள்வார் அவர். தூய சுதேசிக் கதராடைகள் அணிந்து தனது மக்களுடன் காட்சி

தருவார். ஐரோப்பியர்களின் முன்னிலையில் அவர்களைப் போலவே ஆடைகளை அணிந்து கொள்வார். அவருடைய எஸ்டேட் காடுகளில் உயர்ந்த ஐரோப்பிய அதிகாரிகள் வேட்டையாட வருவார்கள். அவர்களுக்காக எப்போதும் கதவுகள் திறந்தே இருக்கும். அவர்களுக்காகவே ஒரு சிறந்த விருந்தினர் மாளிகையும் எழுப்பப்பட்டிருந்தது. படித்த, மதிப்பிற்குரிய குடிகளிடமும் அவர் மரியாதை தவறாமலே நடந்து கொண்டார். என்றாலும், அவரைப் பற்றிப் பொதுமக்களிடம் நல்ல அபிப்பிராயம் இல்லை. மதநம்பிக்கையற்றவர் என்று அவரைத் தாழ்த்தியே பேசினார்கள். பழம் பாரம்பரியத்தைப் போற்றுகிறவர்கள், அவரைப் பொறுப்பற்றவர் என்றும் குற்றம் சாட்டினார்கள். ஐரோப்பியர்களுடன் அவர் கொண்டிருந்த தொடர்பும், அவர்களது பழக்கவழக்கங்கள் சிலவற்றை அவர் கடைப்பிடித்து வந்தமையும், அவருடைய நற்பண்புகள் பலவற்றை இந்நாட்டவரின் பார்வையில் இருந்து மறைந்தேவிட்டன. அவருடைய உணவு உடை எல்லாம் ஐரோப்பியமயமாகவே இருந்தது. மக்கள் எண்ணியபடி இவ்விஷயத்தில் அவர் மிதமாகவே இருக்கத் தவறிவிட்டார்.

அவருடைய பழைய நண்பரான போலீஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஒருவர், கிறிஸ்துமசுக்குப் பிறகு தம் மனைவி குழந்தைகளுடன் வேட்டைக்கு வருவதாகத் தகவல் சொல்லி அனுப்பியிருந்தார்.

அவரது வருகைக்கு நான்கு நாட்களுக்கு முன்பே விருந்தினர் மாளிகை தயார் நிலையில் வைக்கப்பட்டது. காட்டில் கூடாரங்கள் அமைக்கப்பட்டன. தேவைப்பட்ட பொருட்களை வாங்க ஆட்கள் கட்டாக்கிற்கு அனுப்பப் பட்டனர். வேலைக்காரர்களுக்கும் அதிகாரிகளுக்கும் கொஞ்சநேரம் கூட ஓய்வில்லை. ஜமீன்தாரை அனைவரும் திட்டித் தீர்த்தார்கள். அவர் பார்வையில் படாத வேளைகளில்தான்.

சிறப்புமிக்க விருந்தாளிகளை எதிர்கொண்டு அழைத்து வந்தார் ஜமீன்தார். வந்தவர்களுடன் ஆனந்தமாய்ப் பொழுதைப் போக்கினார். நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டன. இரவை விருந்தினர் மாளிகையில் கழித்துவிட்டு, மறுநாள் காலை சிற்றுண்டிக்குப் பிறகு காட்டுக்குப் புறப்படுவது என்று முடிவாயிற்று.

வேட்டையாடும் இடம் ஜமீன்தாரின் வீட்டில் இருந்து பதினான்கு கல் தூரத்தில் இருந்தது. அக்கம்பக்கத்தில் மனித நடமாட்டமே அற்றது. ஏவலாளர்களும் வேலைக்காரர்களும் உணவுப் பொருள்களையும் மற்றவைகளையும் எடுத்துக் கொண்டு முன்னாலேயே சென்றுவிட்டார்கள். விருந்தாளிகள், ஜமீன்தார், டி.ஐ.ஜியின் இரண்டு வேட்டை நாய்கள், ஜமீன்தாரின் செல்லப் பிராணிகளான ஜாலியும் அல்பியோனும் அவர்களைக் காரில் தொடர்ந்தன. ஜாலியை அழைத்துப் போக வேண்டிய அவசியமே இல்லை. அல்பியோன், இந்த மாதிரி வேட்டைக்கு மிகவும் உபயோகமாக இருக்கும். அல்பியோனைச் சந்தோஷமாக வைத்துக் கொள்ளவே ஜாலியும் அழைத்துச் செல்லப்பட்டது. இல்லாவிட்டால், ஜாலியைத் தேடிக்கொண்டு கிடைத்த முதல் சந்தர்ப்பத்திலேயே அல்பியோன் ஓடி வந்துவிடும். அவைகளை அழைத்துச் செல்வதற்காகச் சின்னம்மாவின் உத்தரவையும் வாங்கியாகிவிட்டது. அவள் தன்னுடைய விளையாட்டுத் தோழர்களை மூன்று தினங்களுக்கு மேல் தங்க வைத்துக்கொண்டு விடக்கூடாது என்று திட்டவட்டமாகச் சொல்லி அனுப்பி இருந்தாள்.

உல்லாசமும் சந்தோஷமுகமாகக் கிறிஸ்துமசை ஒட்டிய ஐந்து நாட்களும் வேகமாய்க் கழிந்தன. அந்தத் தனித்த காட்டில் அவர்கள் இனிமையாக உபசரிக்கப் பட்டார்கள். பரபரப்பான நகர வாழ்க்கைக்குப் பிறகு அந்தத் தனிமை இனிமையாகவே இருந்தது. ஐந்தாம் நாள் பகல் உணவை முடித்துக் கொண்டு ஜமீன்தாரும் டி.ஐ.ஜியும் வேட்டைக்குப் புறப்பட்டார்கள். கடைசி நான்கு நாட்களும், மாலை வேளைகளில் பெண்களின் பொழுது போக்குக்காக நடனங்களும், இசையும் ஏற்பாடு செய்யப் பட்டன. ஆண்களோடு செல்ல இயலாமல் அவர்கள் களைத்துப் போய்விட்டார்கள். வேலைக்காரர்களும் களைத்துத்தான் போனார்கள். ஆயினும், அவர்களில் இரண்டு மூன்று பேர் வேட்டையாடுவோர் கூடப் போகவேண்டியது அவசியமாயிற்று.

ஓரிரு முறைகள் குறி தவறியது. பயந்துபோன பறவைகள் வெகு தொலைவு பறந்து சென்றுவிட்டன. அவை மீண்டும் வருவதற்காக அவர்கள் காத்திருக்க நேர்ந்தது. வேட்டைக்காரர்கள் அருகே இருந்த காட்டுக்குள் நுழைந்தார்கள். கொஞ்ச நேரம் அலைந்து திரிந்தார்கள். ஒரு பலனும் இல்லை. விலங்குகளைத் தேட வேலைக்காரர்கள் அனுப்பப்பட்டார்கள். எவராலும் எதையும் சொல்ல முடியவில்லை. இருப்பினும் வம்பளந்து கொண்டும், சுருட்டுப் பிடித்துக் கொண்டும், புகையிலை மென்றுக்கொண்டும் உட்கார்ந்து விட்டார்கள். செல்லப் பிராணிகளான இரண்டு நண்பர்கள் மட்டும் மெதுவாக, பதுங்கிப் பதுங்கி ஒவ்வொரு புதராகப் பார்த்துக் கொண்டே சென்றன. எவரும் அறியாதபடி அவை குழுவினரை விட்டு விலகிச் சுமார் நாலு கல் தொலைவு சென்றுவிட்டன.

நாள், முடிவை நெருங்கிக் கொண்டிருந்தது. பக்கத்தில் இருந்த குன்றின் பின்னால் கதிரவன் மறைந்து கொண்டான். அவனது செந்நிறக் கதிர்கள் மேலைவானத்தில் பரவிக் கிடந்தன. அவற்றை வேட்டைக் காரர்கள் கவனிக்கவில்லை. அவர்களோ அந்திமாலை பேராசையுடன் உயிருள்ள ஏதாவது பிராணியின் மாமிசத்தைத் தேடிக்கொண்டிருந்தார்கள். பெரிய கருமேகம் ஒன்று கீழ்த் திசை தொடுவானத்தருகே படர்ந்தது. தரையின் மீது பார்வை பதித்திருந்த வேட்டைக்காரர்களுக்கு என்ன கவலை? வரவிருக்கிற அபாயத்தை உணர்ந்த வேலைக்காரர்கள், தங்கள் தலைவர்களைத் தேட ஆரம்பித்தார்கள். அந்த அடர்ந்த காட்டில் பகல் வெளிச்சத்தில் கூட அவர்களைக் கண்டுபிடிப்பது கடினமாக இருந்திருக்கும்.

இரண்டு நண்பர்களும் இருளில் மூழ்கிவிட்டன. மழைக்கு முன்னதாக வீசிய காற்று குளிராகத் துவங்கியதும் அதைப் புறக்கணிக்க முடியாது அவை திரும்பின. மேகங்கள் கருத்து அடர்ந்தன. மழை ஆரம்பிப்பதற்கு முன்னால் நான்கு கல் தொலைவைக் கடந்து கூடாரத்தை அடைவதென்பது இயலாதது. தோளில் துப்பாக்கிகளைச் சுமந்தபடி வேக வேகமாய் ஓடத் தொடங்கினார்கள் பலர். பயந்து ஓடும் மானைத் துரத்திக் கொண்டு ஓடுகிற வேட்டைக்காரனின் ஆனந்தம் அந்த ஓட்டத்தில் இல்லை. கடுங்கோபத்துடன் அவர்களைச் சாடியது புயல். எங்கும் இருள் சூழ்ந்தது. காட்டுக்குள் காற்றின் சப்தம் அமானுஷ்யமாய்க் கேட்டது. சிரமத்துடனும் ஜாக்கிரதையாகவும் அவர்கள் தங்கள் பாதையைத் தேடிக் கண்டுபிடித்து நடந்தார்கள். மிகவும் களைத்துப் போனார்கள். மூச்சு இரைத்தது. ஒரு வழியாக அவர்கள் கூடாரத்தை அடைந்தபோது மணி இரவு எட்டாகியிருந்தது.

இரவு உணவுக்கு எந்த ஏற்பாடும் செய்யப்படவில்லை. வேட்டையில் ஏதாவது கிடைக்கும், அதைச் சமைத்துவிடலாம் என்றே அவர்கள் எண்ணிக் கொண்டிருந்தார்கள். துரதிருஷ்டவசமாக ஒரு பறவை கூட அகப்படவில்லை. மறுநாள் காலை அங்கிருந்து புறப்பட்டுவிடுவதாக முடிவு செய்யப்பட்டிருந்தது. ஜமீன்தாருடைய வீடு, அங்கிருந்து பதினான்கு கல்தொலைவில் இருந்தது. இந்தக் கடுமையான புயலிலும், மழையிலும் அவ்வளவு தூரத்தில் இருந்து சாப்பாடு கொண்டுவருவது சாத்தியமா? கார் செல்லும் பாதையை மழை அணுக இயலாதபடி செய்து விட்டிருக்கும். ஜமீன்தாருக்கும், டி.ஐ.ஜி. ஐயாவுக்கும் தேவையான உணவு வகைகளை ஏற்பாடு செய்ய ஏதுவான இடம் எதுவும் அருகே இல்லை. என்ன செய்வதென்று அறியாமல் எல்லாரும் கவலையில் ஆழ்ந்து போய்விட்டார்கள். வேட்டைக்குப் புறப்படுவதற்கு முன்பே இறைச்சிக்காக ஏதாவது ஏற்பாடு செய்யத் துவங்கினார் ஜமீன்தார். டி.ஐ.ஜி. ஐயாதான் அதைத் தடுத்தார். வேட்டையில் ஏதாவது கிடைக்காமல் போய்விடாது என்று உறுதியாகச் சொன்னார். இப்போது என்ன செய்வது? ஒரு குற்றமும் புரியாத பரிதாபத்துக்குரிய வேலைக்காரர்களின் மீது தம் கோபத்தைத் திருப்பினார் ஜமீன்தார்.

டி.ஐ.ஜி. ஐயாவின் முகம் பிரகாசம் அடைந்தது. ''ராத்திரி சாப்பாட்டுக்கு நான் ஒரு திட்டம் சொல்றேன்'' அவர் தாமாக முன்வந்து சொன்னார்.



வலுக்கட்டாயமாக வரவழைத்துக் கொண்ட புன்னகையுடன், ''என்ன அது'' என்றார் ஜமீன்தார்.

''உங்களுக்குச் சம்மதமா? நல்ல விருந்தும் கிடைக்கும். எளிதாக விருந்தாகிற பிராணிக்குப் பதிலாக வேறொன்று சீக்கிரத்திலேயே உங்களுக்குக் கிடைத்துவிடும். என்ன சொல்கிறீர்கள்? உங்களுக்கு என்னுடைய திட்டம் பிடித்திருக்கிறதா? என்றார் டி.ஐ.ஜி.

அவர் என்ன சொல்கிறார் என்பது முதலில் ஜமீன்தாருக்கு விளங்கவில்லை. அவர் பேசியதைக் கேட்டதும் நடுங்கிவிட்டார் ஜமீன்தார். அவசரமாக அதை மறைத்துக்கொண்டு, ''ஆஹா! அதுக்கென்ன? நல்ல திட்டம்'' என்றார். மதிப்புக்குரிய நண்பரும் விருந்தாளியுமான டி.ஐ.ஜி.யின் பேச்சை மறுக்க அவரால் முடியவில்லை. ஜாலியின் பெயர் காதில் விழுந்ததும் அவருடைய நெஞ்சம் துடித்தது.

ஜாலியின் கதை பரிதாபமானது. அதனால்தான் ஜமீன்தார் ஜாலியிடம் அவ்வளவு பற்று வைத்திருந்தார். ஓர் ஐரோப்பிய நண்பரின் முன்னால் தனது குறிபார்த்துச் சுடும் திறனைக் காட்ட முனைந்த ஒரு தருணத்தில்தான் அவர் ஜாலியை முதல் முதலாகக் கண்டார். அது அப்போது தாயிடம் பால் குடித்துக் கொண்டிருந்தது. தாய் ஜமீன்தாரின் கால்களில் துடிதுடித்து விழுந்தது. அநாதையாகிவிட்ட குட்டிமான் ஆதரவற்ற ஊமையாய் நின்றது. ஜமீன்தாருடைய ஆட்கள் நெருங்கியபோது கூட அது அசையவில்லை. தாய் தன் பக்கத்திலேயே இருக்கிறதே என்ற தைரியம். கள்ளமில்லா அதன் பார்வை ஜமீன்தாரின் நெஞ்சைத் தொட்டது. அவர், அதன் மீது பற்றுக் கொண்டார். தம்முடைய உணவுக்காக அதைக் கொல்ல வேண்டிவரும் என்று ஒரு நாளும் அவர் நினைத்ததில்லை. ஆனால் அவ்வளவு சிறந்த விருந்தாளியையா மறுத்துப் பேசுவது?

ஜமீன்தார் சம்மதித்துவிட்டதை எண்ணி விருந்தாளி மகிழ்ந்தார். அதிலும் தாமே அந்த மானைக் கொல்லக் கிடைத்த வாய்ப்பை எண்ணி எல்லையற்ற ஆனந்தம் கொண்டார். அவர் ரத்த தாகம் கொண்டவர் என்று புகழ் பெற்றவர். அந்தக் குணத்தினால்தான் சென்ற உலகப்போரில் பரிசு வேறு கிடைத்திருந்தது அவருக்கு. வேட்டைக்குப் போகமுடியாத சந்தர்ப்பங்களில் தம் மனத்தை அமைதியடையச் செய்யக் கோழிகளையாவது அவர் கொல்வது வழக்கம். கணவரின் இந்தக் குணத்தைப் பற்றி அவரது மனைவிக்கு உள்ளூறப் பெருமை. கொல்வதற்கு எதுவும் இல்லை என்று ஒரு தடவை அவர் தம்முடைய கழுத்தையே அறுத்துக்கொள்ளப் போய்விட்டதாக அவள் அவரைக் கேலி செய்வது வழக்கம்.

அல்பியோனும், ஜாலியும் முகத்தோடு முகம் வைத்துப் படுத்துக் கொண்டிருந்தன. அந்நியர் எவரும் ஜாலியை அணுகி விடமுடியாது. அதுவும் அல்பியோன் பக்கத்தில் இருக்கும்போது முடியவே முடியாது. மாதியா என்ற வேலைக்காரன் மட்டுந்தான் நெருங்கமுடியும். ஜமீன்தாரின் கட்டளைப்படி அவன் ஜாலியைப் பிடித்துப் போக வந்திருந்தான். அவனுடைய காலடிச் சத்தத்தைக் கேட்டு எழுந்து குரைத்தது அல்பியோன். மாதியா குரல் கொடுத்துக்கொண்டே நெருங்கினான். ஆயினும், ஜாலி இழுத்துச் செல்லப்பட்டதைப் பார்த்துக்கொண்டு அல்பியோனால் அமைதியாக இருக்க முடியவில்லை. ஆத்திரம் கொண்டது அல்பியோன். ஜாலியைத் தொடர்ந்து செல்ல விரும்பியது. சங்கிலியில் கட்டி அல்பியோனையும் உடன் அழைத்துப் போனான் மாதியா.

அல்பியோன் அறிவாளிதான். அதில் சந்தேகமில்லை. ஆனாலும் அந்த நேரத்தில் மாதியா, ஜாலியை ஏன் அப்படி வலுக்கட்டாயமாக இழுத்துப் போகிறான் என்பதை அதனால் புரிந்துகொள்ள முடியவில்லை. அல்பியோனைப் பிடித்துக் கொண்டு, ஜாலியை மட்டும் சமையற்காரர்களிடம் ஒப்படைத்தான் மாதியா. இது அல்பியோனின் சந்தேகத்தை மேலும் வளர்த்தது. அங்கிருந்து ஓர் அங்குலமும் நகர மறுத்தது அது. டி.ஐ.ஜி. மிருக வெறியுடன் தயாரானார். அவரது கையில் இருந்த கத்தி விளக்கின் ஒளியில் மின்னியது. துப்பாக்கிக் குண்டைப் பாழ் செய்யாமல் பிராணிகளை உயிரோடு கத்தியால் வெட்டிக்கொல்வதே அவருக்குப் பிடிக்கும்.

சமையற்காரர்கள் ஜாலியின் கால்களைக் கட்டிப் போட்டார்கள். தப்பித்து ஓட முடியாதபடி இறுக்கி பிடித்துக் கொண்டார்கள். ஜாலிக்குப் பயமா என்ன? அது அமைதியாகவே நின்றது. அதன் பாதுகாவலரும் அன்புக்குரிய முதலாளியுமான ஜமீன்தார்தான் அருகிலேயே இருக்கிறாரே! ஆபத்துக்கு உதவும் அன்புத் தோழன் அல்பியோனும் பக்கத்தில்தானே இருக்கிறது? கால்கள் கட்டப்பட்டதும் அது தன் நம்பிக்கைக்குரிய முதலாளியையும் தோழனையும் ஏறிட்டுப் பார்த்தது. ஜமீன்தார் தமது நண்பரின் மனைவியுடனும், மகள்களோடும் வம்புப் பேச்சில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள விரும்பியவராய் எதையோ பேசிக் கொண்டிருந்தார். ஏதோ ஓர் உணர்வு அவரை ஜாலியின் பார்வையை நேர்கொள்ள இயலாதபடி செய்தது. பேசிக்கொண்டும், சிரித்துக்கொண்டும் ஜாலியின் நிலைபற்றிக் கவலைப்படாததைப் போலக் காட்டிக்கொள்ள முயற்சி செய்தார் அவர். ஆனால் ஜாலியின் கண்களைக் கண நேரம் கண்டாலும், அது அவருடைய நெஞ்சில் ஆழத்தில் புதைந்திருந்த ரகசியத்தை வெளிப்படுத்திவிடும் என்றும், மனிதரைப்

போலக் குரலெடுத்து அவரைக் குற்றம் சாட்டிவிடும் என்றும் அவர் அஞ்சினார்.

டி.ஐ.ஜியின் கையில் இருந்த கத்தியைக் கண்டதும் அல்பியோனின் சந்தேகம் வலுத்தது. கத்தியைச் சுத்தம் செய்து கொண்டு தன் இருக்கையை விட்டு அவர் எழுந்தார். எதிர்பாராமல் ஜாலியின் பார்வையை ஜமீன்தாரின் பார்வை சந்தித்தது. அது உயிர்பிச்சை கேட்டு மன்றாடிக் கொண்டிருந்தது. நெஞ்சை உருக்குகிற பரிதாபம் சொட்டுகிற, கெஞ்சுகிற பார்வை! ஏதோ ஒரு காரணம் கூறிவிட்டுக் கூடாரத்திற்குள் சென்று மறைந்தார் ஜமீன்தார். ஜாலியின் கெஞ்சல் அல்பியோனுக்குப் புரிந்தது. ஏமாற்றமடைந்த பார்வையை ஜாலி தன் முதலாளியிடமிருந்து தன் ஆருயிர் நண்பனின் மீது திருப்பியது. அந்தப் பார்வை அல்பியோனைக் கலக்கியது. கத்தியை எடுத்துக்கொண்டு, ஜாலியை நோக்கி முன்னேறிய டி.ஐ.ஜியின் எண்ணம் என்னவென்று மின்னல்வெட்டுப் போல அல்பியோனுக்கு விளங்கியது. அதே இடத்தில் எத்தனையோ ஆடுகளும், மான்களும் பலியானதை அது பலமுறை கண்டிருந்தது. இப்போது அதன் அருமைத் தோழனுக்கும் அதே கதி நேர்வதா? கண்ணிமைக்கும் நேரத்திற்குள் சங்கிலியில் இருந்து அறுத்துக்கொண்டது அல்பியோன். மாதியாவின் பிடியில் இருந்து தப்பிச் சமையற்காரன் ஒருவனைத் தாக்கியது. டி.ஐ.ஜியும் பிறரும் கூடாரத்தை நோக்கி ஓடினர். நினைவிழந்தவர்போலக் கூடாரத்தினுள்ளே உட்கார்ந்தார் ஜமீன்தார். தனது விருந்தாளிகளிடம் அவசரம் அவசரமாக மன்னிப்புக் கேட்டார். மாதியாவைக் கன்னா பின்னாவென்று திட்டத் துவங்கினார். அவருடைய வார்த்தைகள் கோபத்தை விட அவரது மனக்குழப்பத்தையே தெளிவாகக் காட்டின.

அல்பியோனால் காயப்படுத்தப்பட்ட மாதியா அதை ஒரு மரத்தில் இறுக்கமாகக் கட்டினான். மீண்டும் டி.ஐ.ஜி. புன்னகையுடன், கையில் கத்தியை எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். பரிதாபமாய் நின்ற அல்பியோனைக் கிண்டல் செய்வது போலக் கத்தியை அதன் முன் காட்டினார். ஜாலியை நெருங்கினார். ஜமீன்தாரின் பார்வை மீண்டும்ஒருமுறை ஜாலியின் பார்வையைச் சந்தித்தது. அதே பார்வை. கெஞ்சி மன்றாடுகிற பார்வை. இருக்கையை விட்டு எழுந்தார். விருந்தாளிகளிடம் எதையோ சொல்ல நினைத்தார்.

தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு மறுபடியும் உட்கார்ந்தார். "அய்யோ! எனக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது?" தமக்குத்தாமே சொல்லிக் கொண்டார். அங்கிருந்து எழுந்து ஓடிவிடலாம்போல இருந்தது அவருக்கு. அப்படி எதையாவது செய்தால் டி.ஐ.ஜி. அதைத் தவறாக எடுத்துக் கொள்ளக்கூடும் என்று நினைத்து, அங்கேயே எப்போதும்போல அமைதியாக உட்கார்ந்திருந்தார். கண் எதிரே தெரிகிற காட்சியை மறைப்பதற்காக ஒரு கைக்குட்டையால் கண்களை மூடிக் கொண்டார்.

இதயத்தைப் பிளப்பதுபோன்ற அல்பியோனின் குரல் அவரது காதுகளைப் புண்ணாக்கியது. அந்தச்



சத்தத்துக்கு இடையே கண்ணீர் ததும்பும் மற்றொரு குரல் கேட்டது. அது அவர் இதயத்தைத் துளைத்தது. அது ஜாலியின் குரல்! முகத்தில் இருந்து கைக்குட்டையை எடுத்தார். எல்லாம் முடிந்து விட்டிருந்தது.

ஜாலியின் மாமிசத்தை உண்ணக்கூடாதென்று அவருக்குத் தோன்றியது. பெருத்த மனப் போராட்டத்துக்கு அப்புறமே அவரால் அன்றைய விருந்திலும், களியாட்டங்களிலும் கலந்து கொள்ள முடிந்தது. அளவற்ற துன்பத்துடன் கொஞ்சம் உண்டார். சிந்தனையில் ஆழ்ந்தவராய்ப் படுக்கையறைக்குள் நுழைந்தார். உறக்கமே வரவில்லை. ஒரு காட்டில் இருந்து இன்னொரு காட்டுக்குள் நுழைந்து வழி தெரியாது திண்டாடுவதுபோலவும், அந்தப் பகல் குண்டடிப்பட்ட தாய் மான் துள்ளித் துடித்து விழுவதும், பயமறியாத மான்குட்டி அசைவற்று நின்றதும் அவரது கண்களுக்கு காட்சிகளாய்த் தெரிந்தன. மீண்டும் கும்மிருட்டு தோளில் துப்பாக்கிகளைச் சுமந்தபடி நடக்கும் நண்பர்கள், டி.ஐ.ஜியின் அரக்கத்தனமான சிரிப்பு.

கையில் கத்தி, உயிர்ப்பிச்சை கேட்டு மன்றாடும் ஜாலியின் பார்வை!

விடியற்காலையில் அவர்கள் வீடு வந்து சேர்ந்தார்கள். விருந்தாளிகள் மகிழ்ச்சியுடன் விடைபெற்றுப் போனார்கள். மூச்சிரைக்க ஓடி வந்தான் மாதியா, அந்த இடத்தை விட்டு நகர மறுக்கிறது அல்பியோன் என்று சொல்லிக்கொண்டு, அதைப் பிடித்து இழுத்தபடியே வந்தான். கவலையில் ஆழ்ந்து போனவராய் அமைதியாய் அமர்ந்திருந்தார் ஜமீன்தார். மறுவார்த்தை பேசாமல் அந்த இடத்தை விட்டுப் போனான் மாதியா.

தான் செய்த செயலை எண்ணி எண்ணி வருந்தினார் ஜமீன்தார். தம் மனத்தைத் தாமே கட்டுப்படுத்திக் கொண்டுதான் அவர் அவ்வளவு நேரம் அமர்ந்திருந்தார். இல்லாவிட்டால் வெறி கொண்டவன்போலவே நடந்து கொண்டிருப்பார். அந்த நாயின் கால்களில் விழுந்து மன்னிப்புக் கோரவேண்டும் போல இருந்தது அவருக்கு. அல்பியோனைவிடத் தாம் கீழானவர் என்று தோன்றியது. ''அய்யோ! நான் எவ்வளவு மோசமான கொலை பாதகன்! என் நெஞ்சம் எவ்வளவு கொடியது! எவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்து விட்டேன்! விலங்கைவிடக் கீழானவன் நான்! வெறுக்கத் தக்கவன்! அய்யோ! அய்யோ! வலிமையுடையோர் எளியோரை அடிமை கொள்வது சரிதானா? தங்களுடைய நல்வாழ்வுக்காக எளியோரை அழிப்பது முறைதானா? ஒருவர் வாழ இன்னொருவர் கொல்லப்பட வேண்டுமா?''

''ஜாலி எங்கேப்பா?'' பின்னால் இருந்து ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தார். அவருடைய நான்கு வயது மகள் வந்து கொண்டிருந்தாள். அவளுடைய கேள்விக்குத் தக்க பதில் தர அவரால் முடியவில்லை. அவளை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டார். கெஞ்சும் குரலில், ''இருக்குது. கண்ணே! இருக்குது!'' என்றார். குழந்தை அதை நம்புவதாய் இல்லை. காது கொடுத்துக் கேட்பதாயும் இல்லை. முகத்தைத் தூக்கி வைத்துக்கொண்டது. உதட்டைப் பிதுக்கியது. ''பொய் சொல்றீங்க! அந்த ஐயா அதைக் கொன்னுட்டாருன்னு மாதியா சொல்றானே! அந்த ஐயாவை நான் கொல்லாம விடப்போறதில்லை'' என்றது.

அந்தச் சின்னக் குழந்தையின் கோபத்தையும் துயரத்தையும் கண்ட ஜமீன்தாரால் தம் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை. அவரது கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. படுக்கையில் விழுந்து அழுது துடித்தார்.

''ஜாலி எங்கேப்பா? எங்கே ஜாலி'' என்ற கேள்வி எண்ணற்ற முறைகள் அவர் மனத்தில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவர் தம்மைத் தாமே அந்தக் கேள்வியை பலமுறை கேட்டுக் கொண்டார். அவர் உட்கொண்ட ஜாலியின் மாமிசம் அவருக்குள்ளிருந்து அலறியது. அந்த அலறல் ஒவ்வொரு மயிர்க்காலிலும் வெடித்துக் கிளம்பியது. அவர் கடுமையாக நோய்வாய்ப்பட்டார். இரண்டு வாரங்கள், தொடர்ந்து கடுமையான காய்ச்சல். அவரது நிலை மிகவும் மோசமானது. எப்படியோ உயிர் பிழைத்தார். மறு ஜென்மம் எடுத்தது போலத்தான்.

ஐரோப்பியர்களுக்காகக் கட்டப்பட்ட விருந்தினர் மாளிகை நோயாளிகளுக்கும் அநாதைகளுக்கும் அடைக்கலம் தரும் இடமாக மாற்றப்பட்டது. புலால் உணவு அறவே ஒழிக்கப்பட்டது. ஜமீன்தார் தமது எஸ்டேட் எல்லைக்குட்பட்ட பிரதேசம் முழுவதிலும் மான்களை எவரும் வேட்டையாடவோ, கொல்லவோ கூடாதென்ற தடை உத்தரவு பிறப்பித்தார். அல்பியோன் உணவைத் தொட்டுக் கூடப் பார்க்கவில்லை. நாளெல்லாம் பட்டினி கிடந்தது. ஜமீன்தாருக்கு உடல் நலம் இல்லாமல் இருந்தபோது தப்பித்து ஓடிவிட்டது. மாதியா அதைத் தேடிக்கொண்டு போனான். ஜாலி கொல்லப்பட்ட இடத்தை முகர்ந்து பார்த்தபடி அது நின்று கொண்டிருந்தது. அங்கேதான் அது தன் ஆருயிர்த் தோழனை இழந்தது. மீண்டும் அல்பியோன் ஜமீன் மாளிகைக்குக் கொண்டு வரப்பட்டது. அதை மிகுந்த கவனிப்போடுதான் பார்த்தார்கள். எதுவும் பலன் அளிக்கவில்லை. மீண்டும் அது ஓடி விட்டது. அதைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை.

கூடாரம் அமைந்திருந்த திசையை நோக்கி அது சென்றதைக் கண்டதாகச் சிலர் சொன்னார்கள். விறகு வெட்டிகள் மரம் வெட்டக் காட்டுக்குள் போகும்போது ஒரு பிராணியின் துயர்மிக்க குரல் தம் காதுகளில் விழுந்ததாகச் சொல்கிறார்கள். அது எதனுடைய குரலாக இருக்கலாம்; ஜாலியின் குரலா? அல்லது அல்பியோனின் குரலா?

*– காளிந்திசரண் பாணிக்ரஹி*
*எழுதிய நாய் தான் என்றாலும்...*
*என்ற சிறுகதை.*

*(சாகித்ய அகாதமியின் தற்கால*
*இந்தியச் சிறுகதைகள் என்ற நூலிலிருந்து...)*

* * *

# தூத்துக்குடி மாவட்டத்தில் டேனிடா திட்டச் செயல்பாடுகள்




டென்மார்க் நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் டேனிடா திட்டம் விவசாயிகளுக்கும், ஏழை எளிய மக்களுக்கும் பயனளிக்கும் வகையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூத்துக்குடி மாவட்டத்தில் இத்திட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. க. இராஜாராமன், இ.ஆ.ப., அவர்களின் வழிகாட்டுதலுடன் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது.

ஒவ்வொரு ஊராட்சியிலும் கற்றறிந்த வேலையில்லா இளம் தம்பதியரை தேர்வு செய்து, பயிற்சி கொடுத்து அவரவர் பகுதியில் கால்நடைகளுக்கு முதலுதவி, குடற்புழு நீக்கம், உண்ணிப்பேன் நீக்கம், கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி போடுதல், செலவில்லா மற்றும் குறைந்த செலவிலான கால்நடைப் பராமரிப்பு தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்குத் தெரிவித்தல், கால்நடைகளுக்குத் தேவையான பசுந்தீவனம் உற்பத்தி செய்தல், அதன் மூலம் கால்நடை வளர்ப்பில் அதிக மக்களை ஈடுபடச் செய்து வேலைவாய்ப்பையும், அதிகப் பொருட்களை உற்பத்தி செய்வதன் மூலம் தரமான உணவையும், வருமானத்தையும் அதிகரித்தல் குறுகிய காலத்தில் கால்நடைகளின் தரத்தையும், வளர்ச்சியையும் அதிகரித்தல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டம் ஊராட்சிகளில் அறிமுகப்படுத்தும் பொருட்டு, உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு திட்டம் நன்கு விளக்கப்பட்டு, கிராமங்களில் இலவச கால்நடை சிகிச்சை முகாம் நடத்தப்பட்டு, உள்ளாட்சி பிரதிநிதிகள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் மூலம் சிறந்த திறமையுள்ள, தொடர்பு பணி தம்பதியினர் கண்டறியப்பட்டு, தேர்வுக்குழுவின் மூலம் தேர்வு செய்யப்பட்டு, தொடர்ந்து 18 நாட்கள் பயிற்சியளிக்கப்பட்டு பணியமர்த்தப்படுகின்றனர். 18 நாள் பயிற்சியில் கறவை மாடு தேர்வு செய்தல், பசுங்கன்று பராமரிப்பு, வெள்ளாடு செம்மறியாடு பராமரிப்பு, சிறந்த கிடா மற்றும் ஆடு தேர்வு செய்தல், கோழி பராமரிப்பு, கால்நடைகளுக்கான தொற்றுநோய் – அதன் அறிகுறிகள், தடுப்பு முறைகள், குடற்புழு நீக்கம், முதலுதவி செய்தல் போன்ற பராமரிப்பு முறைகள் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மேலும் கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் தடுப்பூசி, கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் மற்றும் வயது கண்டறிதல் ஆகிய தொழில் நுட்ப முறைகள் செய்முறை பயிற்சியாக வழங்கப்படுகிறது. பசுந்தீவனத்தின் முக்கியத்துவம், அதை பயிரிட்டு பராமரிக்கும் முறையும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. பயிற்சிக்குப்பின் அனைத்து தொடர்புப் பணியாளர்களும் அவரவர் பகுதியில் கால்நடைக் கணக்கெடுப்பு எடுத்து, தங்களது பணியைத் தொடங்குகின்றனர்.

கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாமும், கிராம அளவிலான இருநாள் பயிற்சியும் ஊராட்சிக்கு ஒன்று வீதம் அனைத்து ஒன்றியங்களிலும் நடத்தப்பட்டுள்ளது. ஒவ்வொரு பயிற்சியிலும் 45 இலக்கு விவசாயிகள் குடும்பத்திற்கு ஒரு நபர் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு



(ஆண்கள் – 15, பெண்கள் – 30) கால்நடைப் பராமரிப்பு சம்பந்தமான பயிற்சிகள் இருநாள் அளிக்கப்பட்டது. இதுநாள் வரை 160 பயிற்சிகளில் 7,195 இலக்கு விவசாயிகள் (ஆண்கள் –1,267, பெண்கள் – 5,928) பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சி பெண் இலக்கு விவசாயிகள் 19 நபர்கள், பெண் தொடர்புப் பணியாளரைக் கொண்டு கால்நடை வளர்ப்போர் மகளிர் சுயஉதவிக் குழு ஒவ்வொரு ஊராட்சியிலும் ஆரம்பிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கால்நடை வளர்ப்போர் மகளிர் சுயஉதவிக் குழுக்கள் தொடர்புப் பணி தம்பதியரின் சேவைகளை திறம்பட பயன்படுத்தவும், மக்களின் தேவைகளை தொடர்பு பணியாளர்களுக்குத் தெரிவிக்கவும், கால்நடைப் பராமரிப்புத் துறை, உள்ளாட்சித்துறை, விவசாயத் துறை மற்றும் இதர அரசுத்துறை, தொண்டு நிறுவனங்கள் ஆகியவற்றுடன் இணைப்பு மற்றும் வங்கி, தாட்கோ, மகளிர் திட்டம் மற்றும் ஊரக வளர்ச்சி முகமை மூலம் வழங்கப்படும் கடன் மற்றும் அரசு நலத்திட்டங்கள் பெற தீர்மானம் இயற்றி அணுகுதல், பெண்களிடையே சேமிப்புத் திறன், தன்னம்பிக்கை, தலைமை தாங்கும் சக்தி, மகளிரிடையே ஒற்றுமை, விழிப்புணர்வு மற்றும் பொது சேவையில் ஈடுபடுதல் போன்ற நல்ல கருத்துக்களை உருவாக்கி செயல்படுத்துதல்.

தொடர்புப் பணி தம்பதியர் பணிகள் தொடர்ந்து சீராகச் செயல்பட அவர்களுக்கு கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் கோழி தடுப்பூசி கிடைக்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதன் வழி திருநெல்வேலி கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு மற்றும் கோவில்பட்டி கால்நடை மருத்துவமனை மூலம் வழங்கப்படுகிறது. தொடர்புப் பணியாளர்களுக்கான முதலுதவி மருந்துகள் அவ்வப்போது அந்தந்த பகுதி கால்நடை மருந்தக கால்நடை உதவி மருத்துவர்கள் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் தொடர்பு பணியாளர்கள் கால்நடைப் பராமரிப்புத் துறையின் மூலம் நடத்தப்படும் சிறப்பு கால்நடை பாதுகாப்புத் திட்டம், இலவச கால்நடை சிகிச்சை முகாம் ஆகியவற்றில் கலந்துகொண்டு கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கமும், கோழிகளுக்கு தடுப்பூசி போடவும் அனுமதிக்கப்பட்டு, அவர்களது பணி மீண்டும் அங்கீகரிக்கப்படுவதுடன் விளம்பரபடுத்தப் படுகிறது. அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர்களின் தொலைபேசி எண் தொடர்புப் பணியாளரிடம் வழங்கப்பட்டிருப்பதால், அவர்களுடைய கிராமத்தில் உள்ள கால்நடைகளின் அவசர சிகிச்சைக்கு தொடர்புப் பணியாளர்கள் மூலம் கால்நடை உதவி மருத்துவர்கள் அழைக்கப்படுகின்றார்கள். மேலும் தொடர்புப் பணியாளர்கள் அந்தந்த மாவட்ட கால்நடைப் பண்ணைகளை அணுகி, கிரிராஜா கோழிக் குஞ்சுகள், தீவனப்பயிர் கரணைகள் ஆகியவைகளை மக்களின் தேவைக்கேற்ப வாங்கி விற்கின்றனர்.

இத்திட்டம் பெண்கள் வளர்ச்சியில் அதிக ஆர்வம் காட்டிச் செயல்பட்டு, பெண்கள் குடும்பம் மற்றும் பொது வாழ்வில் ஆண்களுக்கு நிகராகச் செயல்பட ஆக்கப்பூர்வமான நடவடிக்கை எடுத்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் 10,231 நபர்கள் (பெண்கள் : 8,722, ஆண்கள்:1,509) ரூ.39,29,610 நிதிப்பயன் அடைந்துள்ளனர். கயத்தார் மற்றும் புதூர் வட்டாரத்தில் ஓராண்டில் இரண்டாவது கால்நடை கணக்கெடுப்பு செய்து முதல் கணக்கெடுப்புடன் ஒப்பிட்டு பார்த்து, கணக்கிட்ட போது ரூ. 8,02,88,400 மதிப்புள்ள கால்நடைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன்மூலம் தொடர்பு பணி தம்பதியர் பணிச் சிறப்பையும், திட்டம் மக்களிடையே ஏற்படுத்தியுள்ள விழிப்புணர்வையும் அறியலாம்.



– துரை. ராஜ்குமார்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
தூத்துக்குடி

❖ ❖ ❖

உங்களின்
நீண்ட நாள்
கனவை
நனவாக்கும்
புதிய திட்டம்

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

மாத சந்தா செலுத்துவீர்!

# 10 வது மாத சந்தா இலவசம்

மேலும்

## அரசு தள்ளுபடி 20% பெற்றிடுவீர்!

ரூ. 12,500/- மதிப்புள்ள
பட்டுப்புடவையை ரூ. 9,000/- க்கு பெறலாம்.
அதுவும் தவணை முறையில்.
இன்றே சேர்ந்து உங்கள் கனவை நனவாக்கிடுவீர்.
**தவறவிடாதீர் இந்த அரியவாய்ப்பை!**



| மாதச் சந்தா ரூ. | அங்கத்தினர்கள் 9 மாதங்களில் செலுத்தும் மொத்த தொகை ரூ. | கோ-ஆப்டெக்ஸ் வழங்கும் 10-வது மாத சந்தா ரூ. | கூடுதல் தொகை (2+3) ரூ. | அரசு தள்ளுபடி ரூ. | அங்கத்தினர் களுக்கு வழங்கப்படும் புடவையின் மதிப்பு ரூ. |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 300 | 2,700 | 300 | 3,000 | 750 | 3,750 |
| 400 | 3,600 | 400 | 4,000 | 1,000 | 5,000 |
| 500 | 4,500 | 500 | 5,000 | 1,250 | 6,250 |
| 600 | 5,400 | 600 | 6,000 | 1,500 | 7,500 |
| 700 | 6,300 | 700 | 7,000 | 1,750 | 8,750 |
| 1,000 | 9,000 | 1,000 | 10,000 | 2,500 | 12,500 |

இந்த வசதி அனைத்து கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

| | | |
|---|---|---|
| 01. தில்லையாடி வள்ளியம்மை பட்டு மாளிகை, | எழும்பூர் | ✆ : 28260775 |
| 02. வானவில், | தேனாம்பேட்டை | ✆ : 24336346 |
| 03. அங்கயற்கன்னி, | மதுரை | ✆ : 2621754 |
| 04. தங்கம் பட்டு மாளிகை, | சேலம் | ✆ : 2260651 |
| 05. அமுத சுரபி, | திருச்சி | ✆ : 2705034 |
| 06. இராஜ ராஜன் வணிகமையம், | தஞ்சாவூர் | ✆ : 231929 |
| 07. காந்திமதி, | திருநெல்வேலி | ✆ : 2334360 |
| 08. மங்கை, | கடலூர் | ✆ : 234474 |
| 09. தீபம், | வேலூர் | ✆ : 2220730 |
| 10. மருதம், | கோயம்புத்தூர் | ✆ : 2380591 |

வாடிக்கையாளர்கள் கோ-ஆப்டெக்ஸ் தலைமை அலுவலகத்தில் உள்ள டிசைன் சென்டருக்கு வருகை தந்து தங்களுக்கு பிடித்த வடிவத்தில் பட்டுச் சேலையை வடிவமைத்துக் கொள்ளலாம்.

Visit us at www.cooptex.com    Visit us at: www.tn.gov.com

**பாரம்பரியத்தின் பெருமை காலத்திற்கேற்ற ரசனை**



R.N.I.NO.21446/70
RGN.NO.TN/PMG/(CCR)836/0
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
லலிதா அவர்
துவக்க
புதிய கட்ட